DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
iHOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

HomeLife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan, Sales Representative
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com
Ragu Thillainathan, Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
Raj Perampalam, Broker
என்னை அழையுங்கள்
Direct: 416-897-9155
Office: 905-201-9977
e-mail : raj.p@rogers.com

PYRAMID GROUP
UTHAYAN SIVARAJAH 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship;
Super visa for parents and grandparents including health insurance;
Citizenship;
Permanent resident card renewal;
Kokulan Baskaran, Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

List Your Property Free
PROPERTYMAX.LK
+94772332300

BIG
Great Coverage. BIG Savings.
Home - Auto - Life - Business
Iggy Thuray, Insurance Broker
416.814.7470
iggy@thebig.ca thebig.ca/iggy

21ம் ஆண்டில்...
27 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
# உதயன்
தித்திக்கும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit
உதயம் 1461 | CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM | Friday April 5, 2024



## Tamil Rights Group's Delegates at the UNHRC's 55th Session and Spotlighted Tamils' Critical Issues

## ஐக்கிய நாடுகள் மனித உரிமை சபையின் 55வது அமர்வில் தமிழர் உரிமைக் குழு சார்பில் கல்பனா நாகேந்திரா

கடந்த வாரம் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 55 வது அமர்வில் கனடா தமிழர் உரிமைக் குழுவின் சார்பில் பங்குபற்றிய கல்பனா நாகேந்திரா அங்கு தமிழர் உரிமைகளுக்காக வாதிடுதல் மற்றும் முக்கியமான பிரச்சினைகளை கவனத்தில் கொள்ளுதல் ஆகியவற்றில் பங்கெடுத்த பின்னர் நாடு திரும்பியுள்ளார்

இந்த அமர்வு தொடர்பாகவும் கனடா தமிழர் உரிமைகள் குழுவின் சார்பில் கலந்து கொண்ட கல்பனா நாகேந்திராவின் பங்களிப்பு சார்பாக மேற்படி அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உள்ளே விபரமான செய்தி 18ம் பக்கத்தில்)

Residential & Commercial Real Estate Services
என்னை அழையுங்கள்
பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam, Sales Representative
RE/MAX Community

## Ontario Minor Track Association honors Tamil Speaking Minor Runners for their achievements

## தமிழ் பேசும் கனிஸ்ட ஓட்டப்பந்தய வீர வீராங்கனைகளை கௌரவித்த Ontario Minor Track Association




தமிழ் பேசும் கனிஸ்ட பிரிவு ஓட்டப்பந்தய வீர வீராங்கனைகள் சிலர் கடந்த 23-03-2024 அன்று பிரம்ரன் மாநகரில் **Ontario Minor Track Association** நடத்திய வருடாந்த விருது விழாவில் அவர்களின் சாதனைகளுக்காக கௌரவிக்கப்பெற்றனர். இந்த விழாவில் மேற்படி தமிழ் பேசும் கனிஸ்ட பிரிவு ஓட்டப்பந்தய வீர வீராங்கனைகளின் பெற்றோர்கள் மற்றும் நண்பர்கள் கலந்து சிறப்பித்தனர்.

இங்கே காணப்படும் படங்களில் வீர வீராங்கனைகள் மற்றும் அவர்களது பயிற்சியாளர் தேவா ஆகியோர் காணப்படுகின்றனர்.

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East, Mississauga, ON, L5A 1W7 905-272-1222
23 -8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1 905-794-4404
online service: www.remitbee.com

Krishna Punniyam
MORTGAGE ALLIANCE
RIGHT TEAM
MORTGAGE AGENT
Purchase & Refinance
First Mortgage
Second Mortgage
Commercial Mortgage
Equity Loan
Mobile: 416.710.9150
ALL IN 1 ACCOUNTING
Personal Income Tax
Corporate Income Tax
HST Returns
Bookkeeping Service
Payroll Service
Audit preparation
Business Startup service

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301 , 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

உதயன் சரவதேச விருது விழா-2024
Uthayan International Awards Festival – 2024
Dance, Music and Awards Presentation
For Tickets and information: 416 732 1608 or 647 762 9512
மண்டபம்:- The Estate Banquet & Event Centre
430 Nugget Ave, Scarborough, ON M1S 4A4
26th May, 2024 Sunday, at 6.00 PM


APRIL 6TH 2024
5:00PM
CANADA EVENT CENTRE
300 WATER ST, WHITBY, ON L1N 9B6
Title Sponsor
PRIMA DANCE SCHOOL EST. 2011
TEKNO MEDIA
Your Protection Champion
Since 2004...
தமிழ்
TORONTO TAMIL.COM
13TH ANNUAL
PRIMA DANCE NIGHT
Mani
OUR SPECIAL GUEST
CHOREOGRAPHERS
TICKET
VVIP | VIP
$25
416.642.4899 www.primadanceschool.com
Dynamica websolutions
VIBRANT HOSPITALITY GROUP
SHIVAS CHICKEN
WHOLE SALE CANADA INC
416-910-3244
186 Bartley Dr. #12A, Toronto, ON
SELLER BUYER REFERAL
WIN PRIZES
SIVA NAGAMANY
647-289-0091
CTS BUILDING SUPPLIES LTD
(416) 840-4538
733 Progress Ave
Scarborough
SIVAPATHAM LEGAL SERVICES
PROFESSIONAL CORPORATION
Landlord and Tenant Board
Small Claims Courts Matters
Notary Public / Commissioner of Oaths
THIRU SIVAPATHAM
416-298-7042
222- 3300 MCNICOLL AVE., SCARBOROUGH
25 Years of Experience
TRAFFIC TICKETS
CRIMINAL MATTER
BANKRUPTCY
K. SUTHARSAN
416-560-6926
LIONEL LOGANATHAN
SAJANTH MOHAN
WWW.SAJANTH.COM
AUTO HOME BUSINESS INSURANCE
VANI KANTHASAMY
CHEETAH DEVELOPMENTS
CONSTRUCTION SERVICES
647- 502 - 0195
N.K.S DRAPERY & BLINDS FABRIC
KETHA
416 321 6420
Chapel Ridge
Vilosan Sivatharman
8911 Woodbine Avenue
Markham, Ontario L3R 5G1
Telephone : (416) 993-0626
Fax : (905) 305-8128
E-mail: vilosan9@hotmail.com
Mrs. Sasikala Narenthira (Founder)
416.677.3511
AKT STYLE
RANJI
416-317-5575
THARANI
416-845-8311
Janakan Pictures
ஆதி சிலம்பம்
Aathi Silambam
Bamboo staff based Martial Art
V.Pathman 416-556-6130

Canada
We acknowledge the financial support of the Government of Canada

உதயன் கதிரோட்டம்

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

# சாந்தனின் உடலை கடல் தாண்டி வந்து கையளித்த சட்டவாதி புகழேந்தி நேற்று மூன்று உயிர்களைக் கடல் தாண்டிக் காவி வந்தார்

'கடந்த 33 வருடங்கள் தினமும் நாங்கள் அனுபவித்ததெல்லாம் கொடிய துன்பங்கள் தான்' என்று அவர்கள் மூவரும் சொல்லிய வசனத்தை நாம் 'சத்திய வசனங்களாக' ஏற்று அவர்களைக் காப்பாற்ற வேண்டும். இன்றிலிருந்து 33 வருடங்களுக்கு முன்னர் ஒரு நாள் இந்தியாவின் கொடிய சிறைகளுக்குள் தள்ளப்பட்டவர்கள். தங்களுக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றங்களிலிருந்து விடுதலை செய்யப்பட்டாலும். தொடர்ந்து தமிழ் அதிகாரிகளின் பார்வையில் இன்னொரு சிறைக்குள் தள்ளப்பட்டார்கள்.

அங்கிருந்த சாந்தன் என்னும் நம்மவர் தாயகம் சென்று தன் தாயின் மடியில் தலைவைத்து துயில் கொள்ளும் நாளுக்காய் காத்திருந்தார்.
ஆமாம்! தன் இறுதி நாட்களை தன்னை ஈன்ற அன்னையோடு இணைந்து வாழ்ந்து அவரைத் தேற்ற வேண்டும் என்ற கனவோடு தமிழகம் என்ற தமிழ் மண்ணிலிருந்த சாந்தனை அங்குள்ளவர்களால் காப்பாற்ற முடியவில்லை.
நேற்று தமிழ்நாட்டிலிருந்து புறப்பட்ட விமானம் ஒன்றில் மூன்று உயிர்களைக் காவி வந்தார் ஒரு சட்டப்போராளி. அவர்தான் சட்டவாதி புகழேந்தி. அவரது பெயருக்கேற்ப அவரது புகழ் ஈழத் தமிழர்கள் மத்தியில் 'மிகுந்த' உச்சத்திற்குச் சென்று விட்டது.

அந்தப் புகழேந்தியின் வாடிய முகத்தை ஒரு தடவை பாருங்கள். எவ்வளவு சோகம் அவரிடத்தில் அடைக்கலம் அடைந்திருக்கின்றது. சிரிப்பையே காண முடியவில்லை. ஆனால் நன்கு சிந்தித்து செயற்பட்ட காரணத்தால் சாந்தனின் உடலை மாத்திரம் கடல் தாண்டி வந்து அவரது தாயாரிடம் கையளித்த சட்டவாதி புகழேந்தி அவர்கள் நேற்று முன்தினம் எம் தமிழ் மண்ணில் உள்ள அவர்களின் உறவுகளிடம் ஒப்படைக்க மூன்று உயிர்களைக் கடல்தாண்டி காவி வந்துள்ளார்.
அவரை நம் தமிழர்கள் கடவுளை வணங்குவது போன்று பூசிக்கின்றார்கள்.
தமிழ்நாட்டில் இப்படி ஆர்ப்பாட்டமில்லாத ஒரு 'மக்கள் அபிமானி' இருக்கின்றாரே என்று எம்மை ஆச்சரியப்பட செய்துள்ள அவர் இப்போது எம் மண்ணில் தங்கியிருந்த தான் கொண்டு வந்த உயிருக்கு உயிரான மூவரின் பாதுகாப்பை உறுதி செய்த பின்னர் தாயகம் செல்லவுள்ளதாக பத்திரிகையாளர்களிடம் பகிர்ந்துள்ளார்.

இவ்வாரத்திற்குரிய எமது 'கதிரோட்டம்' சட்டவாதி புகழேந்தி அவர்களுக்காகப் படைக்கப்படுகின்றது.
இந்த பக்கத்தின் முடிவாக புகழேந்தி அவர்களுக்கு 'முடிசூடுவதைப் போன்ற' வார்த்தைகளை அவருக்காய் தனது முகநூல்ப் பதிவில் படைத்திட்ட தோழர் பாலன் அவர்களது வார்த்தைகளை மரியாதையுடன் இங்கே பதி செய்கின்றோம்.
'தோழர் புகழேந்தி. இவர் வழக்கறிஞர் மட்டுமல்ல தமிழ்த்தேசிய விடுதலையை முன்னெடுக்கும் உணர்வாளரும்கூட.
அதனால்தான் சாந்தன் உடலை கொண்டு வந்து தாயாரிடம் ஒப்படைத்தார்.
அப்போது அவரை சந்தித்து அழுத முருகனின் தாயாரிடம் 'உங்கள் மகனை கொண்டு வந்து ஒப்படைப்பேன்' என உறுதியளித்தார்.
உறுதியளித்தபடி முருகனை அழைத்துவந்து தாயாரிடம் ஒப்படைத்துவிட்டார்.
அதன்மூலம் ஒரு தாயின் 33 வருட கனவை நிறைவேற்றியுள்ளார்.'
இந்த வரிகளோடு சட்டத்தரணி புகழேந்தி அவர்களின் பணியும் சேவைகளும் . முருகன் றொபர்ட்பயஸ், ஜெயக்குமார் போன்று இந்திய சட்டத்துறையின் ஓட்டைகளுக்குள் அகப்பட்டுக் கொண்ட 'அப்பாவிகளுக்கு' கிட்ட வேண்டும் என்று பிரார்த்திப்போமாக!

DIRECTORY | EVENTS
OFFERS
உங்கள் வர்த்தக நிறுவனங்கள் மற்றும் சேவைகள் எங்கள் இணையத் தளத்தில் உள்ளதா?
வியாபார நிறுவனங்களின் விபரங்கள் தேடவும், விழாக்கள் பற்றிய விபரங்கள் அறியவும் செயலியை தரவிறக்கி கொள்ளுங்கள்
விளம்பரம் செய்க! வியாபாரம் பெருக!
www.tamilbee.com 514 616 5595
tamilbeeweb@gmail.com
TamilBee
CANADIAN TAMIL DIRECTORY



Toronto சிட்டி கவுன்சிலர்
PAUL AINSLIE
WARD 24, SCARBOROUGH-GUILDWOOD
HELP IS AVAILABLE
வட்டார மக்களின் தேவை கருதி பின்வரும் சேவைகள் எம்மால் கவனிக்கப்படுகின்றன.

குறைந்த கட்டணத்தில் வீட்டுவசதி
விலங்கு சேவைகள்
உயர்மாடி கட்டட சட்டங்கள்
கட்டட அனுமதி பத்திரங்கள்
பிள்ளை பராமரிப்பு சலுகை
அவசர வீட்டு வசதிகள்
தீயணைப்பு சேவைகள்
கழிவுப் பொருட்கள் சேவை
நூலகச் சேவை
மாநகரத் தேர்தல்
மாநகர அனுமதியும் சட்டங்களும்

Ontario Works
வாகனத் தரிப்பிடங்கள்
பூங்காக்கள்
காவல் துறை
பொதுச் சுகாதாரம்
வீதிகள்
ஆதன வரிகள்
பொதுப் போக்குவரத்து
மீள் சுழற்சியும் பசுமை திட்டமும்
மரங்கள்
நீர் விநியோகம்

நியமன அலுவலகம்
Scarborough Civic Centre
150 Borough Drive, 2nd Floor
Scarborough, ON M1P 4N7
Phone: 416-396-7222
Fax: 416-392-4006

ரொரன்ரோ சிட்டி ஹால் அலுவலகம்
100 Queen Street West,
2nd Floor - Suite C52
Toronto, ON M5H 2N2
Phone: 416-392-4008
Fax: 416-392-4006

councillor_ainslie@toronto.ca www.paulainslie.com
Ward 24 Scarborough-Guildwood @Ainslie_Ward24
@cllrainslie Paul Ainslie (City of Toronto)
www.paulainslie.com 416-396-7222

மிசிசாகா நகரில் வீட்டைச் சுத்தம் செய்தல் போன்ற பணிகளுக்கு மணித்தியாலத்திற்கு $25 சம்பளமாகப் பெறலாம்
மிசிசாகாவில் நகரில் (QEW க்கு தெற்கே), வாரத்தில் இரண்டு முதல் மூன்று நாட்கள் வரை, தமிழ்க் குடும்பம் ஒன்றுக்கு இலங்கை சமையல் மற்றும் சுத்தம் செய்வதில் அனுபவமுள்ள ஒரு பெண் தேவைப்படுகின்றார்.
ஒரு நாளைக்கு 4 மணிநேரம் வேலை செய்யலாம்
மேலதிக விபரங்களுக்கு நிர்மலா
(647) 391-4207

Basement For Rent
ஸ்காபரோவில் Morningside/ Sheppard சந்திப்பிற்கருகாமையில் 1 Bedroom Basement with Separate Entrance உட்பட அனைத்து வசதிகளுடன் வாடகைக்குண்டு.
Available immediately
தொடர்புகளுக்கு: ராஜா
416-464 1853

கனடிய செய்திகள்
Canadian News

## Canadian Women Council and Etobicoke Tamil Seniors Association, jointly celebrated the 'International Women's Day - 2024'

# கனடிய பெண்கள் கழகமும், ஈற்றோபிக்கோ தமிழ் மூத்தோர் அமைப்பும் இணைந்து கொண்டாடிய "சர்வதேச பெண்கள் தினம் – 2024"

கடந்த பல வருடங்களாக கனடாவில் இயங்கிவரும். கனடிய பெண்கள் கழகமும், ஈற்றோபிக்கோ தமிழ் மூத்தோர் அமைப்பும் இணைந்து கொண்டாடிய “சர்வதேச பெண்கள் தினம் - 2024” கடந்த சனிக்கிழமை 30-03-2024 அன்று ஈற்றோபிக்கோ நகரில் அமைந்துள்ள கிப்ளிங்க வடக்கும் சன சமூக நிலைய மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.



விழாவிற்கு அமைப்புக்களின் தலைவி ரோகிணி கருன அவர்கள் தலைமை வகித்தார். சிறப்பு விருந்தினர்களாக ஒன்றாரியோ முதல்வர் டக்போர்ட் அவர்களின் தொகுதி அலுவலகத்தின் முகாமையாளர் மிசல் அவர்களும் “கனடா உதயன்” லோகேந்திரலிங்கம் அவர்களும் அழைக்கப்பெற்றிருந்தார்கள்.









பெண்மணிகள் வழங்கிய கலை நிகழ்ச்சிகள் மற்றும் திறன் காணும் நிகழ்ச்சிகள் பெண்மணிகளுக்காக இடம்பெற்றன.

அத்துடன் கௌரவிப்பு. பாராட்டுரைகள் ஆகியனவும் இடம்பெற்றன. குறிப்பாக உடல் நலம் பற்றிய சிறப்பான விளக்கவுரைகளும் அனுபவம் மிக்க யோகாசனப் பயிற்சி ஆசிரியையினால் நிகழ்த்தப்பட்டன.

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் முன்னாள் தலைவர் திரு. குணநாதன் உட்பட பலர் அங்கு கௌரவிக்கப்பட்டார்கள். இசையாசிரியை திருமதி. லசந்தி ராஜ்குமார் தனது புதல்வி சகிதம் கர்நாடக இசை நிகழ்ச்சி வழங்கினார்கள். மிருதங்கக் கலைஞர் நரேந்திரா அவர்கள் பக்கவாத்திய இசை வழங்கினார்.

மொத்தத்தில் பெண்மணிகள் பலரும் ஆர்வமுள்ள ஆண்கள் பலரும் கலந்து மகிழ்ந்து கொண்டாடிய சர்வதேசப் பெண்கள் தின விழாவாக அன்றைய நிகழ்ச்சி அமைந்தது.

**படங்கள் - ஜஸ்ரின் போல் அவர்கள்**

## Ontario's Education Minister Stephen Lecce says the province is putting $1.3 billion toward building and expanding schools.

# ஒன்ராறியோவில் $1.3 பில்லியன் டாலர்களை புதிய பாடசாலைகளைக் கட்டுவதற்கும் உள்ளவற்றை விரிவுபடுத்துவதற்கும் செலவிடவுள்ளதாக மாகாண கல்வி அமைச்சர் கூறியுள்ளார்

**(ஸ்காபுறோவிலிருந்து ஆர். என். லோகேந்திரலிங்கம்)**

ஒன்ராறியோ மாகணத்தில் $1.3 பில்லியன் டாலர்களை புதிய பாடசாலைகளைக் கட்டுவதற்கும் உள்ளவற்றை விரிவுபடுத்துவதற்கும் செலவிடவுள்ளது என்கிறார் மாகாண கல்வி அமைச்சர்.

27,093 புதிய மாணவர் இடங்கள் மற்றும் 1,759 குழந்தை பராமரிப்பு இடங்களை உருவாக்க இந்த பணம் செல்லும் என்று அவர் தெரிவித்துள்ளார். நேற்று வியாழக்கிழமை ரொறன்ரோ பெரும்பாகத்தில் உள்ள பல்லின பத்திரிகையாளர்களை இணைய வழியில் சந்தித்து உரையாடிய அமைச்சர் அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், “எமது ஒன்றாரியோ மாகாணத்தின் சமீபத்திய வரவு செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்டுள்ளபடி, பாடசாலைகள் மற்றும் குழந்தை பராமரிப்பு இடங்களை உருவாக்க அடுத்த 10 ஆண்டுகளில் $16 பில்லியன் டாலர்களை செவு செய்ய தமது அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகவும் இதில் ஒரு பகுதியான 1.3 மில்லியன் டாலர்கள் தற்போது செலவு செய்யப்படுகின்றதாகவும் தெரிவித்தார்.

பாடசாலைகளை நிர்மானிக்கும் கட்டுமான காலக்கெடுவை பாதியாக குறைக்கும் திட்டத்தையும் அறிமுகப்படுத்தியுள்ளதாக அமைச்சர் கூறுகிறார், புதிய பாடசாலைகள் கட்டுமானத்தின் வடிவமைப்பை தரநிலைப்படுத்த பலகைகளை ஊக்குவித்து, அதனால் அவை வேகமாக கட்டப்படும். எனவும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.



அமைச்சரின் இந்த அறிவிப்பு தொடர்பாக அங்கு உரையாற்றிய ஒன்றாரியோ மாகாணத்தின் கல்வி சபைகளின் சம்மேளனத் தலைவர் கேத்தி ஆப்ரஹாம், இந்த திட்டத்தில் மாகாணம் முழுவதும் உள்ள மாணவர்கள் நவீன, அதிநவீன கற்றல் சூழல்களை அணுகுவதை உறுதிசெய்ய உதவும் என்கிறார்.

2018 முதல், ஒன்றாரியோ பாடசாலைகள் தொடர்பான 300 க்கும் மேற்பட்ட திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்துள்ளது அல்லது ஆதரவளித்துள்ளது என்றும், அவற்றில் 100க்கும் மேற்பட்டவை தீவிரமாக கட்டிமுடிக்கப்படும் நிலையில் உள்ளன என்றும் கல்வி அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# ஈற்றோபிக்கோ நகரில் இயங்கிவரும் "கிராமத்து வதனம்" பெண்கள் அமைப்பின் ஏற்பாட்டில் "சர்வதேச மகளிர் தினம் – 2024"



கனடாவின் ஒன்றாரியோ மாகாணத்தில் ஈற்றோபிக்கோ நகரில் சிறப்பாக இயங்கிவரும் “கிராமத்து வதனம்” பெண்கள் அமைப்பின் ஏற்பாட்டில் “சர்வதேச மகளிர் தினம் - 2024” கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று மதியத்திற்குச் சற்று பின்னர் ஆரம்பமாகி மாலை வரை சிறப்பாக நடைபெற்றது.



அமைப்பின் தலைவி திருமதி கமலவதனா சுந்தா தனது சக அங்கத்தவர்களுடன் இணைந்து மேற்படி விழாவை சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார்.

இயல் இசை மற்றும் உரைகள் ஆகியன இடம்பெற்றன. அங்கு இடம்பெற்ற கலைநிகழ்ச்சிகளில் இளைய மற்றும் வளர்ந்த பெண்களின் பங்களிப்புக்கள் அதிகளவில் இருந்தன.



அன்றைய விழாவில் முக்கிய அம்சமாக “வதனம்” என்னும் காலாண்டு சஞ்சிகை வெளியிடப்பெற்றது. மேற்படி சஞ்சிகையின் முதன்மை ஆசிரியராக எழுத்தாளர் குரு அரவிந்தனும் இணைஆசிரியராக செல்வி கவிநயா விஜயதர்ஷனும். நிர்வாக ஆசிரியராக கமலவதனா சுந்தாவும் இணைந்துள்ளார்கள். அத்துடன் மேலும் பல இளையோரும் இந்த வெளியீட்டு முயற்சியில் தங்களை இணைத்துக்கொண்டுள்ளார்கள்.

கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் தலைவர் அகணி சுரேஸ் அவர்கள் மேற்படி சஞ்சிகையின் வெளியீட்டுரையை ஆற்றிய பின்னர் அதனை வெளியிட்டு வைத்தார்.

அதன் பிரதிகளை சபையிலிருந்து எழுத்தாளர்களும் கவிஞர்களும் ஏனைய வாசகப் பெருமக்களும் பெற்றுக்கொண்டார்கள்.

TRADITIONAL CHINESE
ACUPUNCTURE THERAPY

| எல்லாவிமான வலிகளுக்கும் | All Pain & Aches, Arthritis |
|---|---|
| ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை | Asthma, Sinusitis, Rhinitis Allergies |
| மனத்தளர்ச்சி, தலைவலி aches | Stress, Migraine & All Types of Head- |
| நீரிழிவு நோய், வயிற்றுவலி | Diabetes, Gastric Pain, Ulcer |
| மாதவிடதய் சம்மந்தமானவையும் | Menstruation |
| உடற்பருமன் குறைத்தல் | Weight Loss |

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
Acupuncturist (R.A.C)
தொடர்புகொள்ளவும்.
(416) 754-4024
5200 Finch Ave., East -- Suit #349
Scarborough, ON M1S 4Z5

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# வினைத்திறனற்ற செயற்பாடு காரணமாக சமுர்த்தி சங்கத்திற்கு தற்காலிக குழு ஒன்று நியமிக்கப்படுவதாக அமைச்சர் அறிவிப்பு!

யாழ்ப்பாண மாவட்டத்தில் சமுர்த்தி சங்கத்தின் செயற்பாடுகள் வினைத்திறனற்ற வகையிலும் தூர நோக்கற்ற குறுகிய செயற்பாடுகளுடனும் இருந்துவருகின்றமையால் எந்த நோக்கத்திற்காக சமுர்த்தி திட்டம் கொண்டுவரப்பட்டதோ அதை முழுமையான இலக்க நோக்கி கொண்டு செல்வதற்காக தற்காலிகமாக விசேட குழு ஒன்று நியமிக்கப்படுவதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் முன்னெடுக்கப்படும் சமுர்த்தி வேலைத் திட்டங்களை சமூக வலுவூட்டலை நோக்கி முன்னெடுக்கும் நோக்கில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஆலோசனைக்கு அமைய 04.04.2024 அன்று இடம்பெற்ற கலந்துரையாடலின்போது சமுர்த்தி உத்தியோகத்தர்களால் புதிய நிர்வாகம் தெரிவுசெய்யப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்ட நிலையில் அமைச்சரால் இவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

குறிப்பாக சமூர்த்தி அதிகளவான உத்தியோகத்தர்கள் தற்போதுள்ள அபிவிருத்திச் சங்கத்தினால் எவ்வித நன்மைளோ அன்றி செயற்பாடகளோ நடைபெறுவதில்லை என்றும் வெறுமனே பழிவாங்கல்களும் இடமாற்றங்களுமே முன்னெடுக்கப்படுவதாகவும் சுட்டிக்காட்டியதுடன் நிர்வாகத்தை மீள தெரிவுசெய்யுமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கோரிக்கை விடுத்தனர்.

இந் நிலையிலேயே தற்காலிக விசேட குழு ஒன்றை அமைக்கப்படுவதாக அமைச்சர் தெரிவித்திருந்தார்.



இதன்போது மேலும் தெரிவித்த அமைச்சர், எமது மாவட்டத்தில் முன்னெடுக்கப்படும் தேசிய வேலைத் திட்டங்கள எமது மக்களின் எதிர்பார்ப்புக்களையும் அபிலாசைகளையும் நிறைவேற்றும் வகையிலேயே முன்னெடுக்கப்பட வேண்டும். இதை வேறொரு இடத்திலிருந்து நிர்வகிக்கவோ நிர்ணயிக்கவோ முடியாது.

அவ்வாறான நிலைக்கு நான் அனுமதிக்கவும் மாட்டேன்.

அதனடிப்படையில் பிரதேச ரீதியான நிர்வாகங்களை கட்டமைப்பிலுள்ள இடர்பாடுகளை கருத்திற்கொண்டு தான் மாவட்ட ரீதியில் ஒரு விசேட குழுவை நியமிமிக்க நடவடிக்கை எடுத்துள்ளேன்.

அத்துடன் குறித்த குழு துரிதமாக பிரதேச ரீதியான கட்டமைப்பை உருவாக்கி சமுர்த்தி திணைக்களத்தினை வினைத்திறனாக கொண்டு நடத்துவதற்கும் மக்களுக்கு தேவையான சேவைகளை தடையின்றி வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்குமாறும் அமைச்சரால் அறிவுறுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# வவுனியாவில் ஆசிரியரின் தாக்குதலுக்குள்ளான மாணவன் வைத்தியசாலையில் அனுமதி



வவுனியா - சுந்தரபுரம் பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றில் தரம் இரண்டில் கல்வி பயிலும் மாணவன் மீது ஆசிரியர் கண்முடித்தனமாக தாக்கியதில் மாணவன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த சம்பவம் 3ம் திகதி புதன்கிழமை இடம்பெற்றுள்ளது.

வவுனியா - சுந்தரபுரம் பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றில் கல்வி பயிலும் மாணவன் பாடசாலை முடிந்து வீட்டிற்கு சென்ற சிறுவனின் முகத்திலும் தலையிலும் அடி காயங்கள் காணப்பட்டதை அடுத்து பெற்றோர் சிறுவனிடம் விசாரித்ததில் அவரது ஆசிரியர் தாக்கியதாக தெரிவித்துள்ளான்.

இதனை தொடர்ந்து சிறுவனின் தந்தை குறித்த ஆசிரியருக்கு தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு சிறுவனை தாக்கியதற்கான காரணம் என்ன மற்றும் காலுக்கு கீழ் அடித்து இருக்கலாமே என்றும் கூறியுள்ளார்.

இதற்கு பதில் அளித்த ஆசிரியர் உங்கள் மகனுக்கு கற்பித்த பாடம் தெரியவில்லை என்றும் அதனாலேயே அடித்தேன் என்றும் அடிக்கும் போது சிறுவன் அங்கும் இங்கும் ஓடியதால் முகத்தில் காயம் ஏற்பட்டு விட்டது என்று பதிலளித்துள்ளார்.

அத்துடன் இவ்வாறு கேள்வி கேட்கும் நீங்கள் நாளையுடன் பிள்ளையை வந்து கூட்டி சென்று விடுங்கள் என்று எந்தவித குற்ற உணர்ச்சியும் இன்றி ஆசிரியர் பதில் அளித்துள்ளார்.

அதை ஆட்சேபிக்க பெற்றோர் சிறுவனை நோயாளர் காவு வண்டி மூலம் வவுனியா பொது வைத்தியசாலையில் கொண்டு சென்று அனுமதித்துள்ளனர்.




இந்நிலையில் சிறுவனின் நெற்றியில் காயமும் கண் பாதிப்படைந்துள்ளதாகவும் பெற்றோர் தெரிவிக்கின்றனர்.

மேலும் இது தொடர்பாக வைத்தியசாலை பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதுடன் சட்ட வைத்திய அதிகாரியின் விசாரனைக்கும் உட்படுத்த பட உள்ளமை குறிப்பிடத்தக்கது.



இலங்கை செய்திகள்
Sri Lanka News

பு. கஜிந்தன்

# "காரத்திகைப் பூ இல்லை காந்தள் பூ" ஆசிரியர்களுக்கு "சப்றைஸ்" கொடுக்கவே செய்தோம் — பொலிஸாருக்கு "வகுப்பு எடுத்த" மாணவர்கள்



யாழ்ப்பாணம் யூனியன் கல்லூரியில் இடம்பெற்ற இல்ல மெய்வல்லுனர் போட்டியில் கார்த்திகைப் பூ மற்றும் இராணுவ வாகனத்தை ஒத்த அலங்காரங்கள் சனிக்கிழமை காட்சிப்படுத்தப்பட்டது.

குறித்த விடயம் தொடர்பில் தெல்லிப்பழை பொலிஸார் சில மாணவர்களையும் ஆசிரியர்களையும் ஞாயிற்றுக்கிழமை விசாரணைக்காக பொலிஸ் நிலையம் வருமாறு அழைத்தனர்.

விசாரணைக்காக மூன்று மாணவர்கள் சென்றதாகத் தெரிவிக்கப்படும் நிலையில் பொலிஸார் விசாரணையில் நீங்கள் இல்ல அலங்காரம் செய்தது கார்த்திகைப் பூவைத் தானே இதற்கான ஆலோசனைகளை ஆசிரியர்கள் தானே வழங்கினார்கள் என கேள்வி எழுப்பினார்.

இதன் போது பதில் வழங்கிய மாணவர்கள் நீங்கள் கூறுவதைப் போல குறித்த பூ கார்த்திகைப் பூ என நாங்கள் அறிந்திருக்கவில்லை காந்தள் மலர் என அறிந்துள்ளோம் எமது பாடப்புத்தகத்தில் அவ்வாறே உள்ளது.

அது மட்டுமல்லாது வருடத்தில் ஒரு முறை பூக்கும் அரிய மலர் அதனை பாதுகாக்க வேண்டும் என்பதற்காகவே காட்சிப்படுத்தினோம்.

இதன் போது கேள்வி எழுப்பிய பொலிஸார் உங்கள் இல்ல அலங்காரத்திற்கான ஆலோசனையை ஆசிரியர்கள் தானே வழங்கினார்கள் எனக் கேள்வி எழுப்பினார்.

இதன் போது பதிலளித்த மாணவர்கள் ஆசிரியர்களுக்கும் காந்தள் பூ இல்ல அலங்காரத்திற்கும் தொடர்பு இல்லை நாங்கள் இவ்வாறு அமைக்கப் போகிறோம் என அவர்களுக்கு தெரியப்படுத்தவும் இல்லை "சப்றைஸ்" வழங்க வேண்டும் என்பதற்காக தெரியாமல் வைத்தோம் என்றனராம்.

இதன் போது பல்வேறு வழிகளில் குறித்த இல்ல அலங்காரத்திற்கும் பாடசாலை ஆசிரியர்களுக்கும் முடிச்சுப் போட பொலிஸார் முனைந்த நிலையிலும் மாணவர்கள் ஒரே பதிலையை மீண்டும் மீண்டும் கூறினர்.

இந் நிலையில் பாடசாலை அதிபரும் பொலிஸ் நிலையத்திற்கு வாக்கு மூலம் வழங்க அழைக்கப்பட்ட நிலையில் தனது வாக்குமூலத்தில் ஏற்கனவே இல்ல மெய்வல்லுனர் போட்டிக்கான பாடசாலை ஆசிரியர்கள் கூட்டத்தில் தெளிவாக கூறினேன்.

ஏற்கனவே கிளிநொச்சியில் இடம்பெற்ற இல்ல அலங்காரம் அது தொடர்பில் எழுந்த சர்ச்சை தொடர்பில் கூட்டத்தில் தெரிவித்தேன்.

இவ்வாறான அலங்காரம் தொடர்பில் தானும் அறிந்திருக்கவில்லை என வாக்குமூலத்தில் தெரிவிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

# கண் மற்றும் கால் வலி தாங்க முடியாது கல்வியங்காடு பகுதியை சேர்ந்த குடும்பஸ்தர் உயிர்மாய்ப்பு!

கண் மற்றும் கால் வலி காரணமாக தவறான முடிவெடுத்து குடும்பஸ்தர் ஒருவர் உயிர்மாய்த்துள்ளார். புதிய செம்மணி வீதி, கல்வியங்காடு பகுதியை சேர்ந்த கோபால் புஸ்பராசா (வயது 65) என்ற நான்கு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், குறித்த நபர் சில காலங்களுக்கு முன்னர் கீழே விழுந்த நிலையில் இரண்டு கால்களிலும் சத்திரசிகிச்சை செய்யப்பட்டு கிளிப் பொருத்தப்பட்டுள்ளது. அத்துடன் இவருக்கு கண் வலியும் காணப்படுகிறது.

இந்நிலையில் இரண்டு வலிகளும் தாங்க முடியாத நிலையில் அவரது வீட்டில் உள்ள மாட்டு கொட்டகையில் தூக்கிட்டுள்ளார். இந்நிலையில் அவர் மீட்கப்பட்டு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்படும் வேளை இடையில் உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ. ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

# பயணிகளுக்கு இடையூறுகளை ஏற்படுத்தும் யாழ் மத்திய பேருந்து நிலையம் — பொது மக்களால் அமைச்சருக்கு முறைப்பாடு — நேரில் சென்று பணிப்புரை விடுத்தார் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா!

முறையான அனுமதி பெறாமலும், பயணிகளுக்கு இடையூறுகளை ஏற்படுத்தும் விதமாகவும் யாழ் மத்திய பேருந்து நிலைய வளாகத்தில் கடைகளை அமைத்துள்ள விடயம் தொடர்பில் நேரில் சென்று ஆராய்ந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவ்விடயம் தொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு பணிப்புரையை வழங்கியுள்ளார்.

முன்பதாக யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்திற்குன்று (03.04.2024) அன்றுதிடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா யாழ். மத்திய பேருந்து நிலைய வளாகத்தில் நிலவும் குறைபாடுகள் தொடர்பில் ஆராய்ந்தது கொண்டார்.

குறிப்பாக மத்திய பேருந்து நிலையத்தில் காணப்படும் பொது மலசலகூடப் பகுதியானது சுகாதாரச் சீர்கேட்டுடன் காணப்படுவதாகவும், துர்நாற்றம் வீசுவதாகவும் பொது மக்களால் அமைச்சருக்கு முறைப்பாடு செய்யப்பட்டிருந்த நிலையிலேயே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா குறித்த குதியை பார்வையிட அங்கு சென்றிருந்தார்.



இந்நிலையில் குறித்த பகுதியில் அடையாளம் காணப்பட்டுள்ள பிரச்சினைகளை பொது மக்களுக்கு அசோகரியம் ஏற்படாத வகையில் நடவடைக்கை மேற்கொள்ளுமாறு துறைசார் தரப்பினருக்கு பணிப்புரை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



# சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குள்அனுமதிப்பத்திரம் இன்றி மணல் ஏற்றிச் சென்ற 4 வாகனங்களுடன் சாரதிகள் கைது!



சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குள் சட்டவிரோதமாக மணல் அகழ்வில் ஈடுபட்ட மற்றும் உரிய அனுமதிப் பத்திரங்கள் இன்றி மணல் ஏற்றிச் சென்ற 4வாகனங்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டிருப்பதுடன் - அதன் சாரதிகளும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மறவன்புலோ - கோவிலாக்கண்டிப் பகுதியில் 03/04 புதன்கிழமை அதிகாலை வேளையில் சட்டவிரோதமாக மணல் அகழ்வில் ஈடுபட்டுக்கொண்டிருந்த உழவியந்திரம் ஒன்றையும் - அதன் சாரதியையும் சாவகச்சேரிப் பொலிஸார் கைது செய்திருந்தனர்.

அத்துடன் கடந்த செவ்வாய்க்கிழமை உரிய அனுமதிப் பத்திரம் இன்றியும் - அனுமதிப் பத்திரத்தில் மோசடி மேற்கொண்டும் மணல் கடத்தலில் ஈடுபட்ட மூன்று டிப்பர் வாகனங்கள் மற்றும் அதன் சாரதிகளையும் சாவகச்சேரிப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

# யாழ்ப்பாணக்குடாநாட்டுப் போக்குவரத்து இறுக்கமான கண்காணிப்பு — பிரதிப்பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு



யாழ்ப்பாணக் குடாநாட்டில் இன்றுமுதல் போக்குவரத்து நடைமுறைகள் இறுக்கமாகக் கண்காணிக்கப்படும். அதற்குரிய சிறப்புச் செயற்றிட்டங்கள் யாழ்ப்பாணம் மாவட்ட மாவட்ட பிரதிப்பொலிஸ் மா அதிபர் காளிங்க ஜெயசிங்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: யாழ்ப்பாணக் குடாநாட்டின் போக்குவரத்தைச் சீர்செய்வது தொடர்பில் பல்வேறு செயற்றிட்டங்கள் பரிசீலிக்கப்பட்டு இன்றுமுதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

யாழ்ப்பாணத்தில் தலைக்கவசம் இல்லாமல் வாகனங்களைச் செலுத்துகின்றவர்கள், திறன்பேசிகள் மற்றும் அலைபேசிகளைக் கதைத்தபடி சாரத்தியத்தில் ஈடுபடுகின்றவர்கள், பாதசாரிகள் கடவைகள் இருக்கத்தக்கதாக அதற்கு அருகாக வீதியைக் கடக்கின்றவர்கள், வீதிகளில் வாகனங்களின் பயணப்பாதையில் எச்சில், வெற்றிலை என்பனவற்றைத் துப்புகின்றவர்கள், போக்குவரத்து ஒழுக்க மீறல்களில் ஈடுபடுகின்றவர்கள் மீது இன்றுமுதல் சட்டம் கடுமையாக நடைமுறைப்படுத்தப்படும்.

அத்துடன், பாடசாலைகள், கல்வி நிலையங்கள் மற்றும் வணிக வளாகங்களுக்கு அருகாகவும் நெரிசல் மிகுந்த இடங்களிலும் கூடுதலான பொலிஸார் களமிறக்கப்பட்டு வீதிப் பாதுகாப்பு நடவடிக்கைகள் இன்றுமுதல் பலப்படுத்தப்படுகின்றன.

கடந்த வருடம் மேற்கொள்ளப்பட்ட போக்குவரத்து விழிப்புணர்வுத் திட்டத்தை இந்த வருடமும் தொடர்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே, பொதுமக்கள் சீரானதும் ஆரோக்கியமானதுமான போக்குவரத்தை மேற்கொண்டு, தேவையற்ற அசௌகரியங்களைத் தவிர்க்குமாறு அறிவுறுத்தப்படுகின்றனர் என்கின்றனர்.

# அனலைதீவில் சூரிய ஒளி மற்றும் காற்றாலை மின்சாரம் உற்பத்தி நிலையத்திற்கான பூமி பூஜை நிகழ்வு!



சூரிய ஒளி மற்றும் காற்றாலை மின்சாரம் உற்பத்தி - அனலைதீவில் பூமி பூஜை நிகழ்வு நடைபெற்றது.

அனலைதீவு பகுதியில் நிர்மாணிக்கப்படவுள்ள சூரிய ஒளி மின்சாரம் மற்றும் காற்றாலை மின்சாரம் உற்பத்திக்கான பூமி பூஜை நிகழ்வு 04.04.2024 வியாழக்கிழமையன்று இடம்பெற்றது.

இலங்கை இந்திய அரசுகள் ஏற்படுத்திக்கொண்ட இணக்கப்பாட்டுக்கு அமைய இந்திய தனியார் நிறுவனத்தின் நிதி உதவியுடன் அனலைதீவில் அமைக்கப்படவுள்ள சூரிய ஒளி மின்சாரம் மற்றும் காற்றாலை மின்சாரம் உற்பத்திக்கான காற்றாலை அமையவுள்ள.

அனலைதீவு தெற்கு பகுதியில் இந்திய நிறுவன மின் பொறியியலாளர் தினேஷ் பாண்டியன் முன்னிலையில் "பூமி பூஜை" ஆரம்ப நிகழ்வு அன்று காலை இடம்பெற்றது.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# அரசியலமைப்பில் எந்த மாற்றத்தையும் செய்கின்ற அதிகாரம் ஜனாதிபதிக்கு இல்லை என்கிறார் பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீன்

மன்னார் நிருபர்

(02-04-2024)

ஜனாதிபதி தேர்தலை பொறுத்தவரையிலே ஜூலை மாதத்திற்கு பின்னர் தேர்தலுக்கான வேலைப்பாடுகளை செய்ய வேண்டிய கடமை தேர்தல் ஆனையத்திற்கு உள்ளது.

அக்டோபர் மாதமளவில் தேர்தலை நடத்தியாக வேண்டும். இதைத்தான் எங்கள் அரசியலமைப்பு சொல்லுகின்றது. அதில் எந்த மாற்றங்களையும் செய்கின்ற அதிகாரம் ஜனாதிபதிக்கு இல்லை என அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

மன்னார் மாவட்டத்தில் முசலி பகுதியில் விவசாயிகளுக்கு இலவச விதைகள் வழங்கி வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்

அவர் மேலும் தெரிவிக்கையில், ஜனாதிபதி தேர்தல் வந்தே தீரும். அதற்கு முன்னர் ஜனாதிபதி விரும்பினால் பாராளுமன்றத்தை கலைத்து தேர்தலை வைக்கலாம் அவ்வாறு இல்லை என்றால் ஜனாதிபதி தேர்தல் ஒக்டோபரில் நடந்தே தீரும். இல்லை என்றால் எதிர் காலத்திலே இந்த நாடு இருள் மயமாகிவிடும்.

அதுமட்டுமல்லாமல் உலக நாடுகள் அனைத்தும் எமது நாட்டை உற்று நோக்கி பார்த்து கொண்டிருக்கிறார்கள். பொருளாதாரத்தில் வீழ்ந்து உலகத்திற்கு 50 பில்லியன் அளவில் கடன் செலுத்த வேண்டிய நாடாக இருக்கின்ற எமது நாட்டில் ஜனநாயக ரீதியில் ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படுகின்ற விடயத்தில் எந்த ஒரு கேள்விக்கு உட்படுத்தும் விடயமோ அல்லது நிறுத்தப்படுவதோ அல்லது வேறு சாட்டுக்களை சொல்வதோ முடியாத விஷயமாக இருக்கும் எனவும் தெரிவித்தார்.



மேலும் தேசிய மக்கள் சக்தியுடன் இணைந்தே கடந்த பாராளுமன்ற தேர்தலில் போட்டியிட்டோம் அதனை தொடர்ந்து தற்போது வரை அதே கூட்டணி யுடன் பயணித்து வருகிறோம். ஜனாதிபதி தேர்தல் அறிவிக்கப்படுகின்ற போது எமது கட்சியின் உயர்பீடம் தேர்தலில் எந்த வேட்பாளரை தெரிவு செய்வது என்பது தொடர்பில் இறுதி முடிவெடுக்கும் எனவும் தெரிவித்துள்ளார்.



# மன்னார் பொலிஸ் நிலையம் சென்ற குடும்பஸ்தர் மீது மன்னார் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தாக்குதல்

## காயமடைந்த குடும்பஸ்தர் வைத்தியசாலையில் அனுமதி

(2-4-2024)

மன்னார் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மற்றும் தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் இணைந்து செவ்வாய்க்கிழமை (2) காலை மன்னார் பொலிஸ் நிலையம் சென்ற இளம் குடும்பஸ்தர் ஒருவர் மீது கடுமையான தாக்குதல் மேற்கொண்டுள்ள நிலையில் குறித்த குடும்பஸ்தர் காயங்களுக்கு உள்ளான நிலையில் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவ்விடயம் குறித்து தாக்குதலுக்கு உள்ளான குறித்த குடும்பஸ்தர் கருத்து தெரிவித்தார்.

மன்னார் பள்ளிமுனை கிராமத்திற்கு திங்கட்கிழமை மாலை மன்னார் பொலிஸ் நிலையத்தை சேர்ந்த இரு பொலிஸார் சென்று பிரிதொரு நபரின் பெயரை கூறி அவரை விசாரித்து உள்ளனர்.

இதன் போது குறித்த வீட்டில் தாக்குதலுக்கு உள்ளான பிரதீபன் (வயது-42) என்ற குடும்பஸ்தர் இருந்துள்ளார்.

அங்கு சென்ற பொலிஸார் வீட்டின் உரிமையாளரை கேட்ட போது அவர் இல்லை என தெரிவித்துள்ளனர். உடனடியாக குறித்த குடும்பஸ்தரின் இரு கையடக்க தொலைபேசியும் பறித்ததோடு,அவருடைய மோட்டார் சைக்கிளையும் எடுத்துக் கொண்டு மன்னார் பொலிஸ் நிலையம் கொண்டு சென்றனர்.

இந்த நிலையில் குறித்த குடும்பஸ்தர் 21-03-2024 மன்னார் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்ய சென்றுள்ளார்.

இதன் போது அங்குள்ள அதிகாரிகள் மன்னார் பொலிஸ் நிலையம் சென்று முறைப்பாட்டை பதிவு செய்து விட்டு வருமாறு தெரிவித்தனர்.

இந்த நிலையில் குறித்த குடும்பஸ்தர் மன்னார் பொலிஸ் நிலையம் சென்றுள்ளார்.

இதன் போது மோட்டார் சைக்கிளின் ஆவணங்களை கேட்டுள்ளனர். இதன் போது ஆவணங்களை பொலிஸாரிடம் வழங்கியுள்ளார்.

பின்னர் கையடக்க தொலைபேசி மற்றும் மோட்டார் சைக்கிலை கேட்டபோது மன்னார் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கூரிய ஆயுதம் ஒன்றினால் பல தடவைகள் என்னை தாக்கினார்.

பொது மக்கள் மற்றும் ஏனைய பொலிஸார் பார்த்துக் கொண்டு இருந்தனர். அவர் கட்டு மிராண்டி தனமாக நடந்து கொண்டார்.

என்னிடம் எவ்வித விசாரனைகளும் மேற்கொள்ளவில்லை. என்னிடம் பறித்த பொருட்களையும் தரவில்லை.என்ன போக சொன்னார்கள்.நான் வைத்தியசாலைக்கு வந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டேன். என அவர் மேலும் தெரிவித்தார்.

குறித்த குடும்பஸ்தர் மன்னார் பொலிஸாரால் தாக்கப்பட்ட சம்பவம் குறித்து அவரது மனைவி மன்னார் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.


THANA INSURANCE Inc.

Thana Insurance Inc

NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 10 K | 22 | 20 | 22 | 20 | 25 | 23 | 34 | 29 | 45 | 37 |
| 25 K | 37 | 34 | 47 | 40 | 54 | 49 | 76 | 64 | 106 | 84 |
| 50 K | 69 | 62 | 89 | 75 | 104 | 92 | 147 | 123 | 206 | 162 |
| 100 K | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 241 | 406 | 318 |
| 200 K | 260 | 231 | 337 | 282 | 398 | 353 | 572 | 476 | 807 | 631 |

20 YEARS TERM - NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | 32 | 26 | 50 | 40 | 86 | 60 | 140 | 94 | 265 | 171 |
| 200 K | 60 | 46 | 103 | 74 | 166 | 115 | 275 | 182 | 468 | 321 |



Call us Today

Cell : 416-728-5772
Office : 416-519-3896

20 வருடம் மட்டுமே பணம் செலுத்தும் காப்புறுதி

மருத்துவ பரிசோதனை இல்லாத காப்புறுதி

சாரதி அனுமதிப்பத்திரம் பறிமுதல் செய்யப்பட்டு காப்புறுதி செய்யமுடியாமல் இருப்பவர்களிற்கும்

உங்கள் காப்புறுதி முகவர் தற்போது சேவையில் இல்லாவிடின் உங்கள் திட்டத்தை இரத்து செய்யாமல் அதில் இலவசமாக மாற்றங்களை செய்ய என்னை அழையுங்கள்

Thana Manickavasagar
Insurance Broker
thana7@gmail.com
www.thana.ca
fax : 647-547-8147
80 Nashdene Road ,#D218,
Scarborough,ON,M1V 5E4

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# கார்த்திகைப் பூ
# தமிழ்த் தேசியஇனத்தின் தாயகச்சூழலின் அடையாளம்

## பொ. ஐங்கரநேசன் சுட்டிக்காட்டு



கார்த்திகைப்பூவை இலங்கை அரசும் அதன் இராணுவமும் அரசு விடுதலைப்புலிகளின் இலச்சினையாகவே பார்க்கிறது. இதனாலேயே தெல்லிப்பளை யூனியன் கல்லூரியின் மெய்வல்லுநர் போட்டியில் இல்லமொன்றை அழகுபடுத்துவதற்காகக் கார்த்திகைப்பூவை வடிவமைத்த மாணவர்கள் காவல்துறையினால் அறிவிலித்தனமாக விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளார்கள். கார்த்திகைப்பூவை விடுதலைப்புலிகள் தேசியமலராகத் தெரிவுசெய்திருந்தார்கள் என்பதற்காக அது விடுதலைப்புலிகளை அடையாளப்படுத்தும் பூ அல்ல. அது தமிழ்த்தேசிய இனத்தின் தாயகச் சூழலின் அடையாளம் என்று தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் சுட்டிக்காட்டியுள்ளார்.

தெல்லிப்பளை யூனியன் கல்லூரியின் மெய்வல்லுநர் போட்டியில் இல்லமொன்று கார்த்தகைப்பூவின் உருவத்தை உருவாக்கி வைத்திருந்தமையால் மாணவர்கள் சிலரும் கல்லூரி நிர்வாகமும் காவல்துறையினரால் விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளனர். இது தொடர்பாக பொ.ஐங்கரநேசன் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு சுட்டிக்காட்டியுள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழர்கள் சுற்றுச்சூழலைக் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்று ஐந்திணைகளாக வகுத்து இயற்கையோடு இசைந்த வாழ்வை மேற்கொண்டு வந்தவர்கள், சங்கத் தமிழர்களால் காந்தள் என அழைக்கப்பட்ட கார்த்திகைப்பூ இப்போதும் தமிழ் வாழ்வுக்கு மிகவும் நெருக்கமான பூக்களில் ஒன்றாகவே இருந்துவருகிறது. சங்கக்கவி கபிலர் தொடங்கி தாயகக்கவி புதுவை இரத்தினதுரை வரை கார்த்திகைப் பூவைப் பற்றிப்பாடாத புலவர்களே இல்லையென்னும் அளவுக்குத் தமிழ் வாழ்வியலில் கார்த்திகைப்பூ மிகுந்த முக்கியத்துவம் பெற்றிருக்கிறது. இதன் காரணமாகவே இந்தியாவில் தமிழ்நாடு கார்த்திகைப்பூவைத் தனது மாநில மலராகத் தேர்வு செய்துள்ளது.

இலங்கை அரசு தனது பௌத்த பண்பாட்டுச் சூழலுக்கு அமைவாகத் தேசிய மலராக நீலோற்பலத்தையும் தேசிய மரமாக மெசுவா எனப்படும் நாகமரத்தையும் தெரிவு செய்துள்ளது. இலங்கைக்காடுகளில் ஒருபோதும் காணப்படாத சிங்கத்தைத் தேசியக் கொடியில் வாளேந்த வைத்த பின்னர் அதனால் இதுவரையில் இலங்கைக்குரிய தேசிய விலங்கொன்றைத் தெரிவு செய்ய முடியவில்லை. இலங்கைத் தேசிய அடையாளங்கள் தமிழ் மக்களை உள்வாங்காது பௌத்த, சிங்களப் பெரும்தேசியவாதத்தின் குறியீடுகளாக அமைந்ததன் விளைவாகவே விடுதலைப்புலிகள் தேசிய மலராக ஈழத்தமிழ்ச் சூழலின் அடையாளமாக விளங்கும் கார்த்திகைப்பூவைத் தெரிவுசெய்ய நேர்ந்தது.

கார்த்திகைப்பூச்செடியிலுள்ள கொல்கிசின் என்னும் நச்சு இரசாயனம் அருமருந்துகளின் தயாரிப்பில் பயன்படுகிறது. இதன் பொருட்டுத் தமிழகத்தில் ஆயிரக்கணக்கான ஏக்கர்களில் பயிரிடப்படும் கார்த்திகைப்பூச்செடியால் பலகோடி ரூபாய்கள் அந்நியச்செலாவணியாகக் கிடைத்து வருகிறது. ஆனால், கார்த்திகைப்பூச்செடியின் சிறப்புகளை இலங்கை அரசு ஏற்றுக்கொள்ள மறுப்பதாலேயே கார்த்திகைப்பூவுக்கு உத்தியோகப்பற்றற்ற தடையைப் பேணிவருகிறது. இயற்கை அதன் பரிணாமப்பாதைக்குக் குறுக்காக நிற்கும் எதனையும் தூக்கியெறிந்து தன் பல்லினத்தை நிலைநிறுத்தும் பேராற்றல் பெற்றது என்பதை இலங்கை அரசு நினைவிற்கொள்ளவேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# தேர்தல் பிரச்சாரத்தில் கச்சத் தீவு குறித்த உண்மையான பிரச்சனையை பா.ச.க.வும், காங்கிரசும் திசைத்திருப்ப முயலுகின்றன

## உலகத் தமிழர் பேரமைப்பின் தலைவர் பழ. நெடுமாறன்



தேர்தல் பிரச்சாரத்தில் கச்சத் தீவு பிரச்சனைக் குறித்து பா.ச.க.வும், காங்கிரசுக் கட்சியும் மாறி மாறி குற்றம் சாட்டி உண்மையான பிரச்சனையைத் திசைத்திருப்ப முயலுகின்றன.

இந்தியப் பெருங்கடலில் செல்லும் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த சரக்குக் கப்பல்கள் மற்றும் பயணிகள் கப்பல்கள் ஆகியவற்றைத் தாக்கிக் கொள்ளையடிக்கும் சோமாலியா கடற் கொள்ளையர்களிடமிருந்து இக்கப்பல்களைப் பாதுகாக்கும் பணியில் இந்தியக் கடற்படை மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வருவதற்கு அமெரிக்க அரசு உள்பட பல நாட்டு அரசுகள் பாராட்டுத் தெரிவித்துள்ளன.

கடந்த பல ஆண்டு காலமாக இந்தியப் பெருங்கடலில் செல்லும் பிற நாட்டுக் கப்பல்களை சோமாலியா கொள்ளையர்களிடமிருந்து பாதுகாக்கும் பணியில் இந்தியக் கடற்படைத் தீவிரமாக ஈடுபட்டு வருகிறது. இந்த அரிய சாதனைகளை புரிந்துவரும் இந்தியக் கடற்படை கரையோர கடற்படை என்ற நிலையிலிருந்து ஆழ்கடல் கடற்படை (Blue Water Navy) என்ற நிலைக்கு உயர்ந்துவிட்டதாக இந்தியக் கடற்படைத் தளபதி பெருமை பாராட்டிக்கொண்டிருக்கிறார்.

ஆப்பிரிக்காக் கண்டத்தைச் சேர்ந்த சோமாலியா நாடு, இந்தியாவிலிருந்து 1600 கடல் மைல்களுக்கப்பால் உள்ளது. இந்தியாவின் கடற்படை அதுவரையிலும் சென்று உலக நாடுகளின் கப்பல்களைப் பாதுகாத்து வருகிறது. ஆனால், மன்னார் வளைகுடா பகுதியில் மீன்பிடிக்கச் செல்லும் தமிழ்நாட்டு மீனவர்களைச் சிங்களக் கடற்படை சுட்டுத் தள்ளுகிறது. ஆடு, மாடுகளை ஓட்டிக் கொண்டு போவது போல, நமது மீனவர்களைப் பிடித்துக் கொண்டும் போகிறார்கள். நமது மீனவர்களுக்குச் சொந்தமான இயந்திரப் படகுகள், மீன் வலைகள் போன்றவை பறிமுதல் செய்யப்படுகின்றன அல்லது சேதப்படுத்தப்படுகின்றன. நமது மீனவர்கள் பிடித்த மீன்கள் கொள்ளையடிக்கப்படுகின்றன.

1983ஆம் ஆண்டிலிருந்து கடந்த 40 ஆண்டு காலமாக எவ்வித அச்சமுமில்லாமல் சிங்கள கடற்படை தமிழ்நாட்டு மீனவர்களை வேட்டையாடி வருகிறது. ஆனால், அவர்களைப் பாதுகாக்கும் வகையில் இந்தியக் கடற்படை இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. இராமேசுவரத்திற்கு அருகிலுள்ள மண்டபத்தில் இந்தியக் கடலோரக் காவல்படையின் கப்பல்கள் நிறுத்திவைக்கப்பட்டிருக்கின்றன. கடற்படையோ, கடலோரக் காவல்படையோ இதுவரை சிங்களக் கடற்படைக்கு எதிராக ஒரு சிறு நடவடிக்கைகூட எடுக்கவில்லை. எங்கேயோ இருக்கிற சோமாலியா நாட்டுக் கடற் கொள்ளையர்களிடமிருந்து உலக நாடுகளின் கப்பல்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் இந்தியக் கடற்படை, சிங்களக் கொள்ளையர்களிடமிருந்து நமது மீனவர்களைப் பாதுகாக்கும் கடமையைச் செய்யத் தயங்குவது ஏன்?

கச்சத் தீவு பிரச்சனையில் பா.ச.க.வும், காங்கிரசும் மாறிமாறி குற்றம் சாட்டிக்கொண்டிருக்கின்றன. ஆனால், மன்னார் வளைகுடா பகுதியில் அத்துமீறி நமது மீனவர்களுக்கு எதிராகத் தொடர்ந்து செயல்பட்டுவரும் சிங்களக் கடற்படைக்கு எதிராக எவ்வித நடவடிக்கையும் எடுக்க இந்தியக் கடற்படையும், கடலோரக் காவல்படையும் இதுவரை முன்வராதது ஏன்? என்பதற்குரிய காரணத்தை இந்த இரு கட்சிகளும் மக்களிடம் விளக்கியாகவேண்டும்.

அன்புள்ள,

பழ. நெடுமாறன்
தலைவர்.

# அராலி மேற்குவின் ஸ்டார் இளைஞர் கழகத்தின் நிர்வாக சபைத் தெரிவு!



சங்கானை பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட, அராலி மேற்கு ஜே/160 கிராம சேவகர் பிரிவுக்கான வின் ஸ்டார் இளைஞர் கழகத்தின் புதிய நிர்வாக சபைத் தெரிவு கடந்த 29-03-2024 அன்று ஜே/160 கிராம சேவகர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இதன்போது தலைவராக செ. செந்தூரன் அவர்களும், செயலாளராக ம.சுகிர்தா அவர்களும் பொருளாராக சி. நிலைக்சன் அவர்களும், உப தலைவராக வி. நிலக்சனா அவர்களும், உப செயலாளராக ஜெ. அஜந்தா அவர்களும், அமைப்பாளராக பா. பிரதீப் அவர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.



இந்த கூட்டத்தில் யாழ்ப்பாண மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் உதவிப் பணிப்பாளர் திருமதி. வினோதினி, ஜே/160 கிராம சேவகர் திரு. சிந்துஜன், சங்கானை பிரதேச இளைஞர் சேவைகள் உத்தியோகத்தர் திரு. மதன்ராஜ், மாவட்ட சம்மேளன உத்தியோகத்தர்கள் மற்றும் இளைஞர் யுவதிகள் என பலரும் கலந்துகொண்டனர. இங்கே காணப்படும் படங்கள் அன்றைய தினம் எடுக்கப்பட்டதாகும்.



# ஆசிரியர்கள் மாணவர்களை அடித்து துன்புறுத்துவதை இனிமேலும் அனுமதிக்க முடியாது என்கிறார் வடக்கு மாகாண ஆளுநர்

பாடசாலை மாணவர்கள் மீது தண்டனை என்ற பெயரில் துன்புறுத்தல்கள் அதிகரித்து வரும் நிலையில், வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் அவர்களால் விசேட அறிவித்தல் ஒன்று விடுக்கப்படுகிறது.

கற்பித்தல் செயற்பாடுகளை மேற்கொண்டு மாணவர்களை வளப்படுத்த வேண்டிய ஆசிரியர்களே, மாணவர்களை அடித்து, துன்புறுத்தி வைத்தியசாலைகளில் அனுமதிக்கும் சம்பவங்கள் அண்மைக் காலமாக அதிகரித்துள்ளன. கடந்த சில மாதங்களுக்குள் இவ்வாறாக செயற்பட்ட ஆசிரியர்கள் தொடர்பில், ஆளுநரின் செயலகத்தால் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு பின்னர் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த வாரம் பதிவாகிய மூன்று சம்பவங்கள் தொடர்பில் ஆளுநரின் பணிப்புரைக்கு அமைய உடனடி விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

“எழுத்தறிவித்தவன் இறைவன்” எனும் கூற்றுக்கு அமைய, இறைவனாக போற்றப்படக்கூடிய ஆசிரியர்கள் மாணவர்களுக்குத் துன்பம் இழைப்பதை ஒருபோதும் ஏற்க முடியாது.

கற்றலில் சிக்கல்களை எதிர்நோக்கும் மாணவர்களை எவ்வாறு கற்றலில் ஈடுபடச் செய்வது என்ற யுக்தியை கண்டறிந்து அவர்களுக்கான கற்றல் செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்.

அதற்காகவே ஆசிரியர்களுக்கான விசேட பயிற்சிகள் வழங்கப்பட்டு, அரசினால் ஆசிரிய நியமனம் வழங்கப்படுவதோடு, மாதாந்த கொடுப்பனவும் வழங்கப்படுகிறது.

எனினும், ஒருசில ஆசிரியர்கள் மாணவர்களின் நிலையை அறியாது அவர்களை அடித்து துன்புறுத்தும் நிலை ஏற்பட்டுள்ளது. ஆகவே, தற்போது பதிவாகியுள்ள இந்த சம்பவங்கள் தொடர்பில் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். இனிவரும் காலங்களில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாதிருக்க பாடசாலை அதிபர்களும், ஆசிரியர்களும் தங்களின் பொறுப்புக்களை உணர்ந்து கடமைகளை மேற்கொள்ள வேண்டும். அவ்வாறின்றி பொறுப்பற்ற வகையில் செயற்படும் அதிபர், ஆசிரியர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருவதாக வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் தெரிவித்துள்ளார்.

# இலங்கையில் தொடரும் நெருக்கடிகள் – தொடர்ச்சியாக வெளியேறும் மக்கள்

**- நடராசா லோகதயாளன்**

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியை அடுத்து இன, மத பேதமின்றி வெளிநாடுகளுக்கு செல்லும் இலங்கையர்களது எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

2024 ஆம் ஆண்டின் முதல் 3 மாதங்களில் மட்டும் 74 ஆயிரத்து 499 இலங்கையர்கள் தொழில் நிமித்தம் வெளிநாடுகளுக்கு சென்றுள்ளதாக, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

அவர்களில் 34 ஆயிரத்து 599 பேர் பெண்கள் என்பதும் தெரியவந்துள்ளது.

ஜனவரி முதல் மார்ச் வரையிலான காலப்பகுதியில் தொழிலுக்காக வெளிநாடுகளுக்கு சென்ற ஆண் தொழிலாளர்களின் எண்ணிக்கை 39 ஆயிரத்து 900 எனவும், பெரும்பாலான இலங்கையர்கள் குவைத் நாட்டிற்கு தொழிலுக்காகச் சென்றுள்ளனர் எனவும் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

இந்த புள்ளிவிபரங்களின்படி, இலங்கையர்கள் கடந்த வருடங்களுடன் ஒப்பிடுகையில், தென் கொரியா, இஸ்ரேல் மற்றும் ஜப்பான் போன்ற நாடுகளில் தொழில் தேடுவதற்கான வாய்ப்புகள் அதிகமாகும்.

இதன்படி, 2024 ஆம் ஆண்டின் முதல் 3 மாதங்களில் மாத்திரம் தென் கொரியாவிற்கு 2,374 பேரும், இஸ்ரேலுக்கு 2,114 பேரும், ருமேனியாவிற்கு 1,899 பேரும் ஜப்பானுக்கு 1,947 பேரும் சென்றுள்ளதாகவும் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பௌத்தமயமாகும் சைவ ஆலயங்கள்: பிள்ளையாருக்கே பாதுகாப்பில்லாத சூழல் உருவாகிறது!

**- நடராசா லோகதயாளன்**



இப்போது பிள்ளையாருக்கும் ஆபத்து வந்துள்ளது.

இது தான் இன்று யதார்த்த நிலை. தமிழ் மக்களின் வளமான காணிகளை அபகரிப்பதற்கான நடவடிக்கைகள் தொடரும் நிலையில் இப்போது ஆலய காணிகளுக்கு ஆபத்து வந்துள்ளது. இலங்கையின் வடக்கு - கிழக்கில் இன்னும் பல இடங்களில் சைவ ஆலயங்களும் அதை அண்மித்த பகுதிகளும் இராணுவ ஆக்கிரமிப்பில் உள்ள நிலையில், இப்போது மற்ற ஆலயங்களுக்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளது.

தொடரும் நில அபகரிப்பு, சைவ ஆலயங்களை குறி வைத்து திட்டமிட்ட செயற்பாடுகள் ஆகியவை தொடரும் நிலையில், இப்போது தமிழர் தாயகத்தின் முன்னணி துறைமுக நகரான திருகோணமலையிலுள்ள ஒரு பிள்ளையார் ஆலயத்தில் புத்தர் சிலை ஒன்றை வைக்கும் நடவடிக்கை தொடங்கியுள்ளது.

திருகோணமலை மடத்தடி வீரகத்தி பிள்ளையார் ஆலய காணியில் சட்டவிரோதமான முறையில் தமிழ் மக்களின் எதிர்ப்பையும் மீறி பாரிய புத்தர்சிலை வைப்பதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

திருகோணமலை மடத்தடி பகுதியில், பிரதான வீதிக்கு அருகாமையில் வீரகத்தி பிள்ளையார் ஆலயத்திற்கு சொந்தமான காணியில் கடந்த மாதம் 22 ஆம் திகதி முதல் பாரிய புத்தர் சிலை வைப்பதற்கான கட்டுமானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. குறித்த கட்டுமானப் பணிகளுக்கு நகரசபை, வீதி அபிவிருத்தி அதிகாரசபை, நகர அபிவிருத்தி அதிகார சபை உட்பட எவ்வித அரச திணைக்களங்களினுடைய அனுமதியும் பெறப்படாமல் சட்ட விரோதமான முறையிலேயே இந்த கட்டுமானப்பணிகள் இடம்பெற்று வருகின்றன.



இது தொடர்பாக நகர சபையின் செயலாளர் கடந்த மாதம் 23 ஆம் திகதி சம்பவ இடத்திற்கு விஜயம் மேற்கொண்டு கட்டுமானங்களை பார்வையிட்டிருந்தார் எனினும் கட்டுமானம் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன. வெசாக் பூரணை தினத்தை முன்னிட்டு பாரிய புத்தர் சிலை வைக்கப்படவுள்ளதாகவும், ஒருகாலத்தில் அப்பகுதியில் விகாரை அமைக்கப்படலாம் எனவும் தமிழ் மக்கள் அஞ்சுகின்றனர். அத்துடன் இந்தப் பகுதியில் குடியிருக்கும் மக்கள் தங்கள் காணிக்குரிய ஆவணங்களை வழங்கக்கோரி கடந்த மாதம் 14 ஆம் திகதி ஆர்ப்பாட்டம் ஒன்றினையும் மேற்கொண்டிருந்தார்கள்.

மடத்தடி பகுதியில் 2019 ஆம் ஆண்டு சட்ட விரோதமான முறையில் தமிழ் மக்களுடைய எதிர்ப்பையும் மீறி ஓர் சிறிய புத்தர்சிலை வைக்கப்பட்டது. இது தொடர்பாக பொலிஸ் நிலையம் உட்பட அரச நிர்வாக மட்டங்களிலும் ஆலய நிர்வாகத்தினரால் முறைப்பாடு செய்யப்பட்டது. இதன்போது அது அகற்றப்படும் என கூறப்பட்டதாகவும் எனினும் இதுவரை எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படாது அந்த இடத்திலேயே பாரிய புத்தர்சிலை வைப்பதற்கான நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இன நல்லிணக்கம் தொடர்பாக அரசாங்கத்தால் பல்வேறு திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் மறுபுறம் தமிழர் பகுதிகளில் பௌத்த ஆக்கிரமிப்புகளை மேற்கொண்டு இனங்களுக்கு இடையேயான நல்லுறவை சீர்குலைக்கும் இவ்வாறான நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருவதாக மக்கள் கவலை வெளியிடுகின்றனர்.

மடத்தடி வீரகத்தி பிள்ளையார் ஆலயமானது கி.பி 1650 ஆம் ஆண்டளவில் பெரியராசகோன் முதலியார் என்பவரால் திருகோணமலை - மடத்தடி பகுதியில் அவருக்கு சொந்தமான நிலத்தில் கட்டப்பட்டது. குறித்த பகுதியில் 1958 ஆம் ஆண்டு கலப்பகுதியில் இந்தப் பகுதியை சிங்கள மக்கள் ஆக்கிரமிக்கத் தொடங்கினார்கள். தற்போது 200க்கு மேற்பட்ட குடும்பங்கள் கோவிலுக்குச் சொந்தமான இரண்டு ஏக்கருக்கும் அதிகமான பகுதியை ஆக்கிரமித்துள்ளதாக தெரிய வருகின்றது.


MORTGAGE

⇒ நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)

⇒ லைன் ஒப் கிரெடிட்(HELOC)

⇒ ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்

⇒ Private Mortgage (No Income Verification)

⇒ 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)

⇒ பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்

⇒ பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட

⇒ எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC

www.mortgageclinicanada.com

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.

416-613-2788 / 416-816-9011

RIGHT AT HOME REALTY INC.

Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP

Team Leader/Mortgage & Real Estate Broker

Cell : 416-624-4843

எமது முகவரி

1504 Markham Rd,

Toronto, ON, M1B 2V9

(Markham & HWY 401)



MORTGAGE ALLIANCE

RIGHTBROKER = RIGHTMORTGAGE

Lic # 10530

Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4

# மைத்திரி மீண்டும் குழப்புகிறார்?

## யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்



**கோ**ட்டாபய ஒரு புத்தகத்தை வெளியிட்டார். பிள்ளையானும் ஒரு புத்தகத்தை வெளியிட்டார். மைத்திரிபால சிறிசேன ஓர் சர்ச்சைக்குரிய தகவலை வெளியிட்டார்.

கோட்டாவின் புத்தகம் அவர் தனது நிலைப்பாட்டில் பெரிய அளவில் மாறவில்லை என்பதனைக் காட்டுவதாகக் கூறப்படுகிறது. அந்தப் புத்தகத்துக்கு பசில் ராஜபக்ச அதிகம் முக்கியத்துவம் கொடுக்கவில்லை. அந்தப் புத்தகத்தில் கூறப்பட்டிருக்கும் விடயங்களை ஏனைய ராஜபக்ச சகோதரர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்ற பொருள்பட அவர் கருத்து தெரிவித்துள்ளார். அதாவது கோட்டாவின் ஆட்சி முறைமையை அல்லது ஆட்சிக் கொள்கையை அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதனை மறைமுகமாக உணர்த்துகின்றாரா?

அதேசமயம் பஸில் மற்றொரு விடயத்தையும் கூறுகிறார். ஜனாதிபதித் தேர்தலை முதலில் வைப்பதற்குப் பதிலாக பொதுத் தேர்தலை முதலில் வைக்க வேண்டும் என்று. ஏனென்றால் ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் மக்களுக்கு முற்கற்பிதங்களை ஏற்படுத்தும். முன் முடிவுகளை உருவாக்கும். ஒரு வெற்றி அலையானது தொடர்ந்து அடுத்தடுத்த தேர்தல்களிலும் எதிரொலிக்கும். எனவே ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளின் அடிப்படையில் பொதுத் தேர்தலிலும் மக்கள் வாக்களிக்கக்கூடும். ஒரு ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க வெற்றி பெறுவாராக இருந்தால், அவர் பொருளாதாரத்தை மறுசீரமைப்பதற்காக கிடைத்த வெற்றியாக அது காட்டப்படும். அதனால் ரணிலின் பேரபலம் அதிகரிக்கும். அதன்பின் நடக்கக்கூடிய நாடாளுமன்ற தேர்தலில் தாமரை மொட்டுக் கட்சி, ரணிலோடு பேரம் பேசி வேண்டிய அமைச்சுகளைப் பெறுவது கடினமாகலாம். எனவேதான் முதலில் ஒரு பொதுத் தேர்தலை வைக்க வேண்டும் என்று அவர்கள் கேட்கிறார்கள்.

ஒரு ஜனாதிபதித் தேர்தலில் ரணில் வெற்றி பெறுவாராக இருந்தால் அது அவருடைய சொந்தக் கட்சியின் வாக்கு வங்கியால் அல்ல என்பது அவருக்கே தெரியும். தாமரை மொட்டுக்களின் பலமின்றி வெற்றி பெற முடியாது என்ற நிலைதான் இப்பொழுதுவரை உண்டு. அவருடைய சொந்தக் கட்சியின் பலம் அவருக்கு குறைவு. எனவே அவருடைய சொந்தப் பலம் எது என்பதனை அவருக்கு உணர்த்தும் விதத்தில் ஒரு பொது தேர்தலை முதலில் வைத்தால் அதில் ரணில் தன்னுடைய சொந்தப் பலம் எது என்பதைக் கண்டுபிடித்து விடுவார். அப்பொழுது அவருடைய பேரம் குறைவாக இருக்கும். அந்த நேரத்தில் ராஜபக்சங்கள் அவருடன் பேரம் பேசுவது இலகுவாக இருக்கும். நாமலை பிரதமராக நியமிக்கும்படி கேட்கலாம்.

எனவே முதலில் ஜனாதிபதித் தேர்தல் நடந்தால் அதில் ரணிலுக்குப் பேர பலம் அதிகரிக்கும். முதலில் நாடாளுமன்றத் தேர்தல் நடந்தால் அதில் ரணிலின் பேரம் குறையும். எனவே ரணிலின் பேரத்தைக் குறைப்பதுதான் ராஜபக்சகளின் திட்டம். இதை இன்னும் ஆழமாகச் சொன்னால் அடுத்த நாடாளுமன்றத்தையும் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதுதான் அவர்களுடைய திட்டம். பஸிலின் கோரிக்கையை மகிந்தவும் ஆதரிக்கின்றார்.

எனவே ராஜபக்சத்தை தங்களுடைய பேரபலத்தை நிரூபிப்பதற்குத் தயாராகி வருகிறார்கள் என்று பொருள். இதை அதன் சாராம்சத்தில் சொன்னால், ராஜபக்சக்கள் தற்காப்பு நிலையில் இருந்து வலிந்து தாக்கும் நிலையை நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள் என்று பொருள். கடந்த 2021 ஆம் ஆண்டு அவர்கள் பின்வாங்கும் நிலையில் இருந்தார்கள். சொந்தத் தேர்தல் தொகுதிகளில் இருந்து அவர்கள் தப்பியோட வேண்டி வந்தது. படை முகாம்களில் அவர்கள் அடைக்கலம் தேட வேண்டி வந்தது. ஜனாதிபதியாக இருந்த கோட்டாபய வெளிநாடு ஒன்றுக்கு தப்ப வேண்டி வந்தது. ஆனால் அவ்வாறான தற்காப்பு நிலையில் இருந்து இப்பொழுது வலிந்து தாக்கும் ஒரு நிலையைத் தாங்கள் அடைந்து விட்டதாக அவர்கள் நம்புகிறார்கள். எனவே அதை நோக்கித்தான் அவர்கள் திட்டமிடுகிறார்கள். கோட்டாபயவின் புத்தகமும் அந்த அடிப்படையில் எழுதப்பட்டதுதான்.

ஆனால் அமெரிக்காவிலிருந்து வந்த பசில் நினைத்தபடியெல்லாம் அரசியலை நகர்த்த முடியாது என்பதைத்தான் அண்மையில் அமெரிக்காவுக்கு சென்று வந்த மைத்திரியின் சர்ச்சைக்குரிய கூற்று வெளிப்படுத்துகின்றதா?

மைத்திரி கூறுகிறார், ஈஸ்டர் குண்டு வெடிப்புத் தொடர்பாக தனக்கு ரகசியங்கள் தெரியும் என்று. அவர் ஏன் அவ்வாறு கூறுகிறார்? அதுவும் ஒரு ஜனாதிபதித் தேர்தல் வர இருக்கும் பின்னணியில் ஏன் அப்படிக் கூறுகிறார்? ஏனென்றால், ஈஸ்டர் குண்டு வெடிப்பைப் பற்றிப் பேசினால் அதன் விளைவின் விளைவுகள் ராஜபக்சக்களைத்தான் பாதிக்கும். ராஜபக்சக்கள் "ஹை ப்ரோபைலுக்கு" முன்னேறுவதை தடுத்து, அவர்களைத் தொடர்ந்தும் "லோ ப்ரோபைலில்" வைத்திருப்பதுதான் மைத்திரியின் சர்ச்சைக்குரிய வெளிப்படுத்தல்களின் நோக்கமா?

ராஜபக்சக்கள் தற்காப்பு நிலையில் இருந்து வலிந்து தாக்கும் நிலைக்கு முன்னேறுவதை, அதாவது "லோ ப்ரோபைலில்" இருந்து "ஹை ப்ரோபைலுக்கு" முன்னேறுவுவதை மேற்கு நாடுகள் விரும்பவில்லையா? அப்படிப் பார்த்தால், மைத்திரி கிளப்பிய சர்ச்சையும் சனல் நாலு வீடியோவை போன்றதுதானா?

இதை இன்னும் கூர்மையான வார்த்தைகளில் சொன்னால், ராஜபக்சக்களை அடுத்த ஜனாதிபதி தேர்தலில் ரணிலுக்குச் சவாலாக இல்லாதபடி "லோ ப்ரோபைலில்" வைத்திருப்பதுதான் மேற்கு நாடுகளின் திட்டமா? அதாவது ரணிலுடைய வழிகளை இலகுவாக்கிக் கொடுத்தல்?

மேற்கு நாடுகளும் மேற்கத்திய பெரு நிறுவனங்களாகிய பன்னாட்டு நாணய நிதியம் போன்றனவும் ரணில் பதவியில் தொடர்ந்துமிருப்பதைத்தான் விரும்புவதாகத் தெரிகிறது. மேற்கத்திய பாரம்பரியத்தில் வந்த அவரைக் கையாள்வது இலகுவானது என்று அவை நம்புகின்றன. ராஜபக்சக்கள் தென்னிலங்கை அரசியலில் முன்னணிக்கு வரவில்லை என்றால் சீனாவின் ஆதிக்கமும் முன்னணிக்கு வராது. எனவே மேற்கு நாடுகளின் விருப்பத் தெரிவு ரணில் தான். அதனால்தான் மைத்திரி அவ்வாறு பேசுகிறார்.

ராஜபக்சக்கள் வலிந்து தாக்கும் நிலைக்கு வளர்ந்து விட்டதாக நம்பினாலும்கூட, தங்களுக்குப் பொருத்தமான முன் தடுப்பு ரணில் விக்கிரமசிங்கதான் என்பதில் தெளிவாக இருக்கிறார்கள். எனவே, அவர்கள் ரணிலுடன் தமது பேரத்தை அதிகப்படுத்த விரும்பினாலும், ரணிலை விட்டால் அவர்களுக்கு வேறு தெரியவில்லை. அப்படித்தான் மகா சங்கத்திற்கும், படைத்தரப்புக்கும். அதாவது உள்நாட்டிலும் அனைத்துலக அளவிலும் மேற்கு நாடுகள் மத்தியிலும் ரணில் விக்கிரமசிங்கவுக்குத்தான் அதிகம் வரவேற்புக் காணப்படுகின்றது. அதனால் தான் ராஜபக்சக்கள் அவருடைய வழிகளைத் தடுக்காமல் இருக்க மைத்திரி அவ்வாறு பேச வைக்கப்படுகின்றாரா?

ஆயின், இந்த விடயத்தில் இந்தியாவின் நிலைப்பாடு என்ன? ரணில் விக்கிரமசிங்க எல்லாப் பேரரசுகளையும் சம தூரத்தில் வைத்துக் கையாளக்கூடிய ஒருவர். அப்படிப்பட்ட ஒருவர் இந்தியாவைப் பொறுத்தவரையிலும் கையாளக் கடினமானவர். அப்படிப் பார்த்தால் இந்தியா ரணிலை ஒரு விருப்பத் தெரிவாக எடுக்க முடியாது.

அது ரணிலுக்கும் விளங்கும். அதனால்தான் அவர் ஜனாதிபதித் தேர்தலில் இந்தியா தனக்கு எதிராகப் போகாமல் தடுப்பதை நோக்கமாகக் கொண்டு இந்தியாவுடன் குறிப்பிடத்தக்க அளவுக்கு இணங்கிப் போக முயற்சிக்கின்றார். அதன் விளைவாகத்தான் யாழ்ப்பாணத்தின் மூன்று தீவுகளிலும் இந்திய நிறுவனங்களுக்கு மீளப் புதுப்பிக்கும் எரிசக்தி திட்டங்களை வழங்கும் உடன்படிக்கைகள் கடந்த மார்ச் மாதம் முதலாம் திகதி கையெழுத்திடப்பட்டன. அது போலவே ராமர் பாலம் என்ற விடயத்திலும் ரணில் உண்மையாக இருக்கிறார் என்ற ஒரு தோற்றம் வெளிக்காட்டப்படுகிறது. ராமர் பாலத்தை கட்டப் போவதாக ரணில் இந்தியாவை நம்ப வைக்கின்றார். தன்னை நம்பத் தயாரற்ற ஒரு பக்கத்து பேரரசின் கால்களில் முழுமையாக விழும் ஒரு நிலை இது. "என்னை உன்னோடு இணைத்துக்கொள், நான் உன்னை முழுமையாக சரணடைந்தேன்" என்று நிரூபிக்க ரணில் முற்படுகிறாரா?

இந்தியப் பொருளாதாரம் அண்மை ஆண்டுகளில் வளர்ச்சி கண்டு வருகிறது. தமிழகத்திலும் அதுதான் நிலைமை. இவ்வாறு ஒரு பெரிய பொருளாதாரத்தோடு சிறிய இலங்கைத் தீவை நிலத்தால் இணைப்பதன் மூலம், இலங்கைத் தீவு விழுங்கப்பட்டு விடும் என்ற ஒரு பயத்தை சிங்கள மக்கள் மத்தியில் இலகுவாகத் தூண்ட முடியும். இந்த விடயத்தை ரணில் எப்படிக் கையாள்வாரோ தெரியவில்லை. ஆனால் அவர் ஒரு நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி. பாலங் கட்டத் தயார் என்று அவர் சொன்னதிலிருந்து அவர் பின்வாங்க முடியுமா இல்லையா என்பது இந்தியா அந்த விடயத்தை எப்படிக் கையாளப்போகிறது என்பதில் தான் தங்கியிருக்கின்றது.

புதுடில்லி ஜேவிபியை அழைத்து கதைத்தமையும் ரணில் மீது அழுத்தத்தைப் பிரயோகிக்கும் நோக்கிலான ஒரு நடவடிக்கைதான். ரணிலுக்கு எதிராகக் கையாளப்படத்தக்க சக்திகளை இந்தியா அரவணைக்கிறது என்று பொருள்.

எதுவாயினும், அடுத்த ஜனாதிபதித் தேர்தல் வரையிலும் இந்தியா தனக்கு நெருக்கடிகளைத் தரக்கூடாது என்று ரணில் கருதுவதால், அவர் இந்தியாவை எப்படியும் சுதாகரிக்கத்தான் முயற்சிப்பார். அவரைப் பொறுத்தவரை இது கடைசி ஓவர். இன்னுமொரு தடவை ஜனாபதியை பதியாக வருவதற்கு அவருடைய உடல்நிலை இடம் கொடுக்குமோ தெரியவில்லை. அரசியல் வாழ்வில் இறுதிக்கட்டத்தில் அவருக்கு கிடைத்த ஓர் அதிஷ்ட லாபச் சீட்டை மேலும் ஐந்து ஆண்டுகளுக்கு எப்படி நீடிக்கலாம் என்றுதான் அவர் சிந்திப்பார்.

---



# தெல்லிப்பழை யூனியன் கல்லூரி கார்த்திகைப் பூ விவகாரம் — தெல்லிப்பளை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அழைப்பாணை

இலங்கை செய்திகள்
Sri Lanka News

பு. கஜிந்தன்

பாடசாலை இல்ல விளையாட்டு போட்டி தொடர்பில் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி மாணவர்கள் மற்றும் ஆசிரியர்ககளை தெல்லிப்பளை பொலிஸ் நிலையம் அழைத்து விசாரணை மேற்கொண்டமை தொடர்பில் இலங்கை ஆசிரியர் சங்கம் மேற்கொண்ட முறைப்பாட்டிற்கான விசாரணைக்கு தெல்லிப்பளை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியை நாளை 05.04.2024 பிற்பகல் 2.30 மணிக்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழப்பான அலுவலகத்தில் ஆஜராகி விளக்கமளிக்குமாறு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழப்பான அலுவலகத்தால் அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழப்பான அலுவலகத் பிராந்திய இணைப்பாளர் இதனை அறிவித்துள்ளார்.

# 33 ஆண்டுகள் துன்பங்களை மட்டுமே அனுபவித்த எம்மை, இனிமேலாவது நிம்மதியாக வாழ விடுங்கள்!

## தமிழ் அரசியல் கைதிகளான முருகன், றொபர்ட்பயஸ், ஜெயக்குமார் ஆகிய மூவரும் கவலையுடன் தெரிவிப்பு



இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் சந்தேகநபர்களாக கைதுசெய்யப்பட்டு மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக இந்தியாவில் சிறைப்படுத்தப் பட்டிருந்த நிலையில் விடுதலை செய்யப்பட்ட தமிழ் அரசியல் கைதிகளான முருகன், றொபர்ட்பயஸ், ஜெயக்குமார் ஆகிய மூவரும், தமது மூத்த சட்டத்தரணி புகழேந்தி அவர்களது வழித்துணையுடன் சுமார் 33 ஆண்டுகளுக்குப் பின் நேற்றையதினம் யாழ்ப்பாணத்திலுள்ள தமது பூர்வீக வாழ்விடங்களுக்கு வந்தடைந்துள்ளனர்.

இவர்களை, குரலற்றவர்களின் குரல் அமைப்பினுடைய ஒருங்கிணைப்பாளர் மு. கோமகன் அவர்கள் நேரில் சென்று சந்தித்து, அவர்களது சுகநலன் மற்றும் இதர விடயங்கள் தொடர்பில் கேட்டறிந்துள்ளார்.

இதன்போது, தாம் திருச்சி சிறப்பு முகாமிலிருந்து சென்னை விமான நிலையத்திற்கு கொண்டுசெல்லப்பட்டு வானூர்தி வழியாக இலங்கை கட்டுநாயக்கா விமான நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டதாகவும்.

அதே வேளை, தாங்கள் மூவரும் தற்காலிக விசாவிலேயே இலங்கைக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்த காரணத்தைக் காட்டி விமானநிலைய குடிவரவு குடியகல்வு அதிகாரிகளும், குற்றப்புலனாய்வுப் பொலிசாரும் பல மணிநேர விசாரணைகளை தம்மிடம் மேற்கொண்டதன் பின்னரே தமது இருப்பிடங்களுக்குச் செல்ல அனுமதித்ததாகவும் அவர்கள் கவலையுடன் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை விடுதலை பெற்று வந்துள்ள முருகன் குறிப்பிடுகையில், தனது மனைவி "நளினி" ஒரு இந்திய பிரஜை என்பதால், தமிழகத்தில் இருப்பதாகவும், சிறையில் பிறந்த தனது ஒரே மகள் புலம்பெயர்ந்து பிரிட்டனில் வாழ்வதாகவும், இந்நிலையிலேயே தான் இலங்கைக்கு அனுப்பப்பட்டதால் தற்போது தாயாருடன் வசிப்பதாகவும் குறிப்பிட்டுள்ள முருகன், "தயவுசெய்து, தமது விடுதலை சாத்தியமாவதற்கு உந்து சக்திகளாக இருந்து துணைபுரிந்தவர்கள், தனது மனைவி பிள்ளையுடன் தானும் சேர்ந்து வாழும் நிலமைக்கு வழி செய்துதவுமாறு வினயமான கோரிக்கையினை முன்வைத்துள்ளார்.

மேலும், இத்தனை வருட காலங்களும் துன்பங்களை மட்டுமே அனுபவித்து நடைபிணங்கள் போன்று சிறைமீண்டு வந்திருக்கும் தம்மை, "இனிமேலாவது குடும்ப உறவுகளுடன் நிம்மதியாக காலத்தைக் கழிப்பதற்கு வழிவிட வேண்டும் என்பதே தமது பிரார்த்தனை எனத் தெரிவித்துள்ள மூவரும், தமது விடுதலைக்காக பல்வேறு வழி வகைகளிலும் போராடிய உலகவாழ் தமிழ்ச் சொந்தங்கள் அனைவருக்கும் தமது வாழ்நாள் நன்றிகளை காணிக்கை செய்வதாக உருக்கத்துடன் விழிகசியக் கூறியதாக, குரலற்றவர்களின் குரல் அமைப்பினுடைய ஒருங்கிணைப்பாளர் கோமகன் செய்திக் குறிப்பொன்றின் மூலம் ஊடகங்களுக்கு தெரியப்படுத்தியுள்ளார்.



# அண்மையில் இரண்டு உயிர்களை பலியெடுத்த இணுவில் புகையிரதக் கடவைக்கு சமிக்ஞை விளக்கு!



இரண்டு உயிர்களை பலியெடுத்த இணுவில் புகையிரதக் கடவைக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியில் சுமார் 80 இலட்சம் ரூபாய் செலவில் சமிக்ஞை விளக்கு மற்றும் பாதுகாப்பு கதவு ஆகியன பொருத்தப்பட்டு, வியாழக்கிழமை அதன் செயற்பாடுகள் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

கடந்த பெப்ரவரி மாதம் 14 ஆம் திகதி, வேனில் பயணித்துக் கொண்டிருந்த இளம் குடும்பத்தினர், இணுவில் பகுதியில் அமைந்திருந்த குறித்த பாதுகாப்பற்ற ரயில் கடவையை கடக்க முற்பட்ட போது ரயிலிலுடன் மோதுண்டனர். இதனால் இளம் குடும்பத் தலைவரும் சில மாதங்களேயான பச்சிளம் குழந்தையும் ஸ்தலத்திலேயே பரிதாபகரமாக உயிரிழந்தனர். குழந்தையின் தாய் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

குறித்த விபத்தினையடுத்து, பிரதேச மக்களினால் புகையிரத கடவையில் நடாத்தப்பட்ட எதிர்ப்பு போரட்டத்தை அடுத்து, அந்தப் பகுதிக்குச் சென்ற அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, மக்களுடன் கலந்துரையாடி பாதுகாப்பற்ற புகையிரத கடவைக்கு தற்காலிக தீர்வொன்றினை உடனடியாக அமுல்ப்படுத்தியதுடன், நிரந்தர தீர்வாக ஓசை எழுப்பும் வகையிலான ஒளி சமிஞ்சை விளங்கு மற்றும் பாதுகாப்பு படலை ஆகிவற்றை பொருத்துவதற்கான நடவடிக்கைகளை சம்மந்தப்பட்ட அரசாங்க தரப்புக்களின் ஊடாக முன்னெடுத்திருந்தார்.

இந்நிலையில், சுமார் 80 லட்சம் ரூபாய் செலவில் ரயில்வே திணைக்களத்தினால் பொருத்தப்பட்ட சமிஞ்ஞை விளக்கு கட்டமைப்பினை செயற்பாடுகளை வியாழக்கிழமை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கிளிநொச்சியில் கத்திக்குத்து இலக்காகி இளம் குடும்பஸ்த்தர் பலி!





கிளிநொச்சியில் கத்திக்குத்து இலக்காகி இளம் குடும்பஸ்த்தர் ஒருவர் பலியானார்.

தர்மபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பாடசாலை ஒன்றில் இடம்பெற்ற இல்ல மெய்வல்லுனர் திறனாய்வு போட்டியை பார்வையிட்டு விட்டு திரும்பி சென்ற பொழுது வீதியில் ஏற்பட்ட கைகலப்பு காரணமாக கத்தியால் பலதடவைகள் பலமாக குத்தப்பட்டு கொலை சம்பவம் ஒன்று அரங்கேறியது.

30 வயதுடைய சவரிமுத்து ஜோன் பற்றிஸ் (வயது 30) என்ற குடும்பஸ்தரே கத்திக் குத்துக்கு இலக்காகிய நிலையில் தருமபுரம் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் பொழுது உயிரிழந்துள்ளார்.

கத்திக்குத்துக்கு இலக்காகி இறந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக கிளிநொச்சி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இச்சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் ஒருவர் தருமபுர பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளை தர்மபுரம் பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.




# யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் மாநாட்டில் தேசிய மக்கள் சக்தியின் அனுரகுமார திசாநாயக்க

இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் வடமாகாண மாநாடு யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

"இழக்கப்படுகின்ற கல்வி உரிமையை வென்றெடுப்பது எப்படி?" எனும் தொனிப்பொருளில் வியாழன் 4ம் திகதி பிற்பகல் யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விருந்தினர் மண்டம் ஒன்றில் இந்த மாநாடு இடம்பெற்றது.

குறித்த மாநாட்டில், தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திசாநாயக்க, இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் பொதுச் செயலாளர் மகிந்த ஜெயசிங்க, தேசிய மக்கள் சக்தியின் நிறைவேற்றுக் குழு உறுப்பினர் வசந்த சமரசிங்க, இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் தேசிய அமைப்பாளர் சுந்தரலிங்கம் பிரதீப், தேசிய மக்கள் சக்தியின் யாழ் மாவட்ட அமைப்பாளர் இராமலிங்கம் சந்திரசேகர், அதிபர்கள், ஆசிரியர்கள் என பலர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.








# இன்றைய நேரம் தான் நேற்றைய நேரம்

## நேற்றைய விலையில் கொண்டோவை இன்று வாங்குங்கள்

## பிக்கரிங் நகரின் சிறந்த பெறுமதி கொண்ட ஒரு புதிய வரவு!
## வரலாற்றில் புதிய கொண்டோ விலைகளில்!


விலைகள் அதிகரிக்கும் முன்பாகவே நீங்கள் கொண்டோக்களை வாங்கிக் கொள்வதை நாம் விரும்புகின்றோம். அதை நீங்கள் இப்போதே செய்யலாம். ஏனென்றால் Highmark வரலாற்றில் குறைந்த விலைகளில் புதிய வரவாக நவீன கொண்டோக்களை வழங்குகின்றது!

அத்துடன் எமது விசேடமான சேமிப்புத் திட்டம். எமது Highmark இல் புதிய கொண்டோ ஒன்றை வாங்கினால்

**$50,000** வரையில் கழிவைப் பெறலாம்.

வட்டி வீதம் குறையும் போது கொண்டோக்களின் விலைகள் அதிகரிக்கலாம். எனவே தற்போது வாங்கிக் கொள்வதே சரியானதாகும். எமது விற்பனை முகவர் ஒருவரை இன்றே அழைத்து தாங்கள் தனிப்பட்ட சந்திப்பு ஒன்றுக்கு ஏற்பாடு செய்யுங்கள்.

குறைந்த $500களில் இருந்து பிக்கரிங் நகரத்தின் மத்தியில் அமைந்துள்ள எமது கொண்டோக்கள் 3 படுக்கை அறைகளைக் கொண்டவை.




Off-site Sales Gallery
Location and Hours:

633 KINGSTON ROAD,
PICKERING

Mon. – Thu. 12pm – 6pm
Friday – Closed
Sat. & Sun. 12pm – 5pm

## TheHighmark.ca

CALL: 905-831-1755 or EMAIL: info@thehighmark.ca

HIGHMARK

FOLLOW US

* Prices, promotions, and specifications are subject to change without notice. All promotions are subject to terms and conditions. Renderings are artists' concepts. See Sales Representative for details. Exclusive Listing Brokerage Milborne Group Brokerage. Brokers Protected. E. & O.E.

# உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்க செயற்பாட்டாளர் கனடா வாழ் வீ.எஸ். துரைராஜா தொடர்பான "ஒரு சமூக சிற்பியின் பட்டறிவு பகிர்வு" நூலின் அறிமுக விழா கொழும்பில் நடைபெற்றது



கொழும்பு கலை, இலக்கிய, ஊடக நண்பர்கள் வட்டம் இணைந்து ஏற்பாடு செய்த முன்னாள் கனடா தமிழ்க் கல்லூரி தலைவரும், சத்தியப் பிரமாண ஆணையாளருமான “சமூக சிற்பி” வீ.எஸ். துரைராஜா அவர்களின் “ஒரு சமூக சிற்பியின் பட்டறிவு பகிர்வு” என்ற நூலின் அறிமுக விழா கொழும்புத் தமிழ் சங்க விநோதன் மண்டபத்தில் ஞானம் சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் “சாகித்ய ரத்னா” மருத்துவர் தி. ஞானசேகரன் தலைமையில் 02.04.2024 செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

கனடா வாழ் வீ.எஸ். துரைராஜா அவர்கள் உலகத்தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் தீவிரமான செயற்பாட்டாளர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.



விழாவில் முக்கிய அழைப்பாளராக மூத்த அரசியல்வாதி திரு. வீ. ஆனந்தசங்கரி அவர்கள் கலந்து கொண்டதுடன், அவரைப் பற்றி திரு. வீ.எஸ். துரைராஜா அவர்கள் குறிப்பிடும்போது “சங்கரி” அண்ணன் என அன்போடு அழைத்தார்.



கொழும்பு சைவ மங்கையர் வித்தியாலய மாணவி செல்வி. சத்திகா சிறிகுமரனின் தமிழ் வாழ்த்துடன் ஆரம்பமானது. இந்நிகழ்வில் திருமதி. லீலாவதி மோகனசுந்தரம் வரவேற்புரை நிகழ்த்தினார். வாழ்த்துரைகளை கொழும்புத் தமிழ் சங்கத் துணைத் தலைவர் திரு. த. அரியரத்தினம், சிரேஷ்ட சட்டத்தரணி திருமதி. சுகந்தி இராஜகுலேந்திரா ஆகியோர் வழங்கினார்கள்.

இந்நிகழ்வில் தினகரன், தினகரன் வார மஞ்சரி பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர் மற்றும் முனைவர் சிவலிங்கம் சதீ'குமார் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து சிறப்பு செய்தனர்.

நூலாசிரியர் அறிமுகத்தை சமூக சேவையாளர் திரு. ஆராக்கியம் பிரான்சிஸ் நிகழ்த்த, நூல் அறிமுகத்தை சிரேஷ்ட ஊடகவியலாளர் திருமதி. உமாச்சந்திரா பிராகாஷ் வழங்கினார்.

நூல் வெளியீட்டில் முதற் பிரதியை புரவலர் ஹாசீம் உமர் பெற்றுக் கொண்டார். தொடர்ந்து ஊடகவிலாயர் கே. பொன்னுத்துரையின் நன்றியுரையும், நூலாசிரியர் “சமூக சிற்பி” வீ.எஸ். துரைராஜா அவர்களின் ஏற்புரையும் இடம்பெற்றது.

# இலங்கை "பகிடியா கதைப்பம்" புரடக்ஷன்ஸ் தயாரித்த "ஒரு ட்ரிப் போவம்" என்ற நகைச்சுவை நிறைந்த திரைப்படம் கனடாவில் திரையிடப்படுகின்றது




இலங்கையில் இயங்கிவரும் “பகிடியா கதைப்பம்” புரடக்ஷன்ஸ் தயாரித்த “ஒரு ட்ரிப் போவம்” என்ற நகைச்சுவை நிறைந்த திரைப்படம் எதிர்வரும் ஏப்ரல் 6ம் 7ம் திகதிகளில் கனடாவில் திரையிடப்படுகின்றது.

திரையரங்கில் திரையிடப் படவுள்ள இந்த இலங்கையில் தயாரான நகைச்சுவை நிறைந்த திரைப்படத்தை கனடா வாழ் நகைச்சுவையை விரும்பும் ரசிகர்கள் பார்த்து மகிழ வேண்டும் என தயாரிப்பாளர்கள் அழைக்கின்றார்கள். கட்டணம் 15 டாலர்கள் மட்டுமே.

மேலதிக விபரங்களுக்கு (416) 771-9286 என்னும் தொலைபேசி இலக்கத்தை அழைக்கவும்.

trm8885@gmail.com என்னும் மின்னஞ்சல் முகவரியிலும் தொடர்பு கொள்ளலாம்.

திரைப்படம் வெற்றி பெற “கனடா உதயன்“ வாழ்த்துகின்றான்!

---

# மரண அறிவித்தல்

மலர்வு: 20-08-1936
உதிர்வு: 01-04-2024

**யாழ். பண்டத்தரிப்பு, அம்மன் வீதியைப் பிறப்பிடமாகவும், தற்போது ஸ்காபரோவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. புவனேஸ்வரி இளையதம்பி அவர்கள் 01-04-2024 திங்கட்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.**

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா - நாகரத்தினம் தம்பதிகளின் அருமை மகளும், காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - பார்வதி தம்பதிகளின் அன்பு மருமகளும்,

காலஞ்சென்ற பொன்னம்பலம் இளையதம்பி அவர்களின் அன்பு மனைவியும்,

காலஞ்சென்றவர்களான கண்மணி, நடராசா, பாக்கியம், இலட்சுமணசாமி மற்றும் தியாகராசா (கனடா), கந்தசாமி (இலங்கை), மனோகரன் (அவுஸ்திரேலியா), இராஜமனோகரி (பிரித்தானியா) ஆகியோரின் அன்புச் சகோதரியும்.

கணேசமூர்த்தி (கனடா), காலஞ்சென்ற பேரின்பமூர்த்தி, மற்றும் நந்தினி (கனடா), பாஸ்கரன்(பாபு,கனடா), பகீரதன்(கனடா),கிருபாகரன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும்,

ரேவதி, ராசாத்தி, ஜெயக்குமார், சியாமளா, விக்னேஸ்வரி, கவிதா ஆகியோரின் மாமியும்,

கஜன், ரிஷி, அருண், கீர்த்தனா, கெதுஷன், தீபிகா, கோபின், நவீன், சியாகரன், ஜிந்துயா, தன்சயா, கிஷாந், கபில்ராஜ், யதுசாந், அலிசா, கஜனி, குபேரி, வினோத் ஆகியோரின் பாசமிகு பேத்தியும்,

றியா, மாயா, ஜியா, ஆரி ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

***அன்னாரின் பூதவுடல் Chapel Ridge Funeral Home & Cremation Centre (8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1) இல் 06-04-2024 சனிக்கிழமை மாலை 1:30 மணிமுதல் 4:30 மணிவரை பார்வைக்கு வைக்கப்பட்டு, மறுநாள் 07-04-2024 ஞாயிற்றுக்கிழமை அன்று மதியம் 12:30 மணி முதல் மாலை 1:30 மணிவரை பார்வைக்கு வைக்கப்பட்டு பின் ஈமைக்கிரியைகள் நடைபெற்று தகனம் செய்யப்படும்.***

இவ்வறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள்
அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**தகவல்: குடும்பத்தினர்**
**தொடர்புகளுக்கு: கணேசமூர்த்தி (மகன்): (416) 209-5091**
**பகீரதன் (மகன்): (416) 629-6248**



**திருமதி. புவனேஸ்வரி (பூபதி) இளையதம்பி**

**(பண்டத்தரிப்பு இலங்கை, ரொறன்ரோ கனடா)**

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# மன்னார் புதுக்குடியிருப்பு முகைதீன் ஜூம்மா பள்ளியில் மதங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த இப்தார் நிகழ்வு

மன்னார் நிருபர்







(04-04-2024)

இலங்கையின் வட மாகாணத்தில் ஏனைய மாவட்டங்களை விட மன்னார் மாவட்டத்திற்கு என ஒரு சிறப்பு காணப்படுகின்றது. பல் மதங்கள் ஒற்றுமையுடன் வாழ்கின்ற ஒரு மாவட்டமாக மன்னார் மாவட்டம் திகழ்கிறது என மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் கே.கனகேஸ்வரன் தெரிவித்தார்.

மன்னார் புதுக்குடியிருப்பு முகைதீன் ஜும்மா பள்ளியில் புதன்கிழமை (3) மாலை நோன்பு திறக்கும் இப்தார் நிகழ்வு புதுக்குடியிருப்பு முகைதீன் ஜும்மா பள்ளி நிர்வாகத்தின் ஏற்பாட்டில் இடம் பெற்றது.

மதங்களுக்கு இடையிலான நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் வகையில் இடம் பெற்ற குறித்த இப்தார் நிகழ்வில் விருந்தினராக கலந்து கொண்டு உரை நிகழ்த்துகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கை பல்லின மக்களையும், பல மொழிகளை பேசுகின்றவர்களையும் கொண்டுள்ள ஓர் அழகிய நாட-ாக உள்ளது.இலங்கையின் வட மாகாணத்தில் ஏனைய மாவட்டங்களை விட மன்னார் மாவட்டத்திற்கு என ஒரு சிறப்பு காணப்படுகின்றது.

பல் மதங்கள் ஒற்றுமையுடன் வாழ்கின்ற ஒரு மாவட்டமாக மன்னார் மாவட்டம் திகழ்கின்றது.

மன்னார் மாவட்டத்தில் சர்வ மதங்களை சேர்ந்தவர்கள் ஒற்றுமையாக வாழ்ந்து வருகின்றனர். ஒற்றுமையாக சமாதானத்துடன் இன ஐக்கியத்துடன் வாழ்ந்து வருகின்றார்கள்.

இலங்கை ஜனநாயக குடியரசின் அரசியல் அமைப்பில் கூறப்படுகிறது இலங்கையில் அனைத்து மக்களுக்கும் சமமான அந்தஸ்து கொடுக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொருவரும் தாம் விரும்பிய மதத்தை பின்பற்றக்கூடிய மதச் சுதந்திரம் அரசியல் அமைப்பின் ஊடாக இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ளது. என அவர் தெரிவித்தார்.

குறித்த நோன்பு திறக்கும் இப்தார் நிகழ்வில் மன்னார் பிரதேசச் செயலாளர் எம். பிரதீப், அருட் தந்தையர்கள், இஸ்லாமிய மத தலைவர்கள், பொலிஸ் அதிகாரிகள், அனைத்து கிராமங்களின் நிர்வாகிகள், கிராம மக்கள் என பலர் கலந்து கொண்டு மதங்களுக்கு இடையிலான நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் வகையில் குறித்த நிகழ்வில் பங்கு கொண்டமை குறிப்பிடத்தக்கது.



# மன்னாரில் நன்னீர் புகைக் கருவாடு பதனிடும் உற்பத்தி நிலையம் திறந்து வைப்பு



மன்னார் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பாலைப் பெருமாள் கட்டு கிராம உத்தியோகத்தர் பிரிவில் குருவில் கிராமத்தில் நன்னீர் புகைக் கருவாடு பதனிடும் உற்பத்தி நிலையம் திறந்து வைக்கப்பட்டது.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர். க. கனகேஸ்வரன் அவர்களினால் 3ம் திகதி புதன்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

உலக உணவு திட்டத்தின் நிதி பங்களிப்புடன் நன்னீர் புகைக் கருவாடு உற்பத்தியை மேம்படுத்தும் நோக்கில் குருவில் கிராமத்தில் நன்னீர் புகைக் கருவாடு உற்பத்தியில் ஈடுபடும் தொழில் முயற்சியாளரினால் அமைக்கப்பட்ட உற்பத்தி நிலையம் திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் க. அரவிந்தராஜ் ,மன்னார் மாவட்ட செயலக திட்டமிடல் பணிப்பாளர், மாவட்ட உலக உணவுத் முகாமைத்துவ அலகு தலைமை அதிகாரி, பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் கிராம மக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.





# தமிழர்கள் மீதான இன அழிப்பு மற்றும் படுகொலை:
## ஆதாரங்களுடன் ஆவணப்படுத்தப்பட்ட கையேடு சுவிஸ்ஸில் வெளியீடு

**(“கனடா உதயனு”க்கான சிறப்புக் கட்டுரை) - சுவிஸ்ஸிலிருந்து சிவா பரமேஸ்வரன்**




**தா**ட்சாயணி பாராட்டுக்குரியவர். அவரது அயராத பணியும் ஈடுபாடும் அளப்பரியது. தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளை ஆவணப்படுத்தும் முயற்சியில் அவரது அசாத்தியமான ஈடுபாடு வியக்க வைக்கிறது.

இந்த கையேடு சுவிஸ்ஸில் வெளியீடாவதற்கு அங்கு 40 ஆண்டுகளுக்கும் மேலாக வாழ்ந்து வரும் சிவா (சிவராசா) கனகசபை அவர்களின் பங்களிப்பு மிகப்பெரிய அளவில் இருந்ததை காண முடிந்தது.

தாட்சாயணி இந்த ஆவணப்படுத்தலை கையாண்ட விதம் புதுமையான முயற்சி மட்டுமல்ல தொலைநோக்கு பார்வையும் கொண்டது.

சரியாக 15 ஆண்டுகளுக்கு முன்னர், முள்ளிவாய்க்காலில் ரத்தக்களறியில் முடிவடைந்த கொடூரமான யுத்தம் இன்றளவும் விடையளிக்கப்படாத பல கேள்விகளை எழுப்பியுள்ளது. அவ்வகையில் கேள்விகள் ஓராயிரம். ஆனால், பதில் என்னவோ ஒன்றுகூட இன்றுவரை இல்லை.

அந்த ஒற்றை பதிலாவது இதய சுத்தியுடன் என்று வெளியாகிறதோ அன்று தான் பாதிக்கப்பட்டவர்களுகான நீதி வழங்கலின் முதல் படி எடுத்து வைக்கப்படும். அந்த முதல் அடி எடுத்துவைக்கப்படும் போது தான் தமிழ்ச் சமூகத்திற்கு நீதிபரிபாலன வழிமுறைகளில் நம்பிக்கை ஏற்படக்கூடும்.

இலங்கை அரச தரப்பு பொறுப்புக்கூறல் விடயத்தில் தொடர்ச்சியாக இழுத்தடிப்பு வேலையைச் செய்கிறது. காலத்தை இழுத்தடிப்பதால் இடம்பெற்ற கொடூரங்களை மூடி மறைத்துவிடலாம் என்ற ஒரு எண்ணப்பாடு கொழும்பில் இருப்பதாகத் தோன்றுகிறது. ஒவ்வொரு ஆட்சியாளரும் இந்த பிரச்சனையை அடுத்தவர்கள் பார்த்துக்கொள்ளட்டும் என்கிற மோசமான சிந்தனையில் இருப்பதையும் காணக்கூடியதாக இருக்கிறது.

கேட்கப்படும் கேள்வி என்னவோ மிகவும் எளிமையானது. “இந்த இனவழிப்பு மற்றும் இனப்படுகொலைகளுக்கு யார் காரணம். உண்மைகள் ஏன் மூடி மறைக்கப்படுகின்றன. காணாமல் போனவர்களுக்கு என்ன நடந்தது?” இதற்கான பதிலை அளிப்பதற்கு ராஜபக்ச, மைத்திரி, ரணில் ஆகியோர் மட்டுமல்ல அவர்களுக்கு முன்னர் ஆட்சியில் இருந்தவர்களும் அடுத்து ஆட்சிக்கு வரப்போகிறவரும் தயாராக இல்லை என்பது கசப்பான உண்மை.

இலங்கையின் போர் காலத்தில் இடம்பெற்ற படுகொலைகளுக்கு இன்றளவும் நீதி கிடைக்காத நிலையில், போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் தாங்கள் வசிக்கும் புலம்பெயர்ந்த தேசங்களில் இலங்கையில் இடம்பெற்றது “இன அழிப்பு மற்றும் இனப்படுகொலை” என்பதை ஆவணப்படுத்தும் முயற்சியில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர்.

அது முறையாக ஆவணப்படுத்தப்படும் போது உண்மையை மறைப்பது சாத்தியப்படாது. அவ்வகையில் உண்மைகள் பல ஆண்டுகளாக, பல தளங்களில் வெளியாகியிருந்தாலும், அவற்றை ஒருங்கிணைத்து எக்காலத்திற்கும் எளிதில் கிடைக்கும் வகையிலான தேவையை தனியொரு யுவதி செய்திருக்கிறார்.

அவ்வகையில் ஜெர்மனில் வசிக்கும் தாட்சாயிணியின் விடாமுயற்சியும், தீவிரமான ஈடுபாடும் தொழில்நுட்ப ரீதியாக மேம்பட்ட ஒரு கையேடு வெளியாக வழிவகுத்துள்ளது. அதுவும் ஒரு மொழியில் மட்டுமல்ல, நான்கு மொழிகளில் “தமிழின படுகொலைக் கையேடு” பகுதி 1 & 2 ஸ்விஸ் நாட்டின் பெர்ண் நகரிலுள்ள ஞானலிங்கேஸ்வரர் ஆலயத்தில் மார்ச் 24 அன்று வெளியிடப்பட்டது.

மிகவும் நேர்த்தியாக வடிவமைக்கப்பட்ட அந்த புத்தகம் எடையில் மட்டுமல்ல மனதளவிலும் கனமாக இருக்கிறது. சீரான வகையில் காலக்கிரமத்தில் ஆண்டு, மாதம் மற்றும் திகதி வாரியாக இலங்கை அரச படைகளால் முன்னெடுக்கப்பட்ட தாக்குதல்கள் அதில் பட்டியலிடப்பட்டுள்ளன.

இனப்படுகொலை மற்றும் இன அழிப்பு தொடர்பான தகவல்கள் எப்படி ஆவணப்படுத்தப்பட வேண்டும் என்பதற்கு தாட்சாயிணியின் ஆவணக் கையேடு ஒரு உதாரணமாகத் திகழ்கிறது. இந்த கையேடு அவ்வாறான பாதிப்புகளுக்கு உள்ளான இனங்கள் தமது நாடுகளில் இடம்பெற்ற பாரிய மனித உரிமைகள் மீறல்களை ஆவணப்படுத்த ஒரு முன்னுதாரணமாக அமையும் என்பதில் ஐயமில்லை.

ஒவ்வொரு பக்கத்திலும் நான்கு மொழிகளில்- தாக்குதல்கள் எந்த இடத்தில் இடம்பெற்றன, எப்படியான தாக்குதல், எவ்வழியான தாக்குதல், ஏற்பட்ட பாதிப்புகள், உயிரிழப்புகள், அழிவுகள் ஆகியவை உரிய தரவுகள் மற்றும் ஆதாரங்களுடன் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.

அனைத்திலும் சிறப்பாக - ஒவ்வொரு பக்கத்தையும் டிஜிட்டல் தொழில்நுட்பத்தின் மூலம் அணுக ஏதுவாக அந்த தாக்குதல் குறித்த செய்திகளை மேலதிகமாக அறிந்துகொள்ள கியூ ஆர் கோட் (QR Code) ஒன்றும் கொடுக்கப்பட்டுள்ளது. இது நவீனமானதொரு உத்தி. இப்படி டிஜிட்டல் முறையில் தரவுகள் மற்றும் தகவல்கள் ஆவணப்படுத்தப்படும் போது, அவை எக்காலத்திற்கும் நிலைத்திருக்கும். அந்த தொலைநோக்குப் பார்வையுடன் தொகுப்பாளர் தாட்சாயணி செயற்பட்டிருப்பது பாராட்டுக்குரியது.



உதாரணமாக, பக்கம் 236இல் 1990 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 6 ஆம் திகதிய படுகொலைகளை ஆவணப்படுத்துகிறது. அம்பாறை மாவட்டம் திராயக்கேணிப் பகுதியில் “முஸ்லிம் ஆயுதக் குழுவினர் விசேட அதிரடிப் படையினருடன் இணைந்து 90க்கும் மேற்பட்ட தமிழர்களை வெட்டியும், சுட்டும், எரித்தும், படுகொலை செய்தனர். 350க்கும் மேற்பட்ட வீடுகள் எரியூட்டப்பட்டன. பெண்கள் பாலியல் வன்புணர்வின் பின்னர் படுகொலை செய்யப்பட்டனர்.” என்ற தகவலுடன் மனதை உருக்கும் புகைப்படமும் ஆவணப்படுத்தப்பட்டுள்ளது. அந்தச் செய்திக்கான மூலாதாரமும் கொடுக்கப்பட்டுள்ளது.

அதே போன்று பக்கம் 283இல் 1995 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 22 ஆம் திகதி (யாழ்ப்பாணம்) நாகர்கோவில் மகா வித்தியாலத்தில் உணவு இடைவேளையின் போது விளையாடி கொண்டிருந்த மாணவர்கள் மீது இலங்கை வான் படையினர் நடத்திய தாக்குதலில் 21 மாணவர்கள் உட்பட 39 தமிழர்கள் கொல்லப்பட்டதும், 200க்கும் அதிகமானவர்கள் காயமடைந்ததும் ஆவணப்படுத்தப்பட்டுள்ளது. இத்தாக்குதலில் உயிரிழந்த அப்பாவி மாணவர்களின் படங்களை பார்க்கும் வல்லமை பலவீனமானவர்களுக்கு இருக்காது.

இதற்கு இரண்டு பக்கங்கள் முன்னர் 281ஆவது பக்கத்தில் கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்ற படுகொலை ஆவணப்படுத்தப்பட்டுள்ளது 20.09.1992 ஆம் ஆண்டு ஈழநாதம் பத்திரிகையில் வெளியான செய்தியின் அடிப்படையில் தாட்சா இந்த படுகொலையை ஆவணப்படுத்தியுள்ளார். “மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர் முகாமிலிருந்து புறப்பட்ட இராணுவத்தினர் மற்றும் முஸ்லிம் ஊர்காவல் படையினரால்: சவுக்கடி, தளவாய், மயிலெம்பாவெளி, ஆறுமுகத்தான் குடியிருப்பு பகுதிகளைச் சேர்ந்த பெண்கள், குழந்தைகள் உட்பட 47 தமிழர்கள் சுட்டும் வெட்டியும் படுகொலை செய்யப்பட்டனர்” என்ற தகவல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இலங்கையின் தமிழர் தாயகப் பகுதியில் இடம்பெற்ற படுகொலைகள், மனித உரிமை மீறல்கள் ஆகியவற்றை ஆவணப்படுத்தும் போது பக்கசார்பற்ற நிலையை தொகுப்பாளர் தாட்சா கையாண்டுள்ளதையும் கவனிக்க முடிகிறது.

“படுகொலைகள் மற்றும் வலிந்து காணா-மல் ஆக்கப்பட்டவர்கள் குறித்த தகவல்கள்” என்கிற இரண்டாம் பகுதியில் அவர் மட்டக்களப்பு மாவட்டம் காத்தான்குடியில் இடம்பெற்ற படுகொலையையும் ஆவணப்படுத்த தவறவில்லை. இது தொகுப்பாளரின் நேர்மைக்கு ஒரு உரைகல்லாக இருக்கிறது என்று கூற முடியும். அந்த இரண்டாம் பகுதியின் பக்கம் 112 இல் அவர் காத்தான்குடி படுகொலையை ஆவணப்படுத்தியுள்ளார்.

“கிழக்கு மாகாணத்திலுள்ள காத்தான்குடியில் அமைந்திருந்த பள்ளிவாசல்களில் தொழுகையிலீடுபட்டிருந்த 147 தமிழ் இசுலாமியர்களை ஆயுதமேந்திய தமிழ்க்குழுவொன்று படுகொலை செய்தமையானது இசுலாமியத் தமிழர்களுக்கும், இசுலாத்தைப் பின்பற்றாத தமிழர்களுக்கும் இடையிலான பதற்றத்தை அதிகரித்தது. 03.08.1990 அன்று நடந்த இனப்படுகொலையை நடத்தியது விடுதலைப் புலிகளெனக் குற்றஞ்சாட்டப்பட்ட போதிலும், அது இலங்கை அரசிற்கு ஆதரவான வேறோர் தமிழ்க் குழுவாக இருந்திருக்கலாம் என்பதற்கான சான்றுகள் உள்ளன. விடுதலைப் புலிகள் இப்படுகொலையைத் தாம் செய்யவில்லை என மறுத்திருந்தனர். இக்கொடூரப் படுகொலை தீவின் வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள இசுலாத்தைப் பின்பற்றாத தமிழர்களுக்கும், இசுலாத்தைப் பின்பற்றும் தமிழர்களுக்கும் இடையே ஒற்றுமையைக் குலைக்கும் இலங்கை அரசியின் வியூகத்திற்கு பயனளித்தது என்பது தெளிவாகிறது”.

உலகின் பல நாடுகள் புலம்பெயர்ந்த தமிழர்களுக்கு நெருக்கடியை அளித்தன என்பதையும் இரண்டாம் பாகத்தின் 05/06 ஆம் பகுதியில் தொகுப்பாளர் தெரிவித்துள்ளார். அதிலும் குறிப்பாக, இந்த கையேடு வெளியிடப்பட்ட சுவிஸ் நாட்டில் வாழும் தமிழர்கள் எப்படியான அழுத்தங்களுக்கு உள்ளானர்கள் என்பதையும் அவர் அதில் விவரித்துள்ளார்.

ஒரு எடுத்துக்காட்டாக, இந்த கையேடு வெளியிடப்பட்ட நாடான சுவிட்சர்லாந்து தமிழர்கள் மீதான பார்வையை எப்படிக் கொண்டிருந்தது என்பதையும் அவர் விளக்கியுள்ளார்-சுருக்கமாக:

“ஐரோப்பிய ஒன்றியம், அமெரிக்கா மற்றும் பிரித்தானியாவின் அழுத்தம் காரணமாக சுவிஸ்சும் விடுதலைப் புலிகள் அமைப்பை தடைசெய்யப்பட்ட இயக்கமாக அறிவித்தது. இதன் காரணமாக விடுதலைப் புலிகளுக்கு பெரியளவிற்கு நிதியாதாரமாக இருந்து அதில் பங்குவகித்த 40,000 சுவிஸ் தமிழர்கள் அந்த அமைப்பிற்கு நிதி அளிப்பதை தடுத்தது. இந்த தடையை மீறி விடுதலைப் புலிகளுக்கு நிதியுதவி அளித்த தமிழர்களை சுவிஸ் பொலிசாரின் சிறப்புப் படைகள் தேடுதல் நடவடிக்கையை முன்னெடுத்து கைது செய்தது” என்பதையும் அவர் பதிவு செய்துள்ளார்.



இந்தியாவின் நிலைப்பாடு பற்றி குறிப்பிடும் போது, இராணுவ ரீதியாக இலங்கை இராணுவத்திற்கு இந்தியா 100 மில்லியன் அமெரிக்க டொலர்கள் அளித்தது என்றும், போர் விமானங்கள், தாக்குதல் ஹெலிகொப்டர்கள், ஆயுதங்கள் ஆகியவற்றை இந்தியா அளித்தது என்று கூறும் தொகுப்பாளர், போர் நிறுத்த காலத்தில், இந்தியா இலங்கை இராணுவத்திற்கு 5 மில்லியன் டொலர்களுக்கு சிறப்பு ராடார்களையும், இலவசமாக இரண்டு இந்திரா ராடர்களையும் வழங்கின, 13 மிக் 29 விமானங்கள், நூற்றுக் கணக்கான பாதுகாப்பு உடைகள, 5 தாக்குதல் ஹெலிகொப்டர்கள் ஆகியவற்றையும் வழங்கின என்று தாட்சாயணி சுட்டிகாட்டியுள்ளார்.

**(தொடர்ச்சி 21 பக்கம்)**

இலங்கை செய்திகள்
Sri Lanka News



# திருட்டுத்தனமாக மாடுகளைக் கடத்திய பொலிஸ் "திருடன்" உட்பட மூவர் கைது – யாழ்ப்பாணத்தில் சம்பவம்!

2024.04.04 அன்று வியாழக்கிழமை அதிகாலை 03.00 மணியளவில், யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் சிங்கள பொலிஸ் திருடன் உட்பட மூவர் திருட்டுத்தனமாக 08 மாடுகளைக் கடத்திக் கொண்டு செல்லும்பொழுது யாழ்ப்பாண பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட மூவரும், மீட்கப்பட்ட மாடுகளுடன் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தப்பட்டுள்ளனர்.

இவர்கள் புங்குடுதீவு பிரதேசத்தில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வரும்பொழுது பண்ணையில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்கள். மேலதிக விசாரணைகளின் பின்னர் அவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலுடன் அரசியலில் இருந்து ஓய்வு பெறவுள்ளதாக அமைச்சர் டக்ளஸ் அறிவிப்பு

எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலுடன் அரசியலில் இருந்து ஓய்வு பெறத் தீர்மானித்துள்ளதாத ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் கடற்தொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

04-04-2024 வியாழக்கிழமை யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற சமூர்த்தி உத்தியோகத்தர்களுடனான கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நான் ஆயுதப் போராட்டத்தில் இருந்து அரசியலில் நீரோட்டத்துக்கு பல்வேறு தடைகளைக் கடந்து வந்தவன்.

தமிழ் மக்களின் அரசியல் அன்றாடப் பிரச்சினை மற்றும் அபிவிருத்தி என்பவற்றை எனது அரசியல் காலத்தில் முடிந்தவரை பெற்றுக் கொடுப்பதே எனது இலக்கு.

துரதிஸ்டவசமாக எனக்கு கிடைத்த ஆசனங்கள் போதாமையால் தெற்குடன் பேரம் பேசும் சக்தியை மக்கள் வழங்கவில்லை.

தமிழ் மக்களுக்கு எதையாவது பெற்றுக் கொடுக்க வேண்டுமே என்ற நினைப்பு மட்டும் எனக்கு இருக்கிறது மக்களை வைத்து அரசியல் செய்ய வேண்டிய தேவை எனக்கு இல்லை.

நான் கடந்த முறை பாராளுமன்றத் தேர்தலின் பின்னர் அரசியலில் இருந்து ஓய்வு பெறலாம் என நினைத்திருந்தேன் ஆனால் சில விடயங்களை தொடக்கி விட்டேன் முடித்து விடலாம் என்ற நம்பிக்கையுடன் அரசியலில் ஈடுபட்டேன்.

ஆகவே எனக்கும் வயது சென்று கொண்டிருக்கிறது உடல் இயலாமை தெரிகிறது அதனால் எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலுடன் அரசியலில் இருந்து ஓய்வு பெறவுள்ளேன் என அவர் மேலும் தெரிவித்தார்.


வீணைமைந்தனின்

“தொலைந்துபோன வசந்தகாலங்கள்”

(போருக்கு முன்பும் பின்பும் ஒரு ஊரின் கதை)

(2ம் பதிப்பு)

அறிமுகவிழா

கனடிய தமிழ் எழுத்தாளர் இணையத்தின் ஆதரவில்
புலம்பெயர்ந்த எழுத்தாளர்களின் படைப்புகளின்

கண்காட்சியும் விற்பனையும்

காலம் - 20.04.2024
காலை - 10.00 மாலை 5.00 மணிவரை
இடம் - ரொரன்ரோ ஐயப்பசுவாமி கோயில் கலாச்சார மண்டபம்

பிரவேசம் இலவசம் அனைவரும் வாருங்கள்
ஆதரவு தாருங்கள்
வாசியுங்கள்! நேசியுங்கள்!

தொடர்புகளுக்கு - 514- 684 3604
416- 732 1608
416- 732 8021

கண்காட்சியில் இடம்பெறும் வீணைமைந்தனின் படைப்புகள்

மண்ணும் மனசும்
மறக்கத் தெரியாத மனசு
தமிழ் சினிமாவில் மகாகவி பாரதி பாடல்கள்
நடிகர் திலகம் சிவாஜியும் தமிழ் சினிமாவும்
கவியின் காதல்
வாழ்த்தும் வணக்கமும்


## யாழ் பொதுநூலகத்திற்கு வீணைமைந்தனின் நூல்கள் அன்பளிப்பு

13.03.2024 புதன்கிழமை பி.ப. கனடிய எழுத்தாளர் தரு.வீணைமைந்தன் (கே.ரி.சண்முகராஜா) எழுதிய நூல்களில் 06 படைப்புக்களான:

- தமிழ் சினிமாவும் நடிகர் திலகமும்
- மண்ணும் மனசும்
- மறக்க தெரியாத மனசு
- தமிழ் சினிமாவில் மஹாகவி பாரதி பாடல்கள்
- கவியின் காதல் “நாடகம்”
- வாழ்த்தும் வணக்கமும் “கவிதைகள்”

ஆகிய ஆறு நூல்கள் நூலகப் பிரதம பொறுப்பாளராகிய திருமதி அனுஷ்யா சிவகரன் அவர்களிடம் கையளிக்கப்பட்டது.

மேலும், கனடிய எழுத்தாளரும் கவிஞருமான ஆசிரியர் திரு. க.நவம் அவர்கள் எழுதிய Still I Rise (எனினும் நான் எழுகின்றேன்.) எனும் மொழி பெயர்ப்புக் கவிதைத் தொகுப்பு (ஆங்கிலம், தமிழ்) பிரதியை முன்னை நாள் யாழ் பல்கலைகழக உபவேந்தரும், பேராசியருமான திரு.என்.சண்முகலிங்கன் அவர்களால் நூலக வைப்பிற்கு அன்பளிப்பாக வழங்கப்பெற்றது.

இவ் வைபவத்தில் நூலக ஊழியர்கள் கலந்து புலம் பெயர்ந்த எழுத்தாளர்களின் படைப்புக்களை வரவேற்று பேசியதுடன் படைப்புக்களுக்கு தனி ஒரு பகுதியை ஒதுக்கி வைத்துள்ளதாகவும் கூறினார்கள்.

தகவல் : யாழ் உதயன் நிருபர்




உலகெங்கும் நன்கு அறியப்பெற்ற வருடாந்த நிகழ்வு
உதயன் சரவதேச விருது விழா-2024
Uthayan International Awards Festival – 2024
Dance, Music and Awards Presentation
இசை, நடனம் அத்துடன் விருதுகள் வழங்கும் நிகழ்வு
For Tickets and information: 416 732 1608 or 647 762 9512
மண்டபம்:- The Estate Banquet & Event Centre
430 Nugget Ave, Scarborough, ON M1S 4A4
26th May, 2024 Sunday, at 6.00 PM



# இலங்கையில் சேவையிலிருந்து விலகும் இராணுவத்தினர் ரஸ்சிய இராணுவத்தோடு இணைந்து உக்ரேனுக்கு எதிராக போரிடுகின்றார்களா?

## (கனடா உதயனுக்கான சிறப்பு செய்திப்பார்வை)

- என். புவியரசன்

மிகவும் கடுமையான பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் இலங்கை "எத்தை தின்றால் பித்தம் தெளியும்" என்ற நிலையில் உள்ளது என்பதே யதார்த்தம். அரசின் பொருளாதார நெருக்கடிகளுக்கு கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக "வெள்ளை யானையாக" இருக்கும் அரச படைகள் முக்கிய காரணம் என்பதை யாரும் மறுக்க இயலாது.

ஆனால், போர் முடிந்த பிறகு அந்த "வெள்ளை யானை" இராணுவத்திற்கு தீனி போட இலங்கை அரசால் முடியவில்லை. அது மட்டுமின்றி அவர்களுக்கு போதிய வேலையும் இல்லை. எனவே ஏராளமானவர்கள் முகாம்களிற்குள் முடங்கி கிடக்க வேண்டிய நிலையில் உள்ளனர். வடக்கு கிழக்கில் இராணுவ முகாம்கள் தொடருவதற்கும் இதுவொரு முக்கிய காரணமாக உள்ளது.

இந்நிலையில் இனியும் இவ்வளவு பெரிய படைகளின் கட்டமைப்பை வைத்து சமாளிக்க முடியாது என்கிற உண்மை இலங்கை அரசுக்கு இப்போது புலப்படத் தொடங்கியுள்ளது போலத் தோன்றுகிறது. அவ்வகையில் வேறு வழியின்றி படைக்குறைப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. இதில் படையிலிருந்து விலகியவர்கள் ரஸ்யாவுக்கு சென்று உக்ரைனுடன் தொடரும் யுத்தத்தில் போராடி வருவதையும் காண முடிகிறது.

இதேவேளை இலங்கையின் கட்டளைப் படைத்தளபதிகளின் அமைப்பிலும் மாற்றங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன.

இலங்கை முழுவதும் 12 கட்டளைத் தளபதிகளின் கீழ் இருந்த அமைப்பு பின்னர் 8 ஆக மாற்றப்பட்ட நிலையில், அந்த படைக் கட்டமைப்பு தற்போது 5 கட்டளைத் தளபதிகளின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது. கடும் நிதி நெருக்கடிகளை சமாளிக்க முடியாமல், படைக்குறைப்பு மட்டுமல்லாமல், படைப்பிரிவுகள், கட்டளை அமைப்புகள் ஆகியவற்றையும் அரசு குறைக்க வேண்டிய நிர்பந்தத்திற்கு தள்ளப்பட்டுள்ளது.

அவ்வகையில் மாதம் ஒன்றிற்கு 3 லட்சம் ரூபாவிற்கும் அதிகமாக மேலதிக செலவை ஒரு கட்டளைத் தளபதிக்கு ஏற்படுத்திய கட்டமைப்பு தற்போது குறைக்கப்பட்டுள்ளது. அதேவேளை படையில் இருந்து 5 வருட, 12 வருட மற்றும் 20 வருட பணிக்கால நிறைவிற்கு பின்னர் நிபந்தனைகளுடன் விலகுவோர் தொகை அதிகரிப்பதாகவே படைத்துறைத் தகவல்களும் தெரிவிக்கின்றன. இந்த எண்ணிக்கை இலங்கை பொருளாதார நெருக்கடிக்குள் சிக்குண்டதன் பின்னர் மிக வேகமாக அதிகரிப்பதால் கடந்த 2020 முதல் 2024 இடைப்பட்ட நான்கு ஆண்டுகளிற்குள் 36 ஆயிரம் பேர் வரையில் படையை விட்டு வெளியேறியுள்ளதாக தற்போது தகவல் வெளியாகியுள்ளது.

இராணுவத்தில் பணியாற்றுபவர்கள் 55 மற்றும் 60 வயதுகளுடன் ஓய்வில் செல்வது இயல்பானதாக இருப்பினும் இவற்றினைவிட மேலும் 3 விதிமுறைகளின் கீழேயும் பணியில் இருந்து வெளியேற முடியும்.

இதற்கமைய 5 வருடம் கடமையாற்றிய ஒருவர் முன் அறிவித்தலுடன் அனுமதி பெளியேறலாம். அவ்வாறு விலகுபவருக்கு எந்தவொரு சலுகையும் வழங்கப்பட மாட்டாது. இரண்டாவதாக படையில் 12 வருடக் கடமை நிறைவு செய்து வெளியேற விரும்பும் ஒருவரும் அதை நிறைவேற்றியுள்ளதை உறுதி செய்து வெளியேற முடியும். இருப்பினும் 12 ஆண்டுகள் பணியாற்றியவரும் ஓய்வூதியத்திற்கு தகுதியற்றவராகவே காண்படுவதோடு அவர் இறுதியாக பெற்ற சம்பளத்தின் அடிப்படை சம்பளத் தொகையின் 24 மடங்கு கொடுப்பனவு வழங்கப்படும். அதாவது 12 ஆண்டுகள் படைகளில் பணியாற்றி வெளியேறினால், அவருக்கு இரண்டு வருத ஊதியம் கொடுப்பனவாக அளிக்கப்படுகிறது.

மேற்கண்ட இரண்டு வகையில் படைகளில் இருந்து வெளியேறுவதற்கு அப்பாற்பட்டு மூன்றாவதாக ஒரு வழியும் உள்ளது. அதாவது அந்த விதிமுறையின்படி, படையில் 22 வருடம் கடமையாற்றிய ஒருவர் எந்த வயதிலும் ஓய்விற்கு விண்ணப்பிக்க முடியும்.

அவ்வாறு விண்ணப்பிப்பவர் 20 வயதில் படையில் இணைந்து 43 வயதாகினும் ஓய்வூதியத்தினை தொடர்ந்து பெற்றுக்கொள்ளும் சட்டத்தில் வழியுள்ளது. இந்த 3 கட்ட வழிமுறைகளின் கீழ் கடந்த 4 ஆண்டுகளில் பல ஆயிரம்பேர் படையில் இருந்து விலகியுள்ளதாகவும் மேலும் ஆயிரக் கணக்காணோர் ஓய்வு பெறும் வயதினை எட்டியுள்ள சுமர் 36 ஆயிரம் படையினர் வரையில் வெளியேறியுள்ளனர்.

இதன்காரணமாக படைக் கட்டுமானத்தில் வெற்றிடம் ஏற்பட்டுள்ளது. இதனால் பல நிர்வாகங்கள் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.

இந்த அடிப்படையில யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி என்பன ஒரு கட்டளைத் தளபதியின் கீழும், முல்லைத்தீவு, மன்னார் மற்றும் வவுனியா ஆகிய 3 மாவட்டங்களும் ஒரு கட்டளைத் தளபதியின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளதோடு கிழக்கு மாகாணத்தின் மூன்று மாவட்டங்களும் ஒரே கட்டளைத் தளபதியின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது.

இதேநேரம் இலங்கையின் வடக்கு கிழக்கில் 3 கட்டளைத் தளபதிகள் உள்ள அதேவேளை இலங்கையின் ஏனைய பகுதிகள் அணைத்தும் இரு கட்டளைத் தளபதிகளின் கீழான நிர்வாக கட்டமைப்பு வடிவமைக்கப்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கு மாகாணத்தில் பணியாற்றும் படையினருக்கு உணவும் இந்த 8 மாவட்டங்களிற்கு வெளியே பணியாற்றுபவர்களிற்கு உணவிற்கான கொடுப்பனவும் வழங்கப்படுகின்றது. இதில் நாள் ஒன்றிற்கான உணவிற்கு ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்படும். வடக்கு கிழக்கில் பணியாற்றும் படையினர் விடுமுறையில் செல்லும் 10 நாள்களிற்கு தலா 10 ஆயிரம் மாதக் கொடுப்பனவுடன் இணைத்து வழங்கப்படுகின்றது.

இவ்வாறெல்லாம் தாக்குப்பிடிக்க முடியாத செலவுகளுடன் நிர்வகிக்கப்பட்டு வந்த இராணுவ கட்டளைப் பிரிவுகளின் செலவுகள் இப்போது குறைக்கப்பட வேண்டிய சூழல் உருவாகியுள்ளது.

இதற்கு அப்பாற்பட்டு, ரஸ்ய இராணுவத்தில் பணியாற்றும் வாய்ப்பும் முன்னாள் படை வீரர்களுக்கு உள்ளது என்கிற ஆசை வார்த்தையும் காட்டப்படுகிறது. உக்ரைனுக்கு எதிரான போரில் ரஸ்ய படைகளுடன் இணைந்து போரிட்டால், கணிசமான தொகை ஊதியமாகவும், போரில் உயிரிழந்தால் குடும்பத்தாருக்கு நிரந்திர ஓய்வூதியம் மற்றும் வீடும் ரஸ்ய அரசால் வழங்கப்படுவதும் சுட்டிக்காட்டப்படுகிறது. மேலும், மூன்று தொடக்கம் நான்கு ஆண்டுகள் ரஸ்ய படைகளில் இருந்தால், குடியுரிமை மற்றும் இலவச வீடு ஆகியவற்றிலும் முன்னுரிமை அளிக்கப்படுவதாக கூறப்பட்டுள்ளதை தொடர்ந்து, இலங்கையிலிருந்து ரஸ்ய படைகளில் இணைந்து போரிட முன்னாள் படை வீரர்கள் செல்லத் தொடங்கியுள்ளனர்.

இவ்வாறு இலங்கை இராணுவத்தில் இருந்து விலகியவர்களில் நூறு வரையிலானோர் ரஸ்யப் படைகளில் இணைந்து பணியாற்றுவதாகவும் அதில் இருவர் உயிரிழந்த செய்தி அண்மையில் ஊடகங்களில் செய்தியாக வெளியாகிருந்தமையும் இங்கே குறிப்பிடத்தக்கது.

ரஸ்யாவிற்கும் இலங்கைக்கும் இடையே நிலவும் நல்லுறவின் மூலம் மேலும் தமது படைகளில் இணைந்து உக்ரைனுக்கு எதிரான போரில் ஈடுபட தூண்டில் வீசப்படுகிறது என்றும் அரசியல் மற்றும் இராணுவ ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

## கடந்தவையும் கடப்பவையும் – [93]

வேகமாய் இறக்கி ஓரமாய் நிறுத்தியோர் - அக்கரைக்கு
போவதற்கு ஒழுங்குகளைச் செய்துதர முயன்றனர் - ஆயினும்

முடியாது போகவே ஒரு முடிவுக்கு வந்தவராய்
'முடியுமா உங்களுக்கு டிங்கியில் போகும் - இவ்

வண்டியில் பயணிக்க?' என வினவ
ஒன்றுமே பேசாது இருப்பவரைப் பார்த்து - 'மீண்டும்

நன்றாக யோசித்து முடிவொன்றைச் சொல்லுங்கள்
கொஞ்சநேரம் உள்ளது இவ்வண்டி போக' என்றுசொல்ல

சின்னவர்கள் இருப்பதனால் சிரமம்தான் - ஆனாலும்
இன்றிதனை விட்டுவிட்டால் எங்குபோய்த் தங்குவது?

நின்றவர்கள் எல்லோரும் ஒன்றாக முடிவெடுத்து - அவர்களுடன்
செல்வதற்கு சம்மதித்து அவர்கள்பின் செல்லுகிறோம்

நீலநிறம் 'எல்வ்' என்று சொல்லுவார்கள்
நீளமான பின்பகுதி திறந்திருக்க

ஓட்டுநர் இருக்கையோடு சேர்ந்திட்ட இருக்கை
மட்டுமே மூடியதாய் அதுவிருக்கும் - அது

'டிங்கி' என்றோ அன்றில் '(டீ)பாச்' என்றோ அழைக்கப்படும்
தெப்பமொன்றில் ஏற்றுதற்காய் காத்திருக்கு - அதில்

வண்டியையும் வண்டியொடு எங்களையும் ஏற்றும்போது
தாங்குமா இது என்ற பயமொன்றும் வந்ததுதான்

'நான்கு பக்கமும் நன்றாகக் கட்டியாச்சு
தீங்கேதும் நேராது நின்மதியாய் அமருங்கோ'

உதவிக்கு நின்றவர்கள் ஊக்கம் தந்துவிட்டு - நல்ல
தகுதியான இஞ்சினொன்றை இயக்குதற்காய்

டிங்கியோடு தொடுத்துள்ள வள்ளத்துக்குள் இறங்குகிறார்
மங்கலற்ற நீலவானம் ஆங்காங்கே வெண்முகில்கள்

அழகான காட்சிகள் மனதுக்கு இதமாக
கனநேரம் நின்றதனால் கனகாட்சி பார்த்தாச்சு

மெள்ள மெள்ள நிறம்மாறும் ஆகாயம்
கொள்ளை அழகு ஒவ்வொரு நொடியும்

நீலம், மஞ்சள், செம்மஞ்சள், சிவப்பு என - அதன்
கோலங்கள் யாவையும் பார்த்து முடிய

மெல்லிய இருள் படர சில் என்ற கடற்காற்று
அள்ளி வந்து உடல் வருட ஆனந்தக்களிப்போடு

அகதிகள் நாங்கள் என்பதையும் மறந்தொரு
மகிழ்வான பயணம் தொடங்கியது

ஆழம் குறைந்த பகுதிபோய் ஆழ்கடல் வந்திடவே
சூழவுள்ள பகுதியெல்லாம் சூனியமாய் புலப்படவே

ஓரிரு வெள்ளிகளின் வெளிச்சத்தில் ஆங்காங்கே
மினுங்கிக்கொள்ளும் கடல் அலையின் அசைவுகள்- தெப்பம்

நகருவதை உணர்த்தினாலும் விரைவாக நகராமை
நகர்த்தியான இஞ்சினது பிழைத்ததைச் சொல்லியது

நடுக்கடலில் நடுநடுங்கும் கடுங்குளிரில்
உடுத்திருந்த ஆடைகளும் குளிரேற

கடும்பசியில் வயிறுகளும் சங்கூத - கையோடு
எடுத்துவந்த தோடம்பழமும் வறுத்த முந்திரிக்கொட்டையும்

அப்பப்போ கைகொடுக்க எப்போவரும் விடிவெள்ளியென
எப்பவும் திறந்திருக்கும் அப்பெரும் வானத்தைப் பார்த்தபடி

காத்திருந்தோம்.......

(தொடரும்)

-- உமா மோகன் -- மொன்றியால் - கனடா --

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

## Tamil Rights Group's Delegates at the UNHRC's 55th Session

# ஐக்கிய நாடுகள் மனித உரிமை சபையின் 55வது அமர்வில் தமிழர் உரிமைக் குழு...

ஐநா மனித உரிமைகள் பேரவையின் மனித உரிமை சபையின் 55வது கூட்டத்தொடர் முடிவடைந்த நிலையில், கனடா தமிழ் உரிமைகள் குழு **(TRG)** அமர்வு முழுவதும் நடந்த விவாதங்கள் மற்றும் முன்னேற்றங்களைப் பற்றி சிந்திக்க இந்த தருணத்தைப் பயன்படுத்துகிறது. இலங்கையின் நிலைமையை நிவர்த்தி செய்யும் கருத்துக்களில் ஒரு குறிப்பிட்ட கவனம் செலுத்துவதன் மூலம், விவாதிக்கப்பட்ட முக்கியமான பிரச்சினைகளை வெளிச்சம் போட்டுக் காட்டவும், வுசுபு இன் ஈடுபாட்டை முன்னிலைப்படுத்தவும், தமிழ் மக்களுக்கு மனித உரிமைகள் மற்றும் நீதிக்காக வாதிடுவதற்கான தற்போதைய உறுதிப்பாட்டை வலியுறுத்தவும் தமிழர் உரிமைகள் குழு நோக்கமாக உள்ளதை அங்கு வெளிக்காட்டியது

2024 ஆம் ஆண்டு மார்ச் 1 ஆம் தேதி, ஜெனிவா சுவிட்சர்லாந்தில் நடைபெற்ற மனித உரிமைகள் பேரவை அமர்வின் 55 வது அமர்வில், இலங்கையில் நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறலில் முன்னேற்றம் குறித்த வாய்மொழி அறிவிப்பை ஐநா மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க் வழங்கினார்.

தமிழர் உரிமைகள் குழு இந்த கருத்துக்களை வரவேற்றது, குறிப்பாக "இலங்கையில் நிலையான அமைதி மற்றும் நல்லிணக்கத்தை பிற்போக்கான சட்டங்கள் மற்றும் எதேச்சாதிகார அணுகுமுறைகள் மூலம் அடைய முடியாது, இது கடந்த கால மனித உரிமைகள் கவலைகளை நிலைநிறுத்த மட்டுமே உதவும்" மற்றும் "வேர்" நாட்டின் மோதலுக்கு காரணம்" என்பது உண்மையான பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கத்திற்கு முக்கியமான காரணிகளில் ஒன்றாகும்.

இலங்கையில் நிலவும் பொருளாதார நெருக்கடிகள், அடிப்படை உரிமைகளை பாதிக்கும் சட்டவாக்க முன்னேற்றங்கள், நடந்துகொண்டிருக்கும் மனித உரிமை மீறல்கள், தீர்க்கப்படாத காணாமல் போன வழக்குகள், காணி சர்ச்சைகள், ஈஸ்டர் ஞாயிறு குண்டுவெடிப்பைத் தொடர்ந்து உண்மை மற்றும் நீதிக்கான வேட்கை போன்றவற்றையும் அந்த அறிக்கையில் இந்த தமிழர் உரிமைகள் குழு சுட்டிக்காட்டியுள்ளது.

எவ்வாறாயினும், தமிழ் மக்கள் மீதான கணிசமான தாக்கத்தை வெளிப்படையாக அங்கீகரிக்கத் தவறிய அறிக்கை தொடர்பான எமது தொடர்ச்சியான கவலையை முன்னிலைப்படுத்துவது அவசியமாகும் அங்கு தெரிவிக்கப்பட்டது. இலங்கையில் மனித உரிமை மீறல்கள் மற்றும் சமூக-பொருளாதார சவால்கள் பற்றிய முழுமையான சித்தரிப்பு இருந்தபோதிலும், தமிழ் சமூகத்தின் மீது விகிதாசாரமற்ற தாக்கத்தை குறிப்பிட்ட அங்கீகாரம் இல்லாதது குறிப்பிடத்தக்கது. அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள முதன்மையான பாதிக்கப்பட்டவர்கள் உண்மையில் தமிழர்கள்தான் என்பதை ஒரு விரிவான புரிதலை உறுதிப்படுத்த, இந்த இடைவெளியை அங்கீகரிப்பதும் சரிசெய்வதும் கட்டாயமாகும். பாதிக்கப்பட்டவர்களின் கலாச்சார அடையாளத்தை அங்கீகரிப்பது மோதலின் மூல காரணங்களை விரிவாக ஆராய்வதற்கும், தமிழ் மக்களுக்கான மனித உரிமைகள் மற்றும் பாதுகாப்புகளை நிலைநிறுத்துவதன் முக்கியத்துவத்தை இலங்கை அரசாங்கம் ஏன் தொடர்ந்து புறக்கணிக்கிறது என்பதைப் புரிந்துகொள்வதற்கும் மிக முக்கியமானது. தமிழ் மக்கள் மீதான கணிசமான தாக்கத்தை தெளிவாக அங்கீகரிப்பதன் மூலமே, உண்மை, பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கத்திற்கான போருக்குப் பிந்தைய கடமைகளுக்கு இலங்கை அரசாங்கத்தை ஐ.நா. வற்புறுத்த வேண்டும் என்றும் கோரிக்கை விடப்பட்டது.

பெப்ரவரி 29ஆம் திகதி, தமிழர் உரிமை குழு பிரதிநிதிகள் குழுவொன்று வலுக்கட்டாயமாக காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான குழுவுடனான தனிப்பட்ட சந்திப்பில் கலந்து கொண்டு, இலங்கையில் குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கு பிராந்தியங்களில் உள்ள தமிழ் சமூகத்தை பாதிக்கும், பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான பாரதூரமான கவலைகளை எடுத்துக்காட்டும் விரிவான அறிக்கையை சமர்ப்பித்தது. நீதித்துறை சுதந்திரத்திற்கான சவால்கள், தண்டனையின்மை, பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களை அச்சுறுத்துதல், காணாமல் போனோர் அலுவலகத்தின் குறைபாடுகள், இலங்கையின் சட்ட கட்டமைப்பு தொடர்பான விடயங்கள் மற்றும் இலங்கையின் சமீபத்திய அறிக்கை மீதான அவதானிப்புகள் குறித்து குழு விவாதித்தது. தமிழர் உரிமை குழுவின் சமர்ப்பிப்பை வரவேற்றது மற்றும் கூட்டத்தின் போது விவாதிக்கப்பட்ட குறிப்பிட்ட வழக்குகள் தொடர்பான தகவல்களை முறையாகக் கோரியது. மேலும், 2024 ஜூன் மாதத்தில் இலங்கை மற்றொரு எழுத்துப்பூர்வ பதிலைச் சமர்ப்பிக்க எதிர்பார்க்கப்படுவதால், சமீபத்திய வழக்குகள் தொடர்பான ஆதாரங்களைத் தொடர்ந்து வழங்குமாறு தமிழர் உரிமை குழுவிற்கு குழு திறந்த அழைப்பை விடுத்தது.

இந்த ஆண்டு அமர்வின் போது தமிழர் உரிமை குழு மூன்று வாய்மொழி அறிக்கைகளையும் சமர்ப்பித்தது:

உருப்படி 3: இலங்கையில் வலுக்கட்டாயமாக காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரத்தில் ஊடாடும் உரையாடல்

மார்ச் 19, 2024
வழங்குபவர் : திருமதி உமா ருத்திரமூர்த்தி, சட்ட தன்னார்வலர்

திருமதி ருத்திரமூர்த்தி தனது உரையின் போது, இராணுவம் மற்றும் பொலிசாரின் தொந்தரவான பிரசன்னம், நீதித்துறை சுதந்திரம் இல்லாமை மற்றும் பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்களில் குற்றவாளிகள் பரவலாக ஒப்புக்கொள்ளப்பட்ட தண்டனையிலிருந்து விலக்கு பெறுவதை வலியுறுத்தினார். ருேர்சுஊ மற்றும் உறுப்பு நாடுகளை ஒரு சுயாதீன விசாரணை நிறுவனத்தை நிறுவவும், ஒரு சிறப்பு அறிக்கையாளரை நியமிக்கவும், மற்றும் இலங்கை பொறுப்புக்கூறல் திட்டத்தின் காலம், ஆணை மற்றும் அதிகாரங்களை நீட்டிக்கவும் அவர் அழைப்பு விடுத்தார். இந்த நடவடிக்கைகள், சம்பவங்களை முழுமையாக விசாரிக்கவும், வழக்குத் தொடரக்கூடிய ஆதாரங்களைத் தொகுக்கவும் அவசியமாகக் கருதப்படுகிறது.

உருப்படி 8: வியன்னா பிரகடனம் மற்றும் செயல்திட்டத்தின் பின்தொடர்தல் மற்றும் செயல்படுத்துதல் பற்றிய பொதுவான விவாதம்
மார்ச் 27, 2024
வழங்குபவர்:
கல்பனா நாகேந்திரா, தமிழர் உரிமைகள் குழுவின் பொதுச் செயலாளர்

அவர் சபையில் தனது உரையின் போது, திருமதி நாகேந்திரா, ஈழத்தில் தமிழ் சமூகத்திற்கு எதிராக இலங்கை அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட வியன்னா பிரகடனத்தின் தொடர்ச்சியான மீறல்களை அடிக்கோடிட்டுக் காட்டினார். சட்டத்திற்குப் புறம்பான கொலைகள் மற்றும் வலுக்கட்டாயமாக காணாமல் போதல் போன்ற பாரதூரமான குற்றங்களில் அரசாங்கத்தின் நேரடி உடந்தையை சுட்டிக்காட்டும் கணிசமான ஆதாரங்களை அவர் எடுத்துக்காட்டினார். பரவலான கண்டனங்கள் மற்றும் பொறுப்புக்கூறல் கோரிக்கைகள் இருந்தபோதிலும், இந்த மோசமான செயல்களில் இலங்கை தொடர்கிறது. திருமதி. நாகேந்திரா உறுப்பு நாடுகள் உறுதியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று அங்கு வலியுறுத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது.







# ஈழத்துத் திருக்கோயில்கள்

வரலாறும் மரபும்
**1094**



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



## கங்குவேலி சிவன்கோவில்
## மூதூர், திருகோணமலை

*“நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்*
*நரகத்தில் இடர்படோம் நடலை யில்லோம்*
*ஏமாப்போம் பிணியறியோம் பணிவோமல்லோம்*
*இன்பமே எந்நாளும் துன்பமில்லை*
*தாமாகுங் குடியல்லாத் தன்மையான*
*சங்கவெண் குழையோர் காதில்*
*கோமாற்கே நாமென்றும் மீளா ஆளாய்க்*
*கோய்மலர்ச் சேவடி இணையே குறுகினோமே”*

இந்தியாவிலே பௌத்தமதம் தோற்றம் பெற்ற காலத்திற்கு முன்னரே, ஈழத்தில் சைவம் வேரூன்றி நின்றமைக்குச் சான்றுகள் பல காணப்படுகின்றன. அகத்தியர் நிறுவி வழிபட்ட சிவாலயம் அழிந்துவிட்டபோதிலும், இச்சிவாலயம் அமைந்திருந்த இடத்தில் அண்மைக் காலத்தில் கண்டெடுக்கப்பட்ட லிங்கம், கோமுகை, பலிபீடம், முக்கூட்டுக்கல், வாயிற்கற்கள், தூண்கள், என்பற்றை நோக்கும்போது மாபெரும் சிவாலயம் ஒன்று இப்பிரதேசத்தில் இருந்து அழிந்ததை அறிய முடிகின்றது.

ஒரு ஆலயத்தின் தோற்றம், வளர்ச்சி, வரலாறு, மரபுகள் இவற்றோடு அந்த ஆலயம் அமைந்திருந்த பிரதேசம், அதன் வளமை, அப்பிரதேசத்திலே வாழ்ந்த மக்களின் வாழ்க்கை முறை போன்ற பல்வேறு செய்திகளைத் தெரிவிப்பதாகத் தலபுராணங்கள் காணப்படுகின்றன. புராணம் என்பது தொன்மை, பழமை என்ற கருத்தைக் கொண்டது. இத்தகைய நூல்கள் தலபுராணம் என்ற பெயரைப் பெற்றபோதிலும், இந்நூல்கள் அவை இயற்றப்பட்டகால சமுதாயநிலை, நிலப்பரப்பு, மக்களின் வாழ்க்கை முறை ஆகியவற்றைப் பிற்காலத்தவர்கள் அறிவதற்குரிய ஒரு சான்றாகவும் அமைந்துவிடுகின்றன.

திருகோணமலை மாவட்டத்திலே இரண்டு கோவில்களுக்கு மட்டுமே தலபுராணம் உண்டு. ஒன்று திருகோணேஸ்வரம். மற்றது திருக்கரைசையம்பதி. காலப்போக்கில் அழிந்துபோன திருக்கரசை மாநகரை ஆய்வாளர்கள் நடுநிலை நின்று ஆய்வுசெய்தால் கிழக்கில் தழிழர்கள் பாரம்பரியமாக வாழ்ந்தமைக்கான சான்றும், அதனை வலுப்படுத்தும் பண்பாட்டுக் கருவூலங்கள்பற்றிய புதிக தகவல்ககளையும் பெற்றுக்கொள்ளமுடியும்.

கங்குவேலியிலிருந்த பண்டைய சிவன்கோவில் கல்வெட்டு ஒன்று தற்போதுள்ள சிவன்கோவிலில் வைக்கப்பட்டுள்ளது. கி.பி 1786 இல் திருகோணமலையில் பிரதம அதிகாரியாக இருந்த ஜாக்குவஸ் பாப்ரிஸ் வான் சான்டின் என்பவரது டயறிக் குறிப்பில் இருந்து, கங்குவேலிக் கல்வெட்டுப்பற்றிய விபரம் தெரிய வருகின்றது. வான்சான்டின் அவர்களின் குறிப்பின் விபரம் கீழ்க்கண்டவாறு அமைகின்றது.

இங்குள்ள பழைய கோவிலுக்கு முன் (அகத்தியர் நிறுவிய ஆலயம்) ஒரு துண்டு கல்வெட்டு காணப்படுகின்றது. இது மணற் கல்லால் ஆனது. இதில் ஒரு பக்கம் பழைய திரிசூலக்குறி ஒன்றும், இரண்டு பக்கங்களில் எழுத்துக்களும் பொறிக்கப்பட்டுள்ளன.

வான் சான்டின் கூற்றுப்படி இக்கல்வெட்டின் வாசகம் வருமாறு:

மேற்குப்பக்கம் (முதற் பக்கம்): மலையில் வன்னியனாரும் எளு நிலை அடப்பாகளும் கூடித் யீ பிரானர் கொண நாதனுக்கு கங்குவெலியில் வெளியம் பல நடுபடும் ஸ்ரீ ஆகவிட்டொம் இதுக்கு யாதொருவனாகிலும் ஆகுதம் நினைத்தவர்கள் கெங்கை.

தெற்குப் பக்கம் (மறுபக்கம்): கரையில் காரம் பசுவைக் கொண்ட பாவம்கொளக் கடவராகவும் யிப்படிக்கு இரண்டு முதன்மையும் தானம் வரிப்பத்தும்.

இக்கல்வெட்டுப்பற்றி வான்சான்டின் மேலும் கூறுவதாவது:

திருகோணமலையில் வன்னியர்களும், கங்குவேலியின் கிராமத் தலைவர்களும் (அடப்பனார்) இந்த வயலையும், அதன் பிரயோசனங்களையும் கோணைநாதருக்கு அர்ப்பணித்துள்ளனர். இதை மறுதலிப்பவர்கள் அல்லது இப்பிரயோசனங்களைத் தமதாக்கிக் கொள்பவர்கள் மகா பாதகம் செய்தவராவர். இப்பிரகடனம் 2 புரோகிதர், சாதி தானத்தார், வரிப்பத்தர் ஆகியோர் முன்னிலையில் செய்யப்பட்டது.

தானத்தார்: அன்றாடம் கோயில் வரவு செலவுகளைக் கவனிப்பவர்.

வரிப்பத்தர்: இவர்கள் பட்டாடை கொய்தல், கூட்டல், பத்திர புஷ்பமெடுத்தல், மெழுகுதல் ஆகிய பணிகளைச் செய்பவர்கள்.

ஆதியிலிருந்து இன்றுவரை திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த கிராமங்களிலிருந்து திருவிழாக்காலங்களில், கோணேசர் ஆலயத்திற்கு வேண்டிய பொருட்கள் செல்வது வழமையாகக் காணப்படுகின்றது. இக்கிராமங்களின் அன்றைய மன்னர்கள் கோணேசர் ஆலயமும், ஏனைய சைவ ஆலயங்களும் நிறைவுற நடைபெற எழுதிவைத்த தர்மச் சொத்துக்கள் யாவும் தற்காலத்தில் வேற்றினத்தவர் வாழும் பூமியாக மாற்றம்பெற்றுள்ளது. இக்கல்வெட்டிலே கூறப்பட்டுள்ள வயல்பிரதேசங்கள் தற்காலத்தில் தமிழரல்லாத பிற இனத்தவர்கள் வாழும் பூமியாக மாறியுள்ளது.

கங்குவேலி சிவன்கோவிலின் ஒருபுறம் வயல்வெளிகளும், மறுபுறம் குடியிருப்புக்களும் காணப்படுகின்றன. இப்பிரதேசங்களிலே பெருகி வாழ்ந்த தமிழ் மக்கள், அரசின் அபிவிருத்தி குடியேற்றத்திட்டம் என்ற புனரமைப்பினால் தற்காலத்தில் அருகியே வாழ்கின்றனர். இத் திட்டங்களினால் இப்பிரதேசத்தில் பண்டு தொட்டு வாழ்ந்து வந்த தமிழர்களின் செல்வாக்கு மற்றும் ஆலயங்கள், குடியிருப்புக்கள் அனைத்தும் நலிவுற்ற நிலைக்கு உள்ளாக்கபட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது. முடிவுறாத யுத்தத்தினால் திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த தமிழ்க்கிராமங்களிலிருந்து தமிழ் மக்கள் இடம்பெயந்துள்ளமையால், தமிழர்களின் நாகரிக, பண்பாட்டின் விழுமியங்களான ஆலயங்களும் அழிவுற்றும், சிதைக்கப்பட்டும் பூசை வழிபாடுகளின்றியும் காணப்படுகின்றன.

**தொடரும்...**





OM NAMO NARAYANA

**125 வருட பாரம்பரிய காண்டம் நாடி ஜோதிடம்**

**N. P. ராஜசேகர்**

**Now In: 16 TREELINE COURT MARKHAM**
**L3S 3T8 CANADA**
**001 416 904 6278**

அனைத்து நாடுகளில் இருந்தும் தொடர்பு கொள்ளலாம்

1வது காண்டம்: ஆண் வலது பெண் இடது கை பெருவிரல் ரேகை அல்லது ஜாதகத்தை கொண்டு ஜாதகம். பெயர் தாய், மனைவி, குழந்தைகள், சகோதர, சகோதரிகள் பொதுவான பலன் கூறுவது மற்றக் காண்டங்களை எடுக்க இந்தக் காண்டத்தை முதலில் அவசியம் எடுக்க வேண்டும்.

2வது காண்டம்: பணம், கண், குடும்பம், கல்வி, வாக்கு அதிர்ஷ்டகற்கள் முதலியவைகளைக் கூறுவது.

3வது காண்டம்: சகோதர, சகோதரிகளின் எண்ணிக்கை அவர்களால் ஏற்படும் நன்மை தீமைகளைக் கூறுவது.

4வது காண்டம்: தாயார், மனை, நிலங்கள், வாகனம் வாழ்க்கையில் அடையும் சுகங்கள் மற்றும் மகிழ்ச்சிகளைக் கூறுவது.

5வது காண்டம்: குழந்தைகளின் பிறப்பு. புத்திரர்களால் ஏற்படும் நன்மைகள் குழந்தைகள் இல்லாததற்குக் காரணமும் கூறுவது.

6வது காண்டம்: வாழ்க்கைகளில் ஏற்படும் விரோதி, வியாதி, கடன், வழக்கு, எதிரிகளால் ஏற்படும் தொல்லைகள் முதலியவைகளைக் கூறுவது.

7வது காண்டம்: திருமண வாழ்க்கை, திருமணக்காலம், திருமணத்தைப் பற்றிய சில அடையாளக் குறிப்புகள் திருமணக் காலத்தைக் கடந்த காரணம், பொதுவான பலன்களும், திருமணம் ஆகியிருந்தால் கணவன் (அ) மனைவியைப் பற்றி கூறுவது.

8வது காண்டம்: ஆயுள்கால நிர்ணயம், நடுநடுவே ஏற்படும் கண்டம் விபத்து முதலியவைகளைக் கூறுவது.

9வது காண்டம்: தகப்பனார், செல்வம், யோகம், ஆலயதரிசனம், தர்மம், குருவினிடத்து உபதேசம் பெறுதல் முதலியவைகளைக் கூறுவது.

10வது காண்டம்: தொழில், வியாபாரம், உத்தியோகம், எந்த வியாபாரம் அல்லது தொழில் செய்தால் அதிக நன்மை கிடைக்கும் என்பதைக் கூறுவது.

11வது காண்டம்: இலாபம் எந்தெந்த வகையில் கிடைக்கும் என்பதையும், 2வது திருமணம் அதனால் அடையும் நன்மைகளையும் கூறுவது.

12வது காண்டம்: செலவு எவ்வகையில் ஏற்படும் என்பதையும், மோட்சம் அடுத்த பிறவியில் பிறக்கும் இடம், வாழும் தன்மை வெளிநாட்டுப்பயணம் முதலியவைகளையும் கூறுவது.

**பரிகார காண்டங்கள்**

13வது சாந்தி காண்டம்: முற்பிறவியில் பிறந்த இடம், செய்த நன்மை, தீமை அதனால் தற்போது அனுபவிக்கும் கஷ்டங்கள் அதை நீக்குவதற்கு உரிய பரிகாரமும் முதலியவைகளைக் கூறுவது.

14வது கீட்சை காண்டம்: மந்திரம், எந்த மந்திரத் தாயத்து செய்து அணிந்து கொண்டால் தன்டைய காரியமும் குடும்ப காரியமும் வெற்றியடையும் என்பதைக் கூறுவது.

15வது ஔஷத காண்டம் : வியாதிகளுக்கு எந்த மருந்து அல்லது மூலிகை சாப்பிடலாம் என்பதையும், சாப்பிடும் வகைகளையும் பத்திரங்களையும் விபரமாகக் கூறுவது.

இவையன்னியில் ஞான காண்டமும், திசாபுத்தி காண்டமும், பிரச்சினை காண்டமும், மகாசிவ வாக்கியமும் உள்ளது
குறிப்பு : ஜாதகம் அல்லது பிறந்த குறிப்பு உள்ளவர்கள் அதை கொண்டு வருவது நலம்.

# இவ்வார ராசிபலன்

**05-04-2024 வெள்ளி தொடக்கம் 11-04-2024 வியாழன் வரையும்**




**மேஷம்:** உண்மைகள் வெளிப்படும் வாரம். பதவி உயர்வு கிட்டும். மனக்கசப்பு நீங்கும். அரசு வழியில் ஆதாயம் கிட்டும். கணினிதுறையில் ஊதிய உயர்வு உண்டு. சகோதரியினால் நன்மை உண்டு. உடல்நலம் மேம்படும். புதிய முதலீடு தவிர்க்கவும். கணவன், மனைவி உறவு மேம்படும். தொழில் அபிவிருத்தி அடையும். புதிய வாய்ப்புக்கள் கிடைக்கும். பிள்ளைகளால் மனக்கசப்பு வந்து நீங்கும். வீடு, மனை ஆசைகள் பூர்த்தியாகும். சிரமப்பட்ட காரியங்கள் நிறைவேறும். சிக்கனத்தை கையாள வேண்டும். திறமைகள் வெளிப்படும். மருத்துவச் செலவுகள் குறையும். அடுத்தவர் தலையீட்டை தவிர்க்கவும். மனநிம்மதி அதிகரிக்கும். கடன் வாங்க நேரிடும். பங்குச்சந்தையில் கவனம் தேவை. குடும்ப அன்யோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகள் நலனில் அக்கறை தேவை. வருமானம் திருப்தி தரும். வாகன மாற்றம் உண்டு. மாற்று யோசனை பயன் தரும். மாணவர்களுக்கு அக்கறை கூடும். விளையாட்டில் கவனம் தேவை. வரவுகள் அதிகரிக்கும். ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. பழையக்கடன் வசூலாகும். உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்கும். திடீர் மாற்றங்கள் நிகழும். கலைஞர்களுக்கு கௌரவம் கூடும். பயணங்கள் பலன் தரும். விரயங்கள் கூடும். எதிர்பார்த்த உதவியால் ஏற்றம் கிடைக்கும். புதிய ஒப்பந்தம் கையெழுத்தாகும். சொத்துப் பிரச்சனைத் தீர்வுக்கு வரும். பெண்களுக்கு பெருமை சேரும். பொதுவாழ்வில் புகழ் கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: விக்னேஷ்வரர், அதிர்ஷ்ட எண்: *3,2,1,9*

அதிர்ஷ்ட நிறம்: கிளிப்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,O




**ரிஷபம்:** வரவும், உறவும் வலிமையாகும் வாரம். புத்திரர் வகையில் சந்தோஷம் கூடும். பூமியால் நன்மை உண்டு. குடும்பத்தில் குழப்பங்கள் நீங்கும். நட்டமில்லாமல் திட்டங்கள் நிறைவேறும். கலைந்த குடும்பம் ஒன்று சேரும். கணவன், மனைவி உறவில் ஒற்றுமை அதிகரிக்கும். உத்தியோகப் பெண்களுக்கு பதவி உயர்வு கிட்டும். பழைய சம்பள பாக்கிகளும் வந்து சேரும். பொருளாதாரம் உயரும். விலை உயர்ந்த பொருட்களில் முதலீடு உண்டாகும். தொலைதூரத் தொடபு லாபம் தரும். பாக்கெட்டில் காசும் கரையாது. பந்தாவும் குறையாது. தொட்டது துலங்கும். நினைத்தது நடக்கும். இனிக்கும் வாரம் தான். செய்த்தொழில் வியாபாரம் சிறக்கும். அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் கூடும். அடுத்தவர் தலையீடு அமைதியை கொடுக்கும். மனநிலையில் மாற்றம் ஏற்படும். நண்பர்களின் பேச்சு ஆறுதல் தரும். வியாபாரம் திருப்தி தரும். பொருளாதாரம் உயரும். வாகன நன்மை உண்டு. பயணம் அனுகூலம் தரும். விவேகம் வெற்றி தரும். குடும்ப ஒற்றுமை மேம்படும். கடன் தொல்லை அகலும். தெளிவான முடிவுகள் உதயமாகும். எதிர்காலத் தேவைகள் பூர்த்தியாகும். பிள்ளைகளின் அன்பு அதிகரிக்கும். தெய்வ பணியில் ஈடுபாடு அதிகரிக்கும். உத்தியோகத்தில் நல்ல பெயர் கிட்டும். தொழில் வளர்ச்சி கூடும். வாய்ப்புக்கள் சாதகமாக அமையும். வார்த்தைகளில் நிதானம் தேவை. ஆண்களின் அதிகாரம் உயரும். பணவரவு அதிகரிக்கும். உடல்நலம் சிறக்கும். தெம்பும், தைரியமும் கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஐயப்பன், அதிர்ஷ்ட எண்: *7,5,4,3*

அதிர்ஷ்ட நிறம்: வெண்பட்டு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: L,N




**மிதுனம்:** முற்போக்கு சிந்தனைகள் உருவாகும் வாரம். பேச்சில் நிதானம் தேவை. நியாயம் ஜெயிக்க போராடுவீர்கள். புதிய நட்பில் கவனம் தேவை. செய்த்தொழிலில் லாபம் தரும். பணத்தேவைகள் பூர்த்தியாகும். மன ஆரோக்கியம் சிறக்கும். உடல் ஆரோக்கியம் சீராகும். மேலதிகாரியின் பாராட்டு கிடைக்கும். பிள்ளைகளின் தொல்லைகள் அகலும். புதிய கடன் வாங்க நேரிடும். மாணவர்களுக்கு மகிழ்ச்சி கூடும். எதிர்பார்த்த பதவி உயர்வு கிட்டும். இடமாற்றத்தால் நன்மை உண்டு. வார்த்தைகளில் நிதானம் தேவை. வேண்டாத உறவுகளை தவிர்க்கவும். விவசாயிகள் கோரிக்கை நிறைவேறும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். உறவினர் வழியில் செலவுகள் உண்டு. அரசியல் ஆதாயம் தரும். நீண்ட நாள் பிரச்சனை முடிவுக்கு வரும். கலைஞர்களுக்கு வாய்ப்பு வரும். கணவன், மனைவி வாக்குவாதம் ஏற்படும். பழைய நண்பர்களை சந்திப்பீர்கள். புதிய தொழில் வாய்ப்புகள் பெருகும். நவகிரஹ அனுகிரஹம் கூடும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். மாற்று இனத்தவரால் நன்மை உண்டு. அயல்நாட்டுப் பயணம் உண்டு. நண்பர்களிடம் எச்சரிக்கை தேவை. உறவுகளால் செலவுகள் அதிகரிக்கும். உத்தியோகத்தில் உயர்வு கிடைக்கும். மருத்துவச் செலவு குறையும். நட்பு வட்டம் விரிவடையும். விரக்திகள் மறையும். சிக்கனம் தேவை. காதலர் ஒற்றுமை அதிகரிக்கும். புத்தி சாதுர்யம் பெருகும். மனதில் மகிழ்ச்சி கூடும். எதிரிகளால் பலன் கிடைக்கும். நம்பிக்கை துளிர்விடும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். அலைபேசித் தகவல் ஆதாயம் தரும். புதிய முயற்சிகள் பலன் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: நாகாத்தம்மன், அதிர்ஷ்ட எண்: *3,2,9,8*

அதிர்ஷ்ட நிறம்: இளஞ்சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: R,P




**கடகம்:** நல்லோர்களின் சந்திப்பு கிட்டும் வாரம். திருப்திகள் பெருகும். போதாத காலம் விலகும். தோதான எண்ணம் உருவாகும். கடன் தொல்லை நீங்கும். மன சந்தோசம் அதிகரிக்கும். நண்பர்களால் அலைச்சல் உண்டு. எண்ணிய காரியம் கைகூடும். புண்ணிய ஸ்தலம் செல்வீர்கள். எலக்ட்ரிக்கல் தொழில் லாபம் தரும். விவேகம் வெளிப்படும். வீண் செலவு ஏற்படும். குடும்ப அன்யோன்யம் அதிகமாகும். பிரியமான காலம். வெளிநாட்டு நபரால் வெகுமதி கூடும். வெளியூர் பயணம் நன்மை தரும். புதுத்தொழிலை துவங்கும் வாய்ப்பு உள்ளது. இனிப்பான செய்திகள் வரும். செல்வாக்கு உயரும். இசை ஆர்வம் கூடும். கலைத்தொழில் லாபம் தரும். முன்னேற்றம் அதிகரிக்கும். வெற்றிச் செய்தி வரும். தேக ஆரோக்கியம் மிளிரும். உடன்பிறப்புக்களால் நன்மை உண்டு. அச்சுத்தொழில் ஆதாயம் உண்டு. உடல் உஷ்ணம் வந்து போகும். பொதுப் பிரச்சனைகள் அகலும். உத்தியோகத்தில் ஒற்றுமை விலகும். வழக்குகள் சாதகமாகும். வாய்ப்புக்கள் வந்து சேரும். நிர்வாகச் செலவுகள் கூடும். பொறுமையை கையாள வேண்டும். பழையக்கடன் தீரும். மனோபயம் அகலும். குடும்பத்தில் அமைதி பெருகும். பொருளாதார மேன்மை உண்டு. தொழில் அபிவிருத்தி உண்டாகும். தனவரவில் தடங்கல் உண்டு. புதிய வாய்ப்புக்களை எதிர்பார்க்கலாம். கருத்து வேறுபாடுகள் அகலும். மனைவி உறவு சீராகும். இடமாற்றம் உண்டு. கல்வியில் அக்கறை தேவை. போட்டிகள் அதிகமாகும். பிள்ளைகளால் சந்தோஷம் கூடும். அச்சுத்தொழில் ஆதாயம் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: குலதெய்வம், அதிர்ஷ்ட எண்: *2,5,9,4*

அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: P,K



ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது!
என்ற உறுதியோடு உங்கள் 'ராஜயோகம்'

"ஜோதிட மகரிஷி"
Dr. K. RAM.Ph.D (USA)

தொடர்புக்கு: 0091-9840160068
9940431377




**சிம்மம்:** சுபகாரியங்கள் நடக்கும் வாரம். வெகுமானம் கூடும். பழிச்சொல் நீங்கும். மனவேதனை அதிகரிக்கும். உத்தியோக சோதனை ஏற்படும். இழுபறி நிலை நீங்கும். உறவினர்களால் பாதகம் உண்டு. உஷ்ண நோய் ஏற்படும். புதிய வாய்ப்புக்கள் தேடி வரும். கடன் வாங்க நேரிடும். அரசு வகை ஆதாயம் கிட்டும். வெற்றிகள் குவியும். பெருமைகள் தேடி வரும். தாயின் பிரார்த்தனையால் தகுதிகள் உயரும். சுபச்செய்தி வரும். காதல் கண்ணியம் கூடும். கணவன், மனைவி கௌரவம் அதிகரிக்கும். பெரியோர்கள் விரோதம் ஏற்படும். நெருக்கடிகள் நீங்கும். கல்வியில் மேன்மை கிட்டும். திடீர் வரவு உண்டு. அரசியலில் புகழ் கூடும். அடிப்படைத் தேவைகள் நிறைவேறும். ஆரோக்யம் கூடும். ஆபரணம் வாங்குவீர்கள். ஆடம்பர எண்ணம் அதிகரிக்கும். பாக்யவான்களை சந்திப்பீர்கள். வியாபாரம் உயரும். வில்லங்கம் விலகும். விவசாய விளைச்சல் அதிகமாகும். அரசு உதவிகள் கிட்டும். கூட்டுத்தொழில் பிரிவு ஏற்படும். பொன், பொருள் சேர்க்கையுண்டு. சூழ்நிலைகள் சாதகமாகும். அனுகூலமற்ற திடீர் தனவரவு ஏற்படும். ஜீவன முன்னேற்றம் ஏற்படும். தீய எண்ணங்கள் விலகும். புதிய வாகனம் சேரும். புத்திரர் வழியில் சந்தோஷம் கூடும். விவசாயம் கைக்கொடுக்கும். கவலைகள் அடியோடு விலகும். பணியில் உயர்வு கிட்டும். பெற்றோர் நலனில் அக்கறை தேவை. குடும்ப அமைதி கூடும். சொந்தத்தொழில் அமையும். தொழில் மாற்றம் ஏற்படும். கடன் உதவி கிட்டும். தொலைதூரப் பயணம் உண்டு. அதிர்ஷ்ட வாய்ப்பு கூடி வரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: அரசமர பிள்ளையார், அதிர்ஷ்ட எண்: *1,9,7,5*

அதிர்ஷ்ட நிறம்: காவிநிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: N,Z




**கன்னி:** வீண் வம்புகள் ஒழியும் வாரம். ஆன்றோர்கள் வாழ்த்து கிட்டும். கொடுக்கல், வாங்கலால் நன்மை சேரும். அடிப்படைத் தேவைகள் பூர்த்தியாகும். கொள்கையில் பிடிப்பு சேரும். அதிகாரியின் ஆதரவு பெருகும். ஆரோக்யம் அபிவிருத்தி அடையும். அரசு வகையில் ஆதாயம் கிட்டும். நிர்வாக பொறுப்புக் கூடும். விவசாய விளைச்சலில் பலன் உண்டு. சொந்த தொழில் அமையும். உளுந்து தானம் சிறந்த பலன் சேர்க்கும். திருப்புமுனை ஏற்படும். மாற்று எண்ணம் உதயமாகும். தோற்றப் பொலிவு கூடும். வேற்று மதத்தினரால் உதவி சேரும். பொதுப்பணியில் ஆர்வம் கூடும். சுபகாரியம் கூடி வரும். அரசியல் சந்தர்ப்பம் அமையும். பழைய நட்பு தொல்லை தரும். இல்லத்தில் நல்லவை நடக்கும். இனிய வாய்ப்பு கூடி வரும். இடமாற்றம் நன்மை தரும். புதிய உத்தியோகம் அமையும். பழையகடன் தீரும். அணிகலன்கள் சேரும். புதுத்தொழில் அமையும். வாய்ப்புக்கள் தேடி வரும். வாகன மாற்றம் வரும். வீடு, மனை யோகம் உண்டு. வியாபார மேன்மை உண்டு. வில்லங்கம் தீரும். வீண் செலவு கூடும். பண நெருக்கடிகள் தீரும். பணி ஆர்வம் கூடும். பாதகமான சூழ்நிலை அமையும். விவாதம் தவிர்ப்பது நல்லது. பெற்றோர் நலனில் கவனம் தேவை. சகோதர விசுவாசம் கூடும். சூழ்நிலைகளால் மாறுதல் உண்டு. பயணம் லாபம் தரும். திறமைகள் அதிகமாகும். தடைகள் விலகி தொழில் வாய்ப்பு கூடி வரும். நற்செய்தி நாடி வரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கபாலீஸ்வரர், அதிர்ஷ்ட எண்: *4,6,8,9*

அதிர்ஷ்ட நிறம்: சிகப்பு (செந்நிறம்), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,V




**துலாம்:** திட்டம் வெற்றி பெறும் வாரம். புத்தாடை சேர்க்கை உண்டு. புதிய தொழில் வாய்ப்பு உண்டு. நன்மைகள் அதிகம் உண்டு. நல்லோர்கள் வாழ்த்து உண்டு. நண்பர்கள் சேர்க்கையுண்டு. நிலையான சந்தோஷம் உண்டு. நிலபுலன் சேர்க்கை உண்டு. கடன் தீர்வு உண்டு. காதலில் வெற்றி உண்டு. கடின உழைப்பு உண்டு. கணவன், மனைவி ஒற்றுமை உண்டு. கனவு பலிதம் உண்டு. கவனமுடன் செயல்படவேண்டும். புதிய சொத்துக்கள் சேரும். காரியம் கைக்கூடும். கலைஞர்களுக்கு வாய்ப்பு பெருகும். விளைச்சல் அதிகமாகும். விவசாயம் மேன்மை தரும். வெளியூர் பயணம் ஏற்படும். பூர்வீக சொத்து சேரும். அந்தஸ்து கூடும். அடுத்த நபரால் தொல்லை உண்டு. எடுத்த காரியத்தில் வெற்றி பெறுவீர். எதிலும் நிதானம் தேவை. பொருளாதாரம் உயரும். மற்றோரின் வாழ்த்துக் கிட்டும். எதிர்பார்த்த ஏற்றம் கிட்டும். கேட்ட இடத்தில் கடன் கிட்டும். காரிய அனுகூலம் கிட்டும். கலைத்தொழிலில் உயர்வு பெறும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். புதுமுயற்சிகள் பலன் தரும். மன சந்தோஷம் கூடும். அனுகூலமான போக்கு நிலவி வரும். புத்தாடை ஆபரணம் சேரும். கடனால் பிரச்சனை தீரும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். உழைப்பு உயர்வு தரும். எண்ணங்கள் மாற்றம் தரும். புதிய அனுபவம் பெறுவீர்கள். இன்பமான செய்தி தேடி வரும். புத்துணர்வோடு செயல்படுவீர்கள். திண்டாட்டங்கள் குறையும். திறமைகள் அதிகமாகும். பெருமைகள் கூடி வரும். நிதி நிலைமை சீராகும். அரசு பணியில் மாற்றம் வரும். பெண்களின் தேவைகள் பூர்த்தியாகும். பிள்ளைகள் கல்வி மேம்படும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பிள்ளையார், அதிர்ஷ்ட எண்: *2,1,9,7*

அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: L,X




**விருச்சிகம்:** பூர்வீகச் சொத்து சேரும் வாரம். பெண்களுக்கு யோகம் கூடும். வழக்குகள் சாதகமாகும். கல்விக்கடன் உண்டாகும். பயணம் நன்மைத்தரும். அளவான பேச்சு நன்மைத்தரும். கடன் உபத்திரவம் குறையும். உறவினர் பாராட்டு கிட்டும். உடல்நலனில் அக்கறை தேவை. வெளிநாட்டு வாய்ப்பு தேடி வரும். அடுத்தவர் நட்பு ஆக்கம் தரும். பெருமைகள் கூடும். கற்பனை ஆற்றல் பெருகும். தெய்வப்பணியில் ஈடுபடுவீர்கள். கோதுமை தானம் குலவிருத்தி தரும். உதவிகள் கிடைக்கும். உடல்நலத்தில் அக்கறை தேவை. மாணவர்களுக்கு மதிப்பெண் உயரும். எண்ணிய காரியம் கூடும். எதிர்பாரா லாபம் தரும். நடவடிக்கையில் மாற்றம் வரும். நண்பரால் சங்கடம் நேரிடும். பதவியில் உயர்வு வரும். இடமாற்றம் நன்மை தரும். வெற்றிநிலைத் தொடரும். குடும்ப கௌரவம் கூடும். நன்மதிப்பு உயரும். பாராட்டு கூடும். பரபரப்பான சூழ்நிலை மாறும். புதிய முயற்சி வெற்றித் தரும். பெரியத் திருப்பம் ஏற்படும். கடன் கொடுப்பதைத் தவிர்க்கவும். சகோதரியால் நன்மை உண்டு. படிப்பில் கவனம் தேவை. போட்டிகள் வெற்றித்தரும். இறுகிய நிலை மாறும். பணிமாற்றம் நன்மைத்தரும். தனவரவு உற்சாகம் தரும். பணம் புரளும். பூமியால் லாபம் உண்டு. கூட்டுத்தொழில் நன்மை தரும். நிதி நிறுவனம் லாபம் தரும். தொழில் உற்பத்தி அதிகரிக்கும். வாகன யோகம் உண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: கால பைரவர், அதிர்ஷ்ட எண்: *6,9,1,2*

அதிர்ஷ்ட நிறம்: அரக்கு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,J

***(தொடர்ச்சி 21 பக்கம்)***

(15 பக்கம் தொடர்ச்சி)

# தமிழர்கள் மீதான இன அழிப்பு மற்றும் படுகொலை:

## ஆதாரங்களுடன் ஆவணப்படுத்தப்பட்ட கையேடு சுவிஸ்ஸில் வெளியீடு

*("கனடா உதயனு"க்கான சிறப்புக் கட்டுரை) - சுவிஸ்ஸிலிருந்து சிவா பரமேஸ்வரன்*

இந்த கையேடு சுவிஸ்ஸில் வெளியீடாவதற்கு அங்கு 40 ஆண்டுகளுக்கும்.

பல வகைகளில் இந்த கையேடு சிறப்பு வாய்ந்ததாக இருக்கிறது என்று கருதலாம். பன்னாட்டு அளவில் இலங்கை மீது தீர்மானங்களை கொண்டுவரும் நாடுகள், அமைப்புகளுக்கு மேலும் புரிதலை ஏற்படுத்தும் வாய்ப்பும் இதன் மூலம் கிடைக்கலாம். அது மாத்திரமின்றி போர்க் குற்றங்கள், இன அழிப்புகள் குறித்து ஆய்வு செய்பவர்களுக்கும் இது பேருதவியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

இந்த கையேடு வெளியீட்டு விழாவில் பங்கேற்க தமிழர்களின் உரிமைகளுக்காக தொடர்ந்து குரல் கொடுத்துவரும் சிங்கள ஊடகவியலாளரும் ஜே டி எஸ் ஊடகத்தை நிர்வகித்து நடத்துபவருமான பாஷன அபேவர்த்தன மற்றும் பிரித்தானியாவை தலைமையகமாகக் கொண்டு இயங்கு ஐ பி சி ஊடகத்தின் நிறைவேற்று பணிப்பாளர் நிராஜ் டேவிட் ஆகியோருடன் இந்த எழுத்தாளரும் சிறப்பு விருந்தினராக பங்கேற்றார்.

அதேவேளை இக்கூட்டத்தில் பங்கேற்பார்கள் என்று அறிவிக்கப்பட்டிருந்த செயற்பாட்டாளர் விராஜ் மெண்டிஸ் உடல்நலக் குறைப்பாடு காரணமாக வர இயலவில்லை. அதே போன்று மக்கள் தீர்பாயத்தை முன்னெடுத்தவரும், அயர்லாந்திலுள்ள டப்ளின் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகவும் இருக்கும் ஜூட் லால் பெர்ணாண்டோவும் கலந்துகொள்ளவிருந்தாலும், அவரால் வர இயலவில்லை. எனினும், தனது கருத்துக்களை ஒரு காணொளிப் பதிவாக அவர் அனுப்பியிருந்தார்.

நூலை தொகுப்பாளர் வெளியிட அதைப் பெற்றுக்கொண்ட பெர்ண் ஞானலிங்கேஸ்வரர் ஆலையத்தின் பிரதமகுரு தர்மலிங்கம் சதீஸ், இந்த ஆவணப்படுத்தலில் முக்கியத்துவத்தை எடுத்துரைதார். மேலும் அந்த ஆலயத்தில், "உலகளவில் முதல் முறையாக தமிழர்கள் மீதான இனப்படுகொலை குறித்த ஆவணக்காப்பகம்" அமைக்கப்பட்டுள்ளதை தெரிவித்தார். அந்த பணிகள் நிறைவடையும் நிலையில் உள்ளதாகவும், அது முடிவடையும் போது, இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக நடத்தப்பட்ட அனைத்து வன்செயல்கள், மனித உரிமை மீறல்கள், படுகொலைகள் போன்றவை, அதை ஏற்படுத்தும் தமிழ் களறி அமைப்பால் ஆவணப்படுத்தப்பட்டு பாதுகாப்பாக இருக்கும் என்பதை வெளிப்படுத்தினார்.

இலங்கையின் போர் சரித்திரம், தமிழர்கள் மீது கட்டவிழித்துவிடப்பட்ட வன்செயல்கள், திட்டமிட்ட இன அழிப்பு மற்றும் படுகொலைகள் ஆகியவை குறித்து அறிந்துகொள்ள விரும்புவர்களுக்கு இந்த கையேடு தவிர்க்க முடியாத ஒன்றாக இருக்கும்.

இந்த கையேட்டின் வெளியீட்டு நிகழ்வில், இனப்படுகொலையை காட்சி ரீதியாக ஆவணப்படுத்தி பெரும் பரபரப்பை ஏற்படுத்திய "நோ ஃபயர் சோன்" என்ற ஆவணப்படத்தின் தமிழ் வடிவம் முதல் முறையாக காட்சிப்படுத்தப்பட்டது.

## அந்திப்பொழுது அழகே!

அந்தியில் ஆதவன் ஆழியில் அடங்குவதும்
அந்நேரம் அழகாய் அடிவானம் சிவப்பதுவும்
செந்தமிழில் சிறார்கள் சீராகப் பாடிட
சின்னஞ் சிறுசுகள் சேர்ந்து விளையாட

கோபியர் கோவிலில் கோலவிளக் கேற்றலும்
கோவினம் கோதையைக் கூவி அழைக்க
ஆபிசாரம் ஆனந்தமாய் ஆலயத்தில் ஒலிக்க
ஆசாரம் கொண்ட அருமை அழகே!

பள்ளிச் சிறார்கள் பள்ளியால் வருவதும்
புள்ளினம் இரைமுடித்து புகலிடம் தேடுவதும்
வள்ளிப் பாட்டி வடைகள் சுடுவதும்
வெள்ளிக் கூட்டம் விண்ணில் தெரிவதும்

கோவிலில் திருவிழா குறைவற நடப்பதும்
கோவிந்தன் வீதியுலா கோலமாய்ச் செல்வதும்
ஆவி பறக்க அன்னதானம் நடப்பதும்
ஆசையாய் அடியார் அருந்துதல் அழகே!

வலைஞர் வள்ளத்தில் வலையுடன் போவதும்
விலைமிகு மீன்களுடன் விரைந்து வருவதும்
கலைஞர் காத்தான் கூத்தாடிக் களிப்பதும்
காலைவரை கண்விழித்து கண்குளிரக் காண்பதும்

வெண்முகிலும் வெண்மதியும் விண்ணில் விளையாட
வெண்புறாக்கள் விரைந்து வீடு திரும்பிட
வண்டி மாடுகள் வளைய வருவதும்
வண்ணமீன்கள் வாவியில் விரைவதும் அழகே!

அந்திநேரம் அந்தி மந்தாரை மலர்வதும்
அருந்ததி நட்சத்திரம் அரிதாய்த் தோன்றுவதும்
அந்திப் பொழுது அழகாய் அமைந்ததும்
அந்திம காலத்தில் அமைதியாய் இருப்பதும்

கண்ணான பேரர் கதையைக் கேட்பதும்
கடைசிக் காலத்தைக் கவலையின்றிக் கழிப்பதும்
எண்பது வயதிலும் இளமையாய் இருப்பதும்
எண்ணிப் பார்த்தால் எல்லாம் அழகே!

(குறிப்புஹ ஆபிசாரம் ..... மந்திரம்)

**ஆக்கம் ... பாவலர் மார்க்கம் சந்திரன்**
**(416) 844-7453**

# இவ்வார ராசிபலன்

(20 பக்கம் தொடர்ச்சி)




**தனுசு:** மனைவியால் மகிழ்ச்சி பொங்கும் வாரம். தோல்வி நிலை மாறும். தொழில் வர்த்தகம் விரிவடையும். வெற்றிக்கான வழி பிறக்கும். விவசாயம் நிலம் சேரும். வேண்டிய உதவி கிட்டும். வேண்டாத நட்பு விலகும். விரக்தி நிலை மாறும். முடிவுகள் சாதகமாகும். முயற்சிகள் பலிதமாகும். குதூகலப் பயணம் உண்டு. குடும்ப மேன்மை உண்டு. திருமணம் கூடி வரும். கேட்ட இடத்தில் பணம் கிடைக்கும். பணியில் பாராட்டு கிட்டும். ஆரோக்யம் பாதிக்கும். படிப்பில் ஆர்வம் கூடும். விரோதம் விலகும். வருமான வரி தொல்லை ஏற்படும். சங்கடம் அதிகமாகும். பணியில் கவனம் தேவை. குடும்ப சச்சரவு ஏற்படும். அரசியல் ஆதாயம் உண்டு. நிதானம் தேவை. வேலை பளு கூடும். பொருள் நஷ்டம் ஏற்படும். அலட்சியப் போக்கு தவிர்க்கவும். தொழில் திறமை பளிச்சிடும். ஒப்பற்ற பலன் சேரும். திருப்பங்கள் நிறைந்த காலம். பாதிப்புக்கள் ஒழியும். சோதனைகள் தீரும். ஆற்றல் வெளிப்படும். சுயத்தொழில் லாபம் தரும். தனவரவு சீர்படும். தகுதி மேம்படும். தாயார் உடல்நிலை சரியாகிவிடும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். சிக்கன நடவடிக்கை தேவை. தொழில் மந்த நிலை காணும். பணியில் செல்வாக்கு சேரும். தடைப்பட்ட நிலை மாறும். உத்தியோக மாற்றம் ஏற்படும். நலிந்த தொழில் மேன்மை தரும். பெரியோர்களின் ஆதரவு பெருகும். கட்டிடத்தொழில் லாபம் தரும். விவசாயத்தில் கவனம் தேவை. வீண் வம்பு தேடி வரும். வியாபாரம் திருப்தி தரும். பணவிரயம் உண்டு. புதிய சிந்தனை உருவாகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: தட்ஷிணாமூர்த்தி, அதிர்ஷ்ட எண்: 3,9,7,1
அதிர்ஷ்ட நிறம்: இந்திர நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,K




**மகரம்:** உதவியும், பதவியும் கிடைக்கும் வாரம். காலணிகள் காணாமல் போகும். புதிய பொருள் சேரும். காதல் எண்ணம் உருவாகும். உடல்சோர்வு ஏற்படும். கடன் பிரச்சனைகள் தீரும். கல்வியில் தடை ஏற்படும். விளையாட்டுத்துறையில் லாபம் தரும். மற்றவர் ஆலோசனை தவிர்க்கவும். மன அமைதி கூடும். மாற்றமான வாய்ப்புக்கள் கிட்டும். ஏற்றமான தருணம் அமையும். விவசாயிகள் பயன்பெறுவர். தெய்வீகப் பற்று அதிகரிக்கும். வீண்செலவு குறையும். திடீர் பயணம் தடைப்படும். பணியில் நிரந்தரம் உண்டாகும். புதிய நட்பினால் பலன் உண்டு. புத்திர வழியில் கவனம் ஏற்படும். அதிருப்தி அதிகரிக்கும். அமைதியாக இருப்பது நல்லது. போட்டிகள் நீங்கும். புதிய முதலீடு தவிர்க்கவும். பாசம் அதிகரிக்கும். பெருமைகள் சேரும். அதிர்ஷ்ட வாய்ப்பு உருவாகும். அன்பினால் காரியம் நிறைவேறும். படிப்பில் ஆர்வம் காட்டுவீர்கள். தொழில் முன்னேற்றம் அடைவீர். பக்குவமான பேச்சு அவசியம். பணப்பற்றாக்குறை தீரும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். காதல் எண்ணம் நிறைவேறும். சகோதரியால் சஞ்சலம் உண்டு. மனம் மக-ிழும் காலம். மனச்சுமை குறையும். பூர்வீகச் சொத்து வந்து சேரும். நிம்மதி உண்டாகும். மன சஞ்சலம் குறையும். கமிஷன் தொழிலில் கவனம் தேவை. கணவன், மனைவி இடைய நல்ல உறவு ஏற்படும். உடல் நோயிலிருந்து விடுதலையாவீர். உடன் பிறந்தவரால் அன்பு அதிகரிக்கும். உடல் பொலிவு உண்டு. பற்றாக்குறை நீங்கும். பணவரவு கூடும். வாகன அபிவிருத்தி உண்டு. வழக்குகள் தொல்லை உண்டு. புண்ணிய ஸ்தலம் பயணம் ஏற்படும். உடல் உபாதை நீங்கிவிடும். காரியம் இழுபறியாகும். முயற்சி பலன் தரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: வான்தேவதை, அதிர்ஷ்ட எண்: 4,9,1,5
அதிர்ஷ்ட நிறம்: வெண்மை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: U,H




**கும்பம்:** ஆடம்பர எண்ணம் அதிகரிக்கும் வாரம். முடிவுகள் சாதகமாகும். உறவினரால் நன்மை உண்டு. நண்பரால் செலவு உண்டு. கால்நடையால் பலன் உண்டு. காதலில் மோதல் உண்டு. உணவு பிரியம் அதிகரிக்கும். ஆதலால் கவனம் தேவை. பணவரவு தாமதமாகும். பாராட்டு பெருகும். உடல்சோர்வு நீங்கும். வீண் விரயம் அதிகமாகும். சுபவிரயம் ஏற்படும். சந்தர்ப்ப சாதகம் உண்டு. ஆரோக்கியம் அதிகரிக்கும். உத்தியோக உயர்வு தரும். வாழ்வில் வளம் உண்டு. வியாபார மேன்மை உண்டு. விரும்பிய பொருள் சேரும். சுபகாரியம் கைகூடும். ஆபரணச்சேர்க்கை உண்டு. சந்தோஷம் பெருகும். மாணவர் பாராட்டுப் பெறுவர். டிரான்ஸ்போர்ட் தொழில் லாபம் தரும். கற்பனை ஆற்றல் பெருகும். கடன் பிரச்சனை குறையும். காரிய தாமதம் ஏற்படும். அந்நியர் நட்பு ஆக்கம் தரும். மனக்கலக்கம் உருவாகும். மற்றவர்க்கு உதவி செய்வீர். தந்தை நலம் கூடும். அனுகூலமான போக்கு ஏற்படும். ஸ்டேஷனரி தொழில் திருப்பம் தரும். குடும்ப சந்தோஷம் கூடும். உண்மைகள் வெளிப்படும். கன்னிப் பெண்களிடம் கவனம் தேவை. பிரபல்ய ஆசை ஏற்படும். பெருமைகள் கூடும். வறுமைகள் விலகும். ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும். குழந்தைகள் நலனில் கவனம் தேவை. இயந்திர பணியில் நிதானம் தேவை. புதிய நட்பில் எச்சரிக்கை தேவை. வீண் வம்பு அதிகரிக்கும். சொல்லில் கவனம் தேவை. விபரீத போக்கு மாறும். சிக்கனத்தை கையாள வேண்டும். அதிர்ஷ்ட வாய்ப்பு கூடும். மின்சாரத்தில் கவனம் தேவை. வயிறு உபாதைகள் தோன்றி மறையும். வீடு, வாங்கும் யோகம் உண்டு. திட்டங்கள் நிறைவேறும். சட்டம் சாதகமாகும். சந்தோஷமான சூழ்நிலை உருவாகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ மூகாம்பிகை, அதிர்ஷ்ட எண்: 7,5,9,2
அதிர்ஷ்ட நிறம்: ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,S




**மீனம்:** நலமும், வளமும் நாடி வரும் வாரம். பெருமைகள் கூடும். பிரபலங்களை சந்திக்கும் வாய்ப்பு ஏற்படும். எதிர்பார்ப்புக்கள் உருவாகும். பல்வலி வந்து போகும். பணவரவு திருப்தி தரும். கூட்டுத்தொழில் லாபம் தரும். பெண்களின் கௌரவம் உயரும். பெற்றோர் நலனில் கவனம் தேவை. பிள்ளைகளால் சந்தோஷம் அதிகரிக்கும். அரசியல் லாபம் தரும். மரத்தொழில் லாபம் பெறுவீர். மாமூலான வளர்ச்சி சிறக்கும். வேலைபளு அதிகமாகும். அதிர்ஷ்ட வாய்ப்பு கூடும். மின்சாரத்தில் கவனம் தேவை. வரவுகள் அதிகரிக்கும். சொத்துப் பிரச்சனை தீர்வு ஏற்படும். வெளிநாட்டுப் பயணம் உருவாகும். வியாபாரம் அபிவிருத்தி ஏற்படும். பொறுப்புகள் கூடும். பொறாமைகள் விலகும். அரசாங்க அனுகூலம் கூடும். எதிலும் எச்சரிக்கை தேவை. ஆரோக்கியத்தில் கவனம் தேவை. காதல் எண்ணம் ஈடேறும். தொழில் வளர்ச்சி கூடும். நிதி நிலைமை சீராகும். தோற்றப் பொலிவு கூடும். விவசாயம் லாபம் தரும். புது நண்பரால் அதிகப்பலன் கூடும். பிளர்க்கு உதவும் மனப்பான்மை ஏற்படும். எண்ணிய காரியங்களில் பெருமிதத்துடன் செயல்படுவீர். ஆனந்த வாழ்வு உண்டாகும். சுபிட்ஷங்கள் பெருகும். குடும்ப பாசம் அதிகரிக்கும். இடமாற்றத்தால் பெரிய பலனை அடைவீர். உலோகத் தொழில் உயர்வு தரும். உறவினர் வருகையால் பலன் உண்டு. கல்விச்செலவு உண்டு. நண்பர்கள் கவனம் தேவை. பழிச்சொல் தேடி வரும். முயற்சியால் பலன் பெறுவீர். பொருளாதார முன்னேற்றம் உயரும். வீண் வம்பு விலகும். புதிய தொழில் அமையும். உடல் சோர்வு ஏற்படும். பணவரவு தாமதமாகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: வனதேவதை, அதிர்ஷ்ட எண்: 5,4,3,1
அதிர்ஷ்ட நிறம்: வாடாமல்லி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,R

Tasty தமிழா ™

தமிழ் மண்ணிலிருந்து நேரடியாக உலகெங்கும்...




இலங்கை மற்றும் தென்னிந்திய மசாலா பொருட்கள் பாரம்பரிய உணவு வகைகள்..

கனடாவில்
*Tasty* தமிழா தயாரிப்புகள் இங்கு கிடைக்கும்..

*MAHAANS PICK & PRESS OIL MILL INC*
*Organic Bulk Store & Water Filling Station*
*5635 Finch Ave East,*
*Unit 5, Scarborough M1B 5K9.*

Call: 416 293 4010

MAHAANS
PICK & PRESS OIL MILL INC

## HIGH SKY CANADA

- Visitor visas, Study visas, and Work Visas Applications
- Convert to WORK PERMIT from other status (Visitor)
- PR and Citizenship Application
- IELTS/ CELPIP/ CAEL Preparation
- Traffic Tickets and Pardon
- Tutoring for Students- ALL SUBJECTS, including TAMIL

CONTACT NOW!

Phone number/WhatsApp:
**+1 (437) 365-5668**
Email: highskycanada@gmail.com

# MORTGAGE
# FINANCIAL SOLUTIONS

- RESIDENTIAL
- CONSTRUCTION
- COMMERCIAL
- VACANT LAND
- INDUSTRIAL




## RESIDENTIAL- COMMERCIAL

- **Purchase**
  - Builder Purchase
  - MLS Purchase
  - Private Purchase
- **Refinance**
- **Renewal**
- **Equity line of Credit**

Contact Us Today

**NESAN**
*Subramaniam*

**416-908-5656**

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

1585 Markham Rd, Unit #406,
Toronto, ON. M1B 2W1
Canada

www.nesan.ca

**WE DEAL WITH ALL BANKS**

**Powered By**

MORTGAGE ALLIANCE
RightBroker=RightMortgage
Mortgage Agent level 1 Licence # M15001465
Mortgage Alliance, Brokerage #10330

Scotiabank · TD Canada Trust · National Bank · RFA · First National Financial LP · Manulife · Desjardins · MCAP · Home Trust · Equitable Bank · radius financial · RMG mortgages

மொன்றியல் நகரில்
உதயன் UTHAYAN
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள்,
பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும்
அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பழமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519

உதயன் சரவதேச
விருது விழா-2024
For Tickets and information:
416 732 1608 or 647 762 9512
Uthayan International
Awards Festival – 2024
Dance, Music and Awards Presentation
இசை, நடனம் அத்துடன் விருதுகள் வழங்கும் நிகழ்வு
மண்டபம்:-
The Estate Banquet
& Event Centre
430 Nugget Ave,
Scarborough, ON M1S 4A4
26th May, 2024
Sunday,
at 6.00 PM

Keith Sanmugathas
Broker
Sun Sanmugathas
Broker of Record
PROPERTY MAX
Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8
Office: 416-291-3000
416-666-9464
www.iselldreamcondos.ca
416-291-0005
www.iselldreamhomes.ca

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்

உதயம் 1461 | CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM | Friday April 5, 2024

# 33 ஆண்டுகள் துன்பங்களை மட்டுமே அனுபவித்த எம்மை, இனிமேலாவது நிம்மதியாக வாழ விடுங்கள்!

## தமிழ் அரசியல் கைதிகளான முருகன், றொபர்ட்பயஸ், ஜெயக்குமார் ஆகியோர் தெரிவிப்பு



இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் சந்தேகநபர்களாக கைதுசெய்யப்பட்டு மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக இந்தியாவில் சிறைப்படுத்தப்பட்டிருந்த நிலையில் விடுதலை செய்யப்பட்ட தமிழ் அரசியல் கைதிகளான முருகன், றொபர்ட்பயஸ், ஜெயக்குமார் ஆகிய மூவரும், தமது மூத்த சட்டத்தரணி புகழேந்தி அவர்களது வழித்துணையுடன் சுமார் 33 ஆண்டுகளுக்குப் பின் நேற்றையதினம் யாழ்ப்பாணத்திலுள்ள தமது பூர்வீக வாழ்விடங்களுக்கு வந்தடைந்துள்ளனர்.

இவர்களை, குரலற்றவர்களின் குரல் அமைப்பினுடைய ஒருங்கிணைப்பாளர் ஒருவர் நேரில் சென்று சந்தித்து, அவர்களது சுகநலன் மற்றும் இதர விடயங்கள் தொடர்பில் கேட்டறிந்துள்ளார்.

(உள்ளே விபரமான செய்தி 11ம் பக்கத்தில்)

# "ஈற்றோபிக்கோ " கிராமத்து வதனம்" பெண்கள் அமைப்பின் ஏற்பாட்டில் "சர்வதேச மகளிர் தினம் — 2024



கனடாவின் ஒன்றாரியோவின் "ஈற்றோபிக்கோ நகரில் சிறப்பாக இயங்கிவரும்" கிராமத்து வதனம்" பெண்கள் அமைப்பின் ஏற்பாட்டில் "சர்வதேச மகளிர் தினம்-2024 கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று மதியத்திற்குச் சற்று பின்னர் ஆரம்பமாகி மாலை வரை சிறப்பாக நடைபெற்றது.

அமைப்பின் தலைவி திருமதி கமலவதனா சுந்தா தனது சக அங்கத்தவர்களுடன் இணைந்து மேற்படி விழாவை சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார்.

இயல் இசை மற்றும் உரைகள் ஆகியன இடம்பெற்றன. அங்கு இடம்பெற்ற கலைநிகழ்ச்சிகளில் இளைய மற்றும் வளர்ந்த பெண்களின் பங்களிப்புக்கள் அதிகளவில் இருந்தன.

(உள்ளே விபரமான செய்தி 4ம் பக்கத்தில்)

# எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலுடன் அரசியலில் இருந்து ஓய்வு பெறவுள்ளதாக அமைச்சர் டக்ளஸ் அறிவிப்பு



எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலுடன் அரசியலில் இருந்து ஓய்வு பெறத் தீர்மானித்துள்ளதாத ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் கடற்தொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

நேற்று 04-04-2024 வியாழக்கிழமை யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற சமூர்த்தி உத்தியோகத்தர்களுடனான கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நான் ஆயுதப் போராட்டத்தில் இருந்து அரசியலில் நீரோட்டத்துக்கு பல்வேறு தடைகளைக் கடந்து வந்தவன்.

(உள்ளே செய்தி 16ம் பக்கத்தில்)

# இலங்கை "பகிடியா கதைப்பம்" புரடக்சன்ஸ் தயாரித்த "ஒரு ட்ரிப் போவம்" நகைச்சுவை நிறைந்த திரைப்படம் கனடாவில்

இலங்கையில் இயங்கிவரும் "பகிடியா கதைப்பம்" புரடக்ஷன்ஸ் தயாரித்த "ஒரு ட்ரிப் போவம்" என்ற நகைச்சுவை நிறைந்த திரைப்படம் எதிர்வரும் ஏப்ரல் 6ம் 7ம் திகதிகளில் கனடாவில் திரையிடப்படுகின்றது.

மேலதிக விபரங்களுக்கு 416 771 9286 என்னும் தொலைபேசி இலக்கத்தை அழைக்கவும்.

**trm8885@gmail.com** என்னும் மின்னஞ்சல் முகவரியிலும் தொடர்பு கொள்ளலாம்.

(உள்ளே செய்தி 13ம் பக்கத்தில்)

## Canadian Women Council and Etobicoke Tamil Seniors Association celebrated 'International Women's Day -2024



# கனடிய பெண்கள் கழகமும், ஈற்றோபிக்கோ தமிழ் மூத்தோர் அமைப்பும் கொண்டாடிய "சர்வதேச பெண்கள் தினம் — 2024

கடந்த பல வருடங்களாக கனடாவில் இயங்கிவரும். கனடிய பெண்கள் கழகமும் ,ஈற்றோபிக்கோ தமிழ் மூத்தோர் அமைப்பும் இணைந்து கொண்டாடிய "சர்வதேச பெண்கள் தினம்-2024. கடந்த சனிக்கிழமை 30-03-2024 அன்று ஈற்றோபிக்கோ நகரில் அமைந்துள்ள கிப்ளிங்க வடக்கும் சன சமூக நிலைய மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

விழாவிற்கு அமைப்புக்களின் தலைவி ரோகிணி கருன அவர்கள் தலைமை வகித்தார். சிறப்பு விருந்தினர்களாக ஒன்றாரியோ முதல்வர் டக்போர்ட் அவர்களின் தொகுதி அலுவலகத்தின் முகாமையாளர் மிசல் அவர்களும் கனடா உதயன் லோகேந்திரலிங்கம் அவர்களும் அழைக்கப்பெற்றிருந்தார்கள்

(உள்ளே செய்தி 4ம் பக்கத்தில்)

# கொழும்பில் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்க செயற்பாட்டாளர் வீ.எஸ். துரைராஜா பற்றிய 'ஒரு சமூக சிற்பியின் பட்டறிவு பகிர்வு' நூல் அறிமுக விழா



கொழும்பு கலை, இலக்கிய, ஊடக நண்பர்கள் வட்டம் இணைந்து ஏற்பாடு செய்த முன்னாள் கனடா தமிழ்க் கல்லூரி தலைவரும், சத்தியப்பிரமாண ஆணையாளருமான 'சமூக சிற்பி' வீ.எஸ். துரைராஜா அவர்களின் 'ஒரு சமூக சிற்பியின் பட்டறிவு பகிர்வு' என்ற நூலின் அறிமுக விழா கொழும்புத் தமிழ் சங்க விநோதன் மண்டபத்தில் ஞானம் சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் தி.ஞானசேகரன் தலைமையில் 02.04.2024 செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

கனடா வாழ் வீ. எஸ். துரைராஜா அவர்கள் உலகத்தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் தீவிரமான செயற்பாட்டாளர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

(உள்ளே செய்தி 13ம் பக்கத்தில்)